REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 செப்டெம்பர் 2 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 207 | Friday 02, September, 2022 | 16பக்கங்கள் | 40/-

## சிகரட் வகைகளின் விலைகள் அதிகரிப்பு

சிகரட் ஒன்றின் விலைகள் அவற்றின் வகைகளுக்கு ஏற்ப 3, 5, 10 மற்றும் 15 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று (1) முதல் இந்த விலை அதிகரிப்பு அமுலாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வற் வரி 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக சிகரெட்டின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு 2.9 பில்.அமெ.டொலர் கடன் வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம்

## இலங்கை அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும் தெரிவிப்பு

**பொருளாதார நெருக்கடியிலுள்ள இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் 48 மாதங்களுக்காக இந்த உடன்படிக்கை தயாரிப்பு**

இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் (Under the Extended Fund Facility) வழங்க சர்வதேச நாணய நிதியம் இணங்கியுள்ளது.

நிறைவேற்றுச் சபையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு இணங்க 48 மாதங்களுக்கு (04 ஆண்டுகள்) இந்த 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுடன் தொடர்புடைய நீடிக்கப்பட்ட வசதியை வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புக்கொண்டுள்ளது.

சர்வதேச நாணய நிதிய இலங்கைக்கான சிரேஷ்ட நடவடிக்கைகளின் தலைவர் பீட்டர் ப்ரூவர் மற்றும் நடவடிக்கைகளின் தலைவர் மசகிறோ நொசாகி ஆகியோரின் தலைமையில் இலங்கை மத்திய வங்கி தலைமையகத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்விடயம் தெரிய வந்துள்ளது.

இலங்கை வெளிநாட்டுக்கு செலுத்த வேண்டிய கடனை மீள் கட்டமைப்பு செய்வது, கடனாளிகள் மற்றும் கடன் உரிமையாளர்களுக்கு இடையே இந் நாட்களில் மேற்கொள்ளப்படும் ஒப்புதலை ஏற்படுத்துவதற்கான திட்டங்களின் நெகிழ்வு போக்கு மற்றும் திறன் தொடர்பாக தாம் கவனம் செலுத்தி வருவதாக ஊடகங்கள் முன்னிலையில் சர்வதேச நாணய நிதிய சிரேஷ்ட நடவடிக்கைகளின் தலைவர் பீட்டர் ப்ரூவர் தெரிவித்தார்.

இலங்கை முகம்கொடுத்துள்ள பாரிய பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து மீள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய கடன் மீள்கட்டமைப்பு மற்றும் அரச பிரிவுகளில் மேற்கொள்ளக்கூடிய சீர்திருத்த திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுவதற்கு அரசாங்கம் செயல்படும் விதம் தொடர்பாகவும் தங்களது நிதியம் அக்கறையுடன் உள்ளதாக ப்ரூவர் தெரிவித்தார்.

4 மாதங்களுக்கு முன்னர் வொஷிங்டனில் சந்தித்த சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் மற்றும் இலங்கை பிரதிநிதிகள் ஒகஸ்ட் 24ஆம் திகதியிலிருந்து 31 ஆம் திகதி வரை இந்நாட்டில் தங்கி இருந்து

06



# மக்களின் வாழ்க்கை தரத்தை பேண பொருளாதார அபிவிருத்தி முக்கியம்

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒன்றிணையுமாறு ஜனாதிபதி அழைப்பு

கடன் நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்து மக்களின் வாழ்க்கை தரத்தை பேணும் வகையில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது முக்கியமென சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட இணக்கப்பாடு தொடர்பான பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஏற்றுமதி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணையுமாறும் ஜனாதிபதி இதன்போது கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் ஊழலுக்கு எதிரான சட்ட கட்டமைப்பை அறிமுகப்படுத்துவது கடன் திட்டத்தின் முக்கிய நோக்கமென்றும் அவர் தெரிவித்தார்.

கடன் நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது மற்றும் அனைத்து சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தையும் உறுதி செய்வதற்குத்தேவையான நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியமானதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது தெரிவித்தார்.



ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (01) நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

06

## கேகாலை ஐ.ம.ச அலுவலகத்தில் பெண் சடலமாக மீட்பு

### தொகுதி அமைப்பாளர் கைது

**வசந்த ரோஹன**



ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை அலுவலகத்தில் பெண்ணொருவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை தொகுதி அமைப்பாளர் லக்ஷ்மன் திஸாநாயக்க நேற்று (1) பிற்பகல் கேகாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

06

முதலீட்டாளர்களை பாதுகாக்க

## ஜனாதிபதியால் எட்டு செயலணிகள் நியமிப்பு

சிறந்த முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி, முதலீட்டாளர்களைப் பாதுகாக்கும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் அரச மற்றும் தனியார் துறை தலைவர்களை உள்ளடக்கிய 08 செயலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

செயலணிகளை நிறுவும் நிகழ்வு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நேற்று (01) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

புதிய செயற்திட்டங்களை ஆரம்பித்தல்,

06

**புலம்பெயர் தொழிலாளர்களுக்கான மின்சார வாகனம் இறக்குமதி**

விசேட சுற்றுநிருபம் வெளியீடு

03

விமான நிலையத்தில் Hope Gate



**புலம்பெயர் தொழிலாளர்களுக்கான பிரத்தியேக நுழைவாயில் திறப்பு**

03



இலங்கைக்கான எகிப்து தூதுவர் மகேத் மொஸ்லே மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்குமான சந்திப்பு கடந்த 31 ஆம் திகதி அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பின் போது இருநாடுகளுக்கிடையேயான இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பாக இருவரும் விரிவான பேச்சு நடத்தினர்.

மனித பாவனைக்கு உதவாத

## 5,670 கிலோ மீன் பறிமுதல்!



நீர்கொழும்பு, கொச்சிக்கடை பகுதியில் மனித பாவனைக்கு உதவாத 5,670 கிலோ மீன்களை ஏற்றிச் சென்ற ஒருவர் லொறியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலாபத்திலிருந்து நீர்கொழும்பு நோக்கி துர்நாற்றம் கொண்ட மீன்களை ஏற்றிச் சென்ற லொறி தோப்புவ பாலத்தில் வைத்து கண்டு பிடிக்கப்பட்டது.

லொறியை பொலிஸார் சோதனையிட்ட போது 3.4 மில்லி யனுக்கும் அதிகம் பெறுமதியான மீன்கள் மனித பாவனைக்கு தகுதியற்றதாக காணப்பட்டுள்ளது.

கைதான லொறியின் சாரதி நீர்கொழும்பு,

06

## பயங்கரவாத தடைச் சட்ட பிரயோகம் நாட்டின் மீளெழுச்சியை பாதிக்கும்

### சபையில் எம்.ஏ. சுமந்திரன் எம்பி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடு தற்போதுள்ள நெருக்கடிக்குள் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தினால் அது நாட்டின் பொருளாதார மீள் எழுச்சியில் பாதிப்பையே ஏற்படுத்துமென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த நிலையானது வறிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதிப்பதற்கே வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய தர வர்க்கத்தினரை அமைதிப்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருவதாக தெரிவித்த அவர், முன்னுரிமை தேவைப்படுவோர் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்பதையும் சபையில் சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இடைக்கால வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

06

22 ஆவது திருத்தச் சட்டம்

## உயர் நீதிமன்றின் வியாக்கியானம் இவ்வார இறுதியில் பாராளுமன்றுக்கு

### நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் இந்த வார இறுதியில் பாராளுமன்றத்திற்கு கிடைக்குமென நீதி அயமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதனையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றத்தின் மூலம் முன்னெடுக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நாடு எதிர்கொண்டுள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலையில் அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமென்பதை வலியுறுத்திய அமைச்சர், அவ்வாறில்லாவிட்டால் அரசியல் கட்டமைப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படும் தவறான நிலைப்பாடு மேலும் வலுப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாவது

06

## பொதுமக்கள் கேள்விகளுக்கு டுவிட்டர் தளம் ஊடாக பதில்

### கோப் குழு தலைவர் ஹர்ஷ த சில்வா இன்று பதிலளிப்பார்



அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கலந்து கொள்ளும் நேரடிக் கலந்துரையாடல் இன்று (02) முற்பகல் 10.30 மணி முதல் 11.30 மணி வரை பாராளுமன்ற உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் (@ParliamentLK) ஊடாக நடைபெறவுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் நடவடிக்கைகள் தொடர்பான பொதுமக்களின் கேள்விகளை #LKaskMP ஊடாக முன்வைக்க முடியும் என்பதுடன், அன்றைய தினம் நேரடியாக இணைந்து கொண்டும் கேள்விகளை முன்வைக்க முடியும்.

மக்கள் பிரதிநிதிகளையும் பொதுமக்களையும் நேரடியாக தொடர்புபடுத்தும் வகையில் பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் இந்த நேரடி டுவிட்டர் கலந்துரையாடல் தொடரை ஏற்பாடு செய்துள்ளது.

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இலங்கைக்கு 200 மில். டொலர்

### அவசர கடனுதவியாக வழங்க இணக்கம்

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கான அவசர உதவியாக 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை அங்கீகரித்துள்ளது. தற்போது நடைபெற்று வரும் ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டங்களிலிருந்து நிதி மறு ஒதுக்கீடு செய்யப்படும். இத்தகைய உதவியின் நோக்கம் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் நோக்குடனேயே இந்நிதி உதவி வழங்கப்படுகிறது.

"தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் உணவுப் பாதுகாப்பின்மை இலங்கை மக்களை கடுமையாகப் பாதித்துள்ளது. இந்த உதவி ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு நேரடி நிதியுதவியை விரிவுபடுத்தும், வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் விவசாய உற்பத்தியை அதிகரிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சமூக பாதுகாப்பு அமைப்புகளை மேம்படுத்துமென தெற்காசியாவுக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிரேஷ்ட கல்வி நிபுணர் அசகோ மருயாமா தெரிவித்துள்ளார்.

06

நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க

## நம்பிக்கையை சமூகமயப்படுத்தும் நடவடிக்கைகள் அவசியமாகிறது

### சபையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு வாதப் பிரதிவாதங்களை விடுத்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, நம்பிக்கையை சமூகமயப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையிலிருந்து மீள்வதற்கான குறுகிய காலத் திட்டமாகவே வரவு செலவுத் திட்டம் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ளதென தெரிவித்த அவர், இந்த வரவு செலவுத் திட்டம் ஒரு முன்மாதிரியான திட்டமென்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர்

06

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# நபிமார்களும் தியாகிகளும் பொறாமை கொள்ளும் அடியார்கள்

நட்பு என்பது பல வகைப்படும். அவற்றில் இறைவனுக்காக நட்பு வைப்பது ஏராளமான சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இதனை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பல சந்தரப்பங்களில் எடுத்தியம்பியுள்ளார்கள்.

**'யார் அல்லாஹ்வுக்காக நேசிக்கிறாரோ, அல்லாஹ்வுக்காக வெறுக்கிறாரோ, அல்லாஹ்வுக்காகக் கொடுக்கிறாரோ, அல்லாஹ்வுக்காக மறுக்கிறாரோ அவர் ஈமானை பூரணப்படுத்திக்கொண்டார்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.**

(ஆதாரம்: அபூதாவூத்)

**மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், 'வேறொரு ஊரில் இருக்கும் தன் சகோதரனை சந்திப்பதற்காக ஒருவர் சென்றார். அவர் செல்லும் வழியில் ஒரு வானவரை அல்லாஹ் அவரிடத்தில் அனுப்பினான். அவ்வானவர் அவரிடத்தில் வந்த போது 'நீங்கள் எங்கே செல்ல நினைக்கிறீர்கள்?' எனக் கேட்டார். அதற்கு அவர், இந்த ஊரில் உள்ள எனது சகோதரனை (சந்திக்க) நாடிச் செல்கிறேன்' என்றார். 'உங்களுக்கு சொந்தமான எதையாவது அவர் உங்களுக்கு தர வேண்டியுள்ளதா?' என வானவர் அவரிடம் கேட்டார். அதற்கு அவர், 'இல்லை. கண்ணியமானவனும் சங்கையானவனுமான அல்லாஹ்விற்காக அவரை நேசிக்கிறேன்' என்றார். அவ்வானவர், 'நீங்கள் யாருக்காக அவரை நேசித்தீர்களோ அவன் உங்களை நேசிக்கிறான் என்பதை உங்களிடம் (கூற வந்த) அல்லாஹ்வின் தூதராவேன் நான்' என்று கூறியதாக குறிப்பிட்டுள்ளார்கள்.**

(ஆதாரம்: முஸ்லிம்)

மேலும் நபி (ஸல்) அவர்கள், **'என் விஷயத்தில் ஒருவருக்கொருவர் நேசித்துக் கொள்பவர்களுக்கும் என் விஷயத்தில் அமர்பவர்களுக்கும், என் விஷயத்தில் போட்டி போட்டுக் கொண்டு செலவு செய்பவர்களுக்கும் எனது பிரியம் உறுதியாகிவிட்டது என்று அல்லாஹ் கூறுகிறான்' எனவும் கூறியுள்ளார்கள்.** (ஆதாரம்: அஹ்மத்)

அதேநேரம், **'அல்லாஹ் மறுமை நாளில் எனக்காக நேசம் வைத்துக் கொண்டவர்கள் எங்கே? என்னுடைய நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத இந்நாளில் நான் அவர்களுக்கு எனது நிழலைத் தருகிறேன் என்று கூறுவான்' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.** (ஆதாரம்: முஸ்லிம்)

மேலும் **அல்லாஹ்வின் அடியார்களில் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் நபிமார்களும் அல்லர். இறைவனின் பாதையில் உயிர் நீத்தவர்களும் அல்லர். இவர்களுக்கு அல்லாஹ்விடத்தில் கிடைக்கும் அந்தஸ்தைப் பார்த்து நபிமார்களும் தியாகிகளும் பொறாமைப்படுவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது**

**மக்கள் 'அவர்கள் யார் என எங்களுக்குக் கூறுங்கள் அல்லாஹ்வின் தூதரே என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் தங்களுக்கிடையே இரத்த உறவிற்காகவோ, கொடுத்து வாங்கிக் கொள்ளும் செல்வங்களுக்காகவோ அல்லாமல் அல்லாஹ்வுக்காக ஒருவரையொருவர் நேசித்துக் கொண்டவர்களாவர். அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நிச்சயமாக அவர்களுடைய முகங்கள் ஒளியாக இருக்கும். அவர்கள் ஒளியின் மீது இருப்பார்கள். மக்கள் அஞ்சும் போது அவர்கள் அஞ்ச மாட்டார்கள். மக்கள் கவலைப்படும் போது அவர்கள் கவலைப்பட மாட்டார்கள் என்று கூறிவிட்டு அல்லாஹ்வின் நேசர்களுக்கு எந்த பயமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள் என்ற வசனத்தை படித்துக் காட்டினார்கள்.** (ஆதாரம்: அபூதாவூத்)

நாம் வசதி வாய்ப்புகளுடன் வாழும் போது நமக்கு ஏராளமான நண்பர்கள் கிடைப்பார்கள். ஆனால் கஷ்டங்கள் வரும் போது அனைவரும் ஓடிவிடுவார்கள். புயல் காற்று வரும் போது தான் உறுதியான கட்டடம் எது? உறுதியற்ற கட்டடம் எது? என்று நமக்கு தெரிகிறது. அது போல் நல்ல நண்பனை அறிய நமக்கு வரும் சோதனைகள் சிறந்த அளவுகோலாக பயன்படுகிறது.

**ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், தனக்கு விரும்புவதை தன்னுடைய சகோதரனுக்கு விரும்பாதவரை உங்களில் எவரும் ஈமான் கொண்டவராக ஆகமுடியாது என்று குறிப்பிட்டார்கள்.** (ஆதாரம்: புஹாரி)

மற்றொரு சந்தர்ப்பத்தில், **'ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு அநீதி இழைக்கவும் மாட்டான். அவனை (பிறரது அநீதிக்கு ஆளாகுமாறு) கைவிட்டு விடவும் மாட்டான். எவர் தன் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருக்கின்றாரோ அவரது தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கின்றான். எவர் ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குகின்றாரோ அவரை விட்டு அல்லாஹ்வும் மறுமை நாளின் துன்பங்களில் ஒரு துன்பத்தை நீக்குகின்றான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கின்றாரோ அவரது குறைகளை மறுமை நாளில் அல்லாஹ்வும் மறைக்கின்றான் என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.** (ஆதாரம்: புஹாரி)

ஆகவே நட்பின் சிறப்பையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து அதற்கேற்ப அதனை அமைத்துக் கொள்வதில் கவனமும் அக்கறையும் கொள்வது அவரவர் பொறுப்பாகும்.

அபூ மதீஹா...

# கடனை திருப்பி செலுத்துவதன் முக்கியத்துவம்

சமூக வாழ்வொழுங்கில் ஒருவர் மற்றொருவரிடம் உதவி ஒத்துழைப்புகள் மாத்திரமல்லாமல் கடன்கள் பெறுவதும் இயல்பானதாகும். அவ்வாறு பெற்றுக்கொள்ளும் கடன்களை உரிய நேர காலத்தில் திருப்பி செலுத்தி விட வேண்டும். அதுவே இஸ்லாமிய வழிகாட்டலாகும். அதனை இஸ்லாம் வலியுறுத்திப் போதித்துள்ளது.

அதாவது கடன் பெற்றுக்கொண்டு அதைத் திருப்பிச் செலுத்தாமல் அல்லது அதைத் திருப்பிக் கொடுப்பதற்குரிய செல்வத்தைச் சேர்க்காமல் இறந்து விடுவது சுவர்க்கத்திற்குச் செல்ல முடியாமல் போவதற்குக் காரணமாக அமைந்துவிடலாம். இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்கள்.

மனித உரிமைகளை மீறும் விடயத்தில் கடன் முக்கிய இடத்தைப் பெறுகிறது. வசதியில்லாத நிலையில் அல்லது முக்கியத் தேவைக்காக வாங்கும் கடன்களைப் பெரும்பாலானவர்கள் குறித்த காலத்தில் திருப்பிக் கொடுப்பதில்லை. சிலர் கடனை வாங்கி விட்டுத் தலைமறைவாகி விடுகின்றனர். இதனால் கடன் கொடுத்தவர்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகின்றனர். ஆனால் இச்செயல் சுவர்க்கத்தை அடைந்து கொள்ள முடியாத பயங்கர நிலையை ஏற்படுத்தி விடக்கூடியதாக உள்ளது.

நபி (ஸல்) அவர்கள் தம் வாழ்நாளில் கடன்பட்டவர் இறந்து போனால் அவருடைய கடனை திருப்பி செலுத்தக்கூடிய அளவுக்குச் செல்வத்தை விட்டுச் சென்றால் மட்டுமே ஜனாஸா தொழுகையை நடத்துவார்கள். இல்லையெனில் அன்னார் தொழுகை நடத்தாமல் நபித் தோழர்களை நடத்தச் செல்வார்கள்.

**ஒரு முறை நாங்கள் நபி (ஸல்) அவர்களிடம் அமர்ந்திருந்த போது ஜனாஸாவொன்று கொண்டு வரப்பட்டது. அப்போது, 'நீங்கள் இவருக்குத் தொழுகை நடத்துங்கள்' என்று நபி (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. அப்போது நபி (ஸல்) அவர்கள், 'இவர் கடனாளியா?' என்று கேட்ட போது நபித் தோழர்கள் 'இல்லை' என்றனர். 'ஏதேனும் (சொத்தை) இவர் விட்டுச் சென்றிருக்கிறாரா?' என்று நபி (ஸல்) அவர்கள் கேட்ட போது 'இல்லை' என்றனர். பின்னர் அவருக்காக நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள்.**

**அதன் பின்னர் மற்றொரு ஜனாஸா கொண்டு வரப்பட்ட போது, 'அல்லாஹ்வின் தூதரே! இவருக்குத் தொழுகை நடத்துங்கள்' என்று நபித் தோழர்கள் கூற, நபி (ஸல்) அவர்கள், 'இவர் கடனாளியா? என்று வினவினார்கள். அதற்கு 'ஆம்' என்று பதிலளிக்கப்பட்டது. அச்சமயம் நபியவர்கள் 'இவர் ஏதேனும் விட்டுச் சென்றிருக்கிறாரா?' என்று வினவ, 'மூன்று தங்கக் காசுகளை விட்டுச் சென்றிருக்கிறார்' என்று ஸஹாபாக்கள் கூறினர். அதனைத் தொடர்ந்து நபி (ஸல்) அவர்கள் அவருக்கும் ஜனாஸாத் தொழுகை நடத்தினார்கள்.**

**பிறகு மூன்றாவது ஜனாஸாவொன்று கொண்டு வரப்பட்டது. அச்சமயம் நபிகளாரிடம் 'நீங்கள் தொழுகை நடத்துங்கள்' என்று நபித் தோழர்கள் கூறினர். 'இவர் எதையேனும் விட்டுச் சென்றிருக்கிறாரா?' என்று நபி (ஸல்) அவர்கள் வினவ, நபித் தோழர்கள் 'இல்லை' எனப் பதிலளித்தனர்.**

**அதனைத் தொடர்ந்து 'இவர் கடனாளியா?' என்று அன்னார் வினவ, 'மூன்று தங்கக் காசுகள் கடன் வைத்திருக்கிறார்' என்று நபித் தோழர்கள் கூறினர். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'உங்கள் தோழருக்கு நீங்களே தொழுகை நடத்துங்கள்' என்றார். அப்போது அபூகதாதா (ரலி), 'இவரது கடனுக்கு நான் பொறுப்பு, அல்லாஹ்வின் தூதரே! இவருக்குத் தொழுகை நடத்துங்கள்' என்று கூறியதும் நபி (ஸல்) அவர்கள் அவருக்குத் தொழுகை நடத்தினார்கள்' என்று ஸலமா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.** (ஆதாரம்: புஹாரி)

இந்த நபிமொழியின் படி அனைவருக்கும் தொழுகை நடத்திய நபி (ஸல்) அவர்கள், கடனாளிக்கு மாத்திரம் தொழுகை நடாத்த மறுத்துள்ளார்கள் என்றால் கடனைத் திருப்பிச் செலுத்துவது எவ்வளவு தூரம் முக்கிய காரியம் என்பது தெளிவாகிறது. கடனைத் திருப்பி செலுத்தாமல் இருப்பதும், இறந்து விடுவதும் பயங்கரமானதும் பாதிப்புகள் நிறைந்ததுமான செயல் என்பதைப் புரிந்து கொள்ளவும் முடிகிறது.

மேலும் ஒருவர் கடன் வாங்கி விட்டு அதைத் திருப்பிச் செலுத்தாமல் இறந்து விட்டால் கடன் கொடுத்தவர் மறுமை நாளில் இறைவனிடம் முறையிடும் போது கடன் வாங்கியவரின் நன்மைகளை எடுத்துக் கடன் கொடுத்தவருக்கு வழங்கப்படும்.

**நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை தம் தோழர்களிடம் 'திவாலாகிப் போனவன் என்றால் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார்கள். அதற்கு ஸஹாபாக்கள், 'யாரிடம் வெள்ளிக் காசோ பொருட்களோ இல்லையோ அவர் தான் எங்களைப் பொறுத்த வரை திவாலானவர்' என்றனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'என் சமுதாயத்தில் திவாலாகிப் போனவர் ஒருவராவார். அவர் மறுமை நாளில் தொழுகை, நோன்பு, ஜகாத் ஆகியவற்றுடன் வருவார்.**

**(அதே நேரத்தில்) அவர் ஒருவரைத் திட்டியிருப்பார். ஒருவர் மீது அவதூறு கூறி இருப்பார். ஒருவரது பொருளை (முறைகேடாகப்) புசித்திருப்பார். ஒருவரது இரத்தத்தைச் சிந்தியிருப்பார். ஒருவரை அடித்திருப்பார். ஆகவே, அவருடைய நன்மைகளிலிருந்து சில இவருக்குக் கொடுக்கப்படும். இன்னும் சில அவருக்குக் கொடுக்கப்படும். அவருடைய நன்மைகளிலிருந்து எடுத்துக் கொடுப்பதற்கு முன் நன்மைகள் தீர்ந்து விட்டால் (அவரால் பாதிக்கப்பட்ட) மக்களின் பாவங்களிலிருந்து சில எடுக்கப்பட்டு இவர் மீது போடப்படும். பிறகு அவர் நரக நெருப்பில் தூக்கியெறியப்படுவார். (அவரே திவாலாகிப்போனவர்)' என்று கூறினார்கள்.** (ஆதாரம்: முஸ்லிம்)

கடன் வாங்கியவர் அதை உரிய நேரத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டும். அதை மீறினால் மறுமை நாளில் எவ்வளவு பெரிய நன்மைகளுடன் இவர் வந்திருந்தாலும் அவருடைய நன்மைகள் கடன் கொடுத்தவருக்கு வழங்கப்பட்டு இவருக்கு ஒன்றும் இல்லாத நிலை கூட ஏற்படலாம். இதனால் நரகத்திற்குச் செல்லும் நிலை ஏற்படலாம். கடன் வாங்குவதன் விளைவாகப் பொய் சொல்ல வேண்டிய நிலை ஏற்படலாம். அது இன்னொரு பாவத்திற்கு இட்டுச் செல்லும். அதனால் தான் **நபி (ஸல்) அவர்கள் கடனை விட்டும் அதிகமதிகம் இறைவனிடம் பாதுகாப்புத் தேடுவார்கள். அன்னார், ஒவ்வொரு தொழுகையிலும் துஆச் செய்யும் போது, 'இறைவா! பாவத்திலிருந்தும் கடனிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்' என்று பிரார்த்தனை செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். (இதைச் செவியுற்ற) ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம், 'அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் கடன்படுவதிலிருந்து இவ்வளவு அதிகமாகப் பாதுகாப்புத் தேடுவதற்குக் காரணம் என்ன?' என்று வினவ, அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'மனிதன் கடன்படும் போது பொய் பேசுகிறான். வாக்குறுதி தந்து (அதற்கு) மாறு செய்கிறான்' என்று பதிலளித்தார்கள்.**

(ஆதாரம்: புஹாரி)

ஆகவே கடன் வாங்கும் போது அதனை உரிய நேர காலத்தில் திருப்பி செலுத்தில் அதிக கவனமும் சிரத்தையும் செலுத்த வேண்டும். அதனை இறை கட்டளையாகவும் உயரிய அமலாகவும் கருதி செயற்படுவது அவசியம். அது இறையருளையும் கருணையையும் பெற்றுத்தரக்கூடிய காரியமாக அமையும்.

அப்துர் ரஹ்மான்...

# தர்மம் செய்வோம்!

மக்கள் மத்தியில் எல்லோரும் ஒரே மட்டத்தில் பொருளாதார வசதி படைத்தவர்களாகவோ செல்வம் படைத்தவர்களாகவோ இல்லை. ஏழைகள், குறைந்த வருமானம் பெறுபவர்கள், பணக்காரர்கள், செல்வச் செழிப்பு மிக்கவர்கள் என்றபடி பொருளாதார ரீதியில் பல்வகைமை மிக்கவர்களை உள்ளடக்கியதாகவே சமூகம் காணப்படுகிறது.

அதனால் கஷ்டப்படுபவர்களுக்கும் ஏழை, எளியவர்களுக்கும் தேவையுடையோருக்கும் உதவி, ஒத்துழைப்புகளை நல்க வேண்டும். அது இஸ்லாத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இது தொடர்பில் அல் குர்ஆன், வழங்கப்படும் தர்மம் மறுமையில் அல்லாஹ்வால் பல மடங்கு உயர்த்தப்பட்டு மிகப் பெரிய கூலியாக வழங்கப்படும். **தமது செல்வங்களை அல்லாஹ்வின் பாதையில் செலவிடுவோருக்கு உதாரணம் ஒரு தானியம். அது ஏழு கதிர்களை முளைக்கச் செய்கிறது. ஒவ்வொரு கதிரிலும் நூறு தானியங்கள் உள்ளன. தான் நாடியோருக்கு அல்லாஹ் இன்னும் பன்மடங்காகக் கொடுக்கிறான். அல்லாஹ் தாராளமானவன், அறிந்தவன். (அல்குர்ஆன் 2:261)** என்று குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், **யார் முறையான சம்பாத்தியத்தில் ஒரு பேரீச்சம் பழத்தின் மதிப்புக்கு தர்மம் செய்தாரோ அல்லாஹ் பரிசுத்தமானவற்றைத் தவிர வேறெதையும் ஏற்றுக்கொள்வதில்லை அதை நிச்சயமாக அல்லாஹ் தனது வலது கரத்தால் ஏற்றுக்கொண்டு பிறகு நீங்கள் உங்களின் குதிரை குட்டியை வளர்ப்பது போன்று அதன் நன்மையை மலைப்போல் உயரும் அளவுக்கு வளர்த்து விடுவான் என்று கூறினார்கள்.** (ஆதாரம்: புஹாரி)

அதனால் நாம் செய்யும் தர்மப்பொருட்களில் பெரும்பாலானவை, யாசகம் கேட்கும் நிலையில் அல்லது அதை பெறக்கூடியவனின் நிலையில் இருந்து எதை நாம் வாங்க மாட்டோமோ அதுவாகத்தான் இருக்கும். இதுமாதிரியான பொருளை தர்மம் செய்வது கூடாது. நாம் செய்யும் தர்மப் பொருட்கள் ஓரளவாவது நல்ல பொருட்களாக இருக்க வேண்டும். மனிதன் சாப்பிட முடியாத அளவு அல்லது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பொருட்களை தர்மம் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அதனால் தான் அல் குர்ஆன், **'நீங்கள் விரும்புவதை (நல்வழியில்) செலவிடாத வரை நன்மையை அடைந்து கொள்ளவே மாட்டீர்கள். நீங்கள் எப்பொருளை (நல் வழியில்) செலவிட்டாலும் அல்லாஹ் அதை அறிந்தவன். (3:92)** என்று குறிப்பிட்டிருக்கின்றது.

இந்த வசனம் இறங்கியவுடன் **அபூதல்ஹா (ரழி) அவர்கள், தனக்கு மிகவும் விருப்பமான பைருஹா என்ற தோட்டத்தை அல்லாஹ்வின் பாதையில் தர்மம் செய்தார்கள்**

(ஹதீஸ் சுருக்கம்) ஆதாரம்: புஹாரி)

**'நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் சம்பாதித்ததில் தூய்மையானவற்றையும், பூமியிலிருந்து உங்களுக்கு நாம் வெளிப்படுத்தியதிலிருந்தும் (நல் வழியில்) செலவிடுங்கள். கண்ணை மூடிக் கொண்டே தவிர எதை வாங்கிக் கொள்ள மாட்டீர்களோ அத்தகைய மட்டமான பொருளைச் செலவிட நினைக்காதீர்கள். அல்லாஹ் தேவையற்றவன். புகழுக்குரியவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.**

**(அல் குர்ஆன் 2:267)**

**உங்களுக்கு மரணம் வருவதற்கு முன் நாம் உங்களுக்கு வழங்கியவற்றிலிருந்து (நல் வழியில்) செலவிடுங்கள்! 'இறைவா! குறைந்த காலம் வரை எனக்கு நீ அவகாசம் அளித்திருக்கக் கூடாதா? தர்மம் செய்து நல்லவனாக ஆகியிருப்பேனே என்று அப்போது (மனிதன்) கூறுவான். (அல் குர்ஆன் 63 : 10)**

நபி(ஸல்) அவர்கள், **'ஒரு பேரீச்சம் பழத்தின் துண்டளவேனும் (தர்மம் செய்வதை) கொண்டு நீங்கள் உங்களை நரகை விட்டும் காத்துக்கொள்ளுங்கள்!** என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இவ்வாறு தர்மம் வழங்குவதன் முக்கியத்துவத்தையும் சிறந்த பொருட்களை தர்மமாக வழங்குவதன் அவசியத்தையும் அல் குர்ஆனும் நபிமொழிகளும் பல இடங்களில் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளன.

ஒரு மனிதன் தான் செய்யும் சில தவறுகளின் காரணத்தினால் மறுமையில் நரகத்திற்கு செல்லக்கூடிய அவல நிலை ஏற்படும். அந்த நேரத்தில் அவன் தன்னை நரகைவிட்டும் காத்துக்கொள்வதற்கு தர்மத்தை ஒரு துணைச்சாதனமாக அல்லாஹ் ஆக்கி வைத்திருக்கிறான். ஒரு பேரீச்சம் பழம் துண்டுகூட சில நேரங்களில் நம்மை நரகை விட்டு காப்பாற்றும் கேடயமாக அமைந்து விடும்.

எனவே அற்பானது என்று எண்ணி தர்மம் செய்யாமல் இருந்துவிடாமல் நம்மால் முடிந்த அளவு தர்மம் செய்து மறுமையில் அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வோம்.

மின்ஸார் இப்றாஹிம்...

# ஸபர் மாதத்தை அறிந்து கொள்வோம்!

இஸ்லாமிய நாட்காட்டியின் இரண்டாவது மாதமே ஸபர் ஆகும். இது முஹர்ரம் மாதத்தை அடுத்து வரக்கூடியதாகும்.

இம்மாதம் தொடர்பில் சில தவறான கருத்துகளும் நம்பிக்கைகளும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றன. அதாவது இது ஒரு பீடை மாதம். அதனால் இம்மாதத்தில் திருமண வைபவங்கள் உள்ளிட்ட மகிழ்ச்சி அளிக்கக்கூடிய நிகழ்வுகளை நடாத்துவதைத் தவிர்த்துக் கொள்கின்றனர்.

ஆனால் அல் குர்ஆனும் நபிமொழிகளும் இந்நம்பிக்கை முற்றிலும் ஆதாரமற்றது என்பதையும் அல் குர்ஆன் அருளப்பட முன்னர் அரேபியர்களிடம் காணப்பட்ட மூட நம்பிக்கைகளின் ஒரு பகுதி என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளன.

இது தொடர்பில் அல் குர்ஆன், **'நிகழும் நிகழ்ச்சியெல்லாம் அல்லாஹ்வின் அனுமதி கொண்டேயல்லாமல் (வேறு) இல்லை. மேலும், எவர் அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்கிறாரோ, அவருடைய இருதயத்தை அவன் நேர்வழியில் செலுத்துகிறான். அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிந்தவன்.' (அத் தஃகாபுன்: 11)** என்று குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், **'தொற்றுநோய் (தானாகப் பரவுதல்) என்பது கிடையாது. (பறவை) சகுனம் என்பதும் கிடையாது. ஆந்தை சகுனம் என்பதும் கிடையாது. 'ஸபர்' என்பதும் கிடையாது' என்று கூறியதாக அபூ ஹுரைரஹ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.**

(ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி)

'ஸபர்' என்பதை சில உலமாக்கள் ஸபர் மாதப் பீடை என விளக்கம் கூறியுள்ளனர். ஆனால் அறியாமைக்கால (ஜாஹிலிய்யா) நாட்களில் ஆதிக்கம் செலுத்திய தவறான கொள்கைகளையும் மூட நம்பிக்கைகளையும் இஸ்லாம் தெளிவாக மறுத்துள்ளது.

அந்த வகையில் முஹம்மது (ஸல்) அவர்கள் கதீஜா (ரழி) அவர்களை திருமணம் செய்து கொண்டதும் நபி (ஸல்) அவர்கள் தம் மகளான பாத்திமா (ரழி) அவர்களுக்கு அலி (ரழி) அவர்களை ஹிஜ்ரி 02 ஆம் ஆண்டில் திருமணம் முடித்து வைத்ததும் இம்மாதத்தில் இடம் பெற்றுள்ளமை நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

அதனால் இறை விசுவாசிகளான நாம் ஸபர் மாதம் குறித்த அறியாமைக் கால மூட நம்பிக்கைகளைத் தவிர்ந்து கொள்வதில் அக்கரை கொள்வோம்.

அஷ்ஷெய்க்
எம்.எச்.எம் புர்ஹான் (பஹ்ஜி)
செயலாளர் ஹிலால் பிரிவு,
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா

நாட்டின் மழையுடனான காலநிலை

## ஆறுகளின் நீர் மட்டம் அதிகரிப்பு; தாழ்நிலப்பரப்பில் வெள்ள அபாயம்

08 மாவட்டங்களுக்கான மண்சரிவு அபாயம் நீடிப்பு



நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக பல ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

களு கங்கை, கிங் கங்கை மற்றும் நில்வலா கங்கை போன்ற ஆறுகளின் நீர் மட்டம் தற்போது அதிகரித்து வருவதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

களு கங்கையைச் சுற்றியுள்ள தாழ்நிலங்களிலும் சிறிய வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக, 08 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட 06

## பாதுகாப்பு தரப்பின் ஒத்துழைப்புடன் 07 மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு

திட்டம் நேற்று முதல் ஆரம்பம்



டெங்கு ஒழிப்புக்காக விஷேட வேலைத்திட்டம் நேற்று (01) முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

டெங்கு அபாயமுள்ள 07 மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

60 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்பையும் இதற்கு பயன்படுத்தவுள்ளதாக சமூக வைத்திய அதிகாரி மருத்துவர் இந்திக்க வீரசிங்க தெரிவித்தார். 06

## புலம்பெயர் தொழிலாளர்களுக்கான மின்சார வாகனம் இறக்குமதி

விசேட சுற்றுநிருபம் வெளியீடு

வெளிநாட்டு புலம்பெயர் தொழிலாளர்கள் பணம் அனுப்புவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மின்சார வாகனத்தை இறக்குமதி செய்ய அனுமதிக்கும் சுற்றறிக்கையை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு வெளியிட்டுள்ளது.

இம் மாத ஆரம்பத்தில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் முன்வைக்கப்பட்ட



பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இந்த நடவடிக்கையின் மூலம், 50 வீதம் அல்லது அதற்கும் குறைவான மின்சார வாகனத்தை இறக்குமதி செய்யும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்கப்படுகிறது.

ஒருவர் 3,000 அமெரிக்க டொலருக்கு மேல் பணப்பரிமாற்றம் செய்திருந்தால், மின்சார மோட்டார் சைக்கிளை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும்.

இதற்கிடையில், 20,000 அமெரிக்க டொலர்களுக்கு மேல் பணப்பரிமாற்றம் செய்தவர்கள், 06

சீன உரக்கப்பல் விவகாரம்:

## உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

சட்ட மாஅதிபரின் ஆலோசனை பெறப்படுமென்கிறார் அமைச்சர் அமரவீர

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சீன உரக் கப்பல் விவகாரம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, அது தொடர்பில் சட்ட மாஅதிபரின் யோசனைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சீன உர கப்பலுக்கு செலுத்திய 6.9 மில்லியன் டொலரை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் அல்லது அதற்குப் பதிலாக இரசாயன உரத்தை பெற்றுக் கொள்வதற்கும் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் தோல்வியடைந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர், உரக் கப்பல் விவகாரம் தொடர்பில் சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்காக சட்ட மாஅதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் தெரிவித்தார். 06

IMF வழங்கவுள்ள 2.9 பில். டொலர் கடன் உதவி

## பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான மைல் கல்லாக அமையும்

சபையில் பிரதமர் தினேஷ் குணவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியத்துக்கும் அரசாங்கத்துக்குமிடையில் முன்னெடுக்கப்பட்ட பேச்சு வார்த்தையையடுத்து இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை கடனாக வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளமை அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த இணக்கப்பாடு அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் முக்கிய மைல்கல்லாகவே அமைந்



துள்ளதெனவும் பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூட்டொன்றை முன்வைத்து உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பேச்சுவார்த்தையையடுத்து 48 மாதங்களுக்கு 06

மரணத்திலும் இணைபிரியாத தம்பதி

## கணவன் இறந்த சில மணி நேரத்தில் மனைவி உயிரிழப்பு

கண்டி, குருதெனியவில் சம்பவம்



திருமணமாகி 60 வருடங்களான ஒரு தம்பதி ஒரே நாளில் சில மணி நேரங்களிலேயே உயிரிழந்த சம்பவமொன்று கண்டியில் இடம்பெற்றுள்ளது. குருதெனிய, தம்பாவெல பிரதேசத்திலேயே இச் சம்பவம் பதிவாகியுள்ளது.

88 வயதான ஆர்.ஏ.எஸ்.ரணசிங்க மற்றும் அவரது 81 வயதான மனைவி ஏ.ஜி. பண்டாரநாயக்க ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இராணுவத்தில் சேவையாற்றி 60 வருடங்களாக மனைவியுடன் வாழ்ந்து வந்த இவர் நேற்று முன்தினம் (30) காலை உயிரிழந்தார். கணவரின் மரணச் செய்தி 06

## ஐ.மக்கள் சக்தியை துண்டாட சூழ்ச்சி எம்மில் எவரும் சிக்கப் போவதில்லை

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய மக்கள் சக்தியை துண்டாட முயற்சிக்கும் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அந்த சூழ்ச்சிகளுக்குள் எமது தரப்பினர் எவரும் சிக்க மாட்டார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை செவ்வாய்க்கிழமை முன்வைத்ததுடன் தற்போதைய பொருளாதார நிலவரம் தொடர்பில் மத்திய வங்கி



ஆளுநர் புதன்கிழமை கருத்துக்களை முன்வைத்தார். அதற்கிணங்க நாட்டின் உண்மையான நிலவரம் மத்திய வங்கி ஆளுநரிடமே உள்ளது. ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்டத்தில் குறைபாடுகள் பல உள்ளன. தற்போதுள்ள பிரச்சினைகள் பலவற்றுக்கு அதில் தீர்வுகள் முன் வைக்கப்படவில்லை.

இலட்சக் கணக்கில் 06

விமான நிலையத்தில் Hope Gate

## புலம்பெயர் தொழிலாளர்களுக்கான பிரத்தியேக நுழைவாயில் திறப்பு



பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான பிரத்தியேக நுழைவாயில் திறக்கப்பட்டுள்ளது. "Hope Gate" என்று பெயரிடப்பட்ட இந்த விசேட நுழைவாயில் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு தனிப்பட்ட உதவிகளை வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அதிகாரிகளால் விமான 06

## பதுளை அநாதை இல்லத்துக்கருகே கைவிடப்பட்ட குழந்தை மீட்பு

தாயாக மாறிய பெண் பொலிஸ் அதிகாரி



பதுளையில் அநாதை இல்லத்துக்கருகே கைவிடப்பட்ட ஒருமாதக் கைக்குழந்தையொன்று கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். 06

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 7 வயது சிறுவன் படுகாயம்

அதி தீவிர பிரிவில் சிகிச்சை

கூரிய ஆயுதத்தால் 7 வயது சிறுவன் ஒருவன் குத்தப்பட்டு பாரிய காயங்களுடன் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றான்.

தனது தந்தைக்கு தொலைபேசி மீள் நிரப்பும் அட்டையொன்றை கொள்வனவு செய்ய கடைக்குச் சென்ற சிறுவன் ஒருவனே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளான்.

நேற்று முன்தினம் (31) மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கந்தகெட்டிய 06






### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 17ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 05

### குறள் தரும் சிந்தனை



அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்

*அவையின் தன்மை அறியாமல் சொற்களைப் பயன்படுத்துகிறவர்களுக்கு அந்தச் சொற்களின் வகையும் தெரியாது; பேசும் திறமையும் கிடையாது.*

## சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கம் தந்துள்ள நம்பிக்கை!

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியைப் பொறுத்தவரை இந்த முடிவானது நிம்மதி தருகின்றது. எமது நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கப் போகின்ற பொருளாதார உதவியானது பெரிதும் உதவியாக அமையுமென்பதில் ஐயமில்லை.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடன் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை பேணும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது முக்கியமானது என்றும் சர்வதேச நாணய நிதிய ஊழியர் மட்ட இணக்கப்பாடு தொடர்பான பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றிணையு மாறும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தி ருந்தார். ஜனாதிபதியின் வேண்டுகோளையேற்று அனைத்துக் கட்சிகளும் தங்களுக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைவதே இன்றைய நிலையில் அவசியமானதாகும். இன்றைய சந்தர்ப்பத்தை அரசியல் கட்சிகள் புறக்கணிக்குமானால் எமது நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுப்பது இயலாத காரியமாகிப் போய் விடலாம்.

ஊழலுக்கு எதிரான சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துவது கடன்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்றும் கடன் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது மற்றும் அனைத்து சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தையும் உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியமானது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருந்தார். அங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, இலங்கை வரலாற்றில் இது முக்கியமான படிக்கல்லாகுமெனத் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் நாட்டின் இன்றைய நிலைமையானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தவரை முன்னொருபோதுமில்லாதவாறு நாடு பொருளாதாரத்தில் அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி மூலமே நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுக்க முடியுமென பொருளாதார நிபுணர்கள் பலர் கருத்துத் தெரிவித்திருந்தனர். ஆனாலும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தி நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதில் சாதகமான நிலைமை ஏற்படாமலிருந்தது. அந்த முயற்சியானது இழுபறி நிலையிலேயே இருந்து வந்தது.

இந்நிலையில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட பெரு முயற்சியின் விளைவாகவே சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைப்பதில் தற்போது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. எமது நாட்டின் அண்மைக்கால பொருளாதார வீழ்ச்சியைப் பொறுத்தவரை நாடு மீண்டெழுவதற்கான அறிகுறியாகவே இதனைக் கருத வேண்டியுள்ளது. அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்துக்குக் கிடைத்துள்ள வெற்றியாகவும் இதனைக் கொள்ளலாம்.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடு குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சமூகக் கட்டமைப்பை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், பாதிக்கப்படக் கூடிய குழுக்களைப் பாதுகாத்தல் என்பவற்றை முன்னெடுக்கும் அதேநேரம், போட்டித் தன்மை மிகுந்த ஏற்றுமதியை அடிப்டையாகக்கொண்ட தொழில் துறையாக நாட்டை மேம்படுத்துவதை புதிய பொருளாதார யுகமாக கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

"இதன் ஆரம்பம் கடிமானதாக இருக்கும், ஆனால் நாம் அதனையே பின்தொடர்ந்தால் எம்மால் இன்னும் முன்னேற முடியும். இப்போதைக்கு எது தேவையோ அதுவே எமது அர்ப்பணிப்பாக இருத்தல் வேண்டும். எனினும் இங்கு நாம் எமது இலக்கை அடைவதை மட்டும் குறிக்கோளாக கொண்டிராமல் அதற்கு அப்பாலும் செல்ல வேண்டும்" என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை தனது கடன்களைக் குறைப்பதற்கும், முடிந்தால் கடன்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் இது ஒரு தொடக்கமாக இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதிகளை 48 மாத காலப்பகுதிக்குள் வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. முழுமையான பொருளாதார ஸ்திரத்தன்மையை மீள ஏற்படுத்துதல், கடன் நிலைத்தன்மையை மறுசீரமைத்தல், நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல், பாதிக்கப்படக் கூடிய குழுக்களைப் பாதுகாத்தல், ஊழலை ஒழிப்பதற்கு தேவையான கட்டமைப்பு மாற்றங்களை நோக்கி நகர்வதன் மூலம் இலங்கையை முன்னேற்றுதல் என்பன இந்த கடன் வசதியின் நோக்கமாகும்.

இவ்விடயத்தில் அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் நல்லிணக்கப்பாடுமே பிரதானமாகின்றன. எமது நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீளக்கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு செயலாற்றுவதே இன்றைய நிலையில் அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# வேலைகளற்ற அரசசேவையாளர்களை முகாமைத்துவம் செய்வதற்கு டிஜிட்டல் தலைமைத்துவ எண்ணக்கரு



**டிஜிட்டல் சந்தைப்படுத்தல் ஆலோசகர் புலஸ்தி வன்னிஆராச்சி முன்வைக்கும் ஆலோசனை**

வேலைகள் அற்ற அரச சேவையாளர்களை முகாமைத்துவம் செய்வதற்கு டிஜிட்டல் தலைமைத்துவ எண்ணக்கருவை பயன்படுத்துமாறு டிஜிட்டல் சந்தைப்படுத்தல் ஆலோசகர் புலஸ்தி வன்னிஆராச்சி கூறியுள்ளார்.

"எந்தவொரு வேலையும் இல்லாத அரச பணியாளர்கள் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அரச சேவையினுள் காணப்படுவதாக அரச முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயதுன்ன கூறுகிறார். 16 இலட்சத்துக்கு அண்மித்த அரச பணியாளர்கள் உள்ளார்கள் எனில், அவர்களை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு அரச அதிகாரிகளுக்கே உள்ளது.

முறைசாரா அரசியல் நியமனங்களூடாக அரச சேவைக்கு உள்வாங்கப்பட்டவர்களானாலும், அவர்களை வீட்டுக்கு அனுப்ப முடியாது. அவர்களும் இந்நாட்டின் மக்களே. இதற்காக பொறுப்புக்கூற வேண்டியது அரசியல் அதிகாரமும், அரச சேவையில் இவ்வாறான நியமனத்தை ஏற்படுத்திய அரச அதிகாரிகளுமாகிய இரண்டு பிரிவினருமேயாவர். மீண்டும் பணியாளர்களை இணைத்துக்கொள்வதை மட்டுப்படுத்துவதுடன், இருப்பவர்களை முகாமைத்துவம் செய்வதற்கு டிஜிட்டல் தலைமைத்துவ எண்ணக்கருவை பயன்படுத்த முடியும்.

தேவையற்ற இடங்களிலுள்ள பணியாளர்களை, பணியாளர்கள் அற்ற இடங்களுக்கு மாற்றம் செய்ய வேண்டும். சில நிறுவனங்களை சரியான புரிதலுடன் நோக்கினால் புதிய வேலைவாய்ப்பு பிரிவுகளை ஏற்படுத்த முடியும். அபிவிருத்தி அடைந்த நாடுகளிலுள்ள பல நிறுவனங்கள் டிஜிட்டல் தலைமைத்துவ முறையை பயன்படுத்துகின்றனர். எமது நாட்டிலுள்ள அதிகாரிகளும் இந்த முறைகளை கற்க வேண்டும். யாரும் செய்யும்வரை பார்த்துக் கொண்டு இருக்காமல் தாமாகவே இயங்குவது முக்கியமானதாகும்.

தமது நிறுவனத்தின் மேல் நிலையிலிருந்து கீழ்நிலை வரையிலான அதிகாரிகளை இதற்காக ஈடுபடுத்துவதும், ஊக்கப்படுத்துவதும் நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகும். அரசியல் அதிகாரத்தினால் மாத்திரம் இதனை செய்ய முடியாது. ஏனைய பல அரசியல்வாதிகளைப் போன்று அரச அதிகாரிகளுக்கும் டிஜிட்டல் முறை தொடர்பான புரிதல் இல்லை. ஒரு வசனத்தை பிடித்துக் கொண்டு எங்கோ ஓடும் நிலைமையே உள்ளது. தெரியாது என்றால் தெரிந்தவர்களிடம் கற்றுக் கொள்வது பெறுமதியானதாகும்." இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

டிஜிட்டல் தலைமைத்துவத்தினுள் உள்ள அறிகுறிகளாக Communication தொலைத்தொடர்பு, Vision நோக்கு Digital Literacy டிஜிட்டல் கல்வியறிவு, Strategy மூலோபாயம், Innovation புத்தாக்கம், RiskTalking ஆபத்து தொடர்பான கலந்துரையாடல், Risk Taking, Adaptability தகவமைப்பு, Talent Spotting திறமை கண்டறிதல் போன்றவை இடம்பெறுகின்றன.

பைழமைவாத கட்டுபாட்டுக்குள் இருந்து விலகி புதிய தொழிநுட்பத்துடன் திறமைகளை ஒன்றுசேர்த்து மற்றும் நேர்மறை சிந்தனைகளுடன் முன்னோக்கிச் சென்றால் நாடு என்ற ரீதியில் இதனைவிடவும் வெற்றியை பெற்றுக் கொள்ள முடியும் என புலஸ்தி வன்னிஆராச்சி மேலும் தெரிவித்தார்.

**நடராஜா மலர்வேந்தன்...**
*(லுணுகல நிருபர்)*

# காத்தான்குடி அல்-ஜாமிஅதுஸ் ஸித்தீகிய்யா மகளிர் அறபு கல்லூரியின் 23வது பட்டமளிப்பு

காத்தான்குடி அல் ஜாமிஅதுஸ் ஸித்தீகிய்யா மகளிர் அறபுக் கல்லூரி 1976 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு சுமார் 46 வருட கால வளர்ச்சியைக் கண்டுள்ளது. 46 வருட வரலாற்றைக் கொண்ட இந்த ஜாமிஆவில் 1983 தொடக்கம் 2021 வரை 821 மௌலவியாக்கள் பட்டம் பெற்று வெளியேறி இருக்கிறார்கள். அத்துடன் 1999 தொடக்கம் 2021 வரை 44 ஹாபிழாக்கள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர்.

மேலும் இந்த ஜாமிஆவில் வெளியாகி உள்ள மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெற்று பல்துறை சார்ந்த பட்டம் பெற்ற மௌலவியாக்களாக ஹாபிழாக்களாக அரச சேவையில் கடமையாற்றியும் வருகின்றார்கள்.

அந்த வகையில் இதன் 23 ஆவது பட்டமளிப்பு விழா இரண்டு கட்டங்களாக மிகவும் சிறப்பாக நடைபெற இருக்கிறது. அதில் முதல் கட்டமாக 2022.09.03 சனிக்கிழமை காலை 9.00மணிக்கு 75 மௌலவிய்யாக்களும் ஒரு ஹாபிழாவும் பட்டம் பெற இருக்கின்றனர். பிரதம அதிதியாக சாய்ந்தமருது குல்லியதுத்தைபா மகளிர் அறபுக் கல்லூரின் அதிபர் அல்ஹாஜ் அஷ்ஷெய்க் எஸ்.எச் .ஆதம்பாவா (மதனி) ஆயு கலந்து சிறப்பிக்கவுள்ளார்.




2 ஆவது கட்டமாக 2022.09.04 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு 65மௌலவியாக்களும் ஒரு ஹாபிழாவும் பட்டம் பெற உள்ளனர். பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரி.எம்.ரிஸ்வி(மஜீதி) கலந்து சிறப்பிக்க உள்ளார். இந்நிகழ்வு அல்ஜாமிஅதுஸ் ஸித்தீகிய்யா கேட்போர் கூடத்தில் மிகவும் விமரிசையாக நடைபெற உள்ளது.

மேலும் 2016இல் ஆரம்பிக்கப்பட்ட உயர்தரத்துடன் கூடிய கலைப்பிரிவில் 4வருட ஷரீஆ கற்கை நெறியில் 16 மௌலவிய்யாக்கள் பட்டம் பெற இருக்கிறார்கள். இந்த ஜாமிஆவின் தலைவர் அல்ஹாஜ் யுஆஆ. தௌபீக் (நுபெ) தலைமையில் இந்த பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது . அத்துடன் 2020 ஆம் ஆண்டு இந்த ஜாமிஆவின் அதிபராக அஷ்ஷெய்க் எம்.ஐ. அப்துல் கபூர் (மதனி) நியமிக்கப்பட்டதுடன் அவரின் தலைமையில் இடம்பெறும் முதலாவது பட்டமளிப்பு விழா இது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுபவர்கள் 2018 ஆம் ஆண்டு 34 மௌலவியாக்கள், 2019 ஆம் ஆண்டு பட்டம் பெறுபவர்கள் 41 மௌலவியாக்கள், 1 ஹாபிழா, 2020 பட்டம் பெறுபவர்கள் 34 மௌலவியாக்கள், 2021 பட்டம் பெறுபவர்கள் 14 மௌலவியாக்கள், 1 ஹாபிழா பட்டம் பெறுபவர்கள் (2019,2020,2021) 16 மௌலவியாக்கள்.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
*(காத்தான்குடி விசேட நிருபர்)*

# One Galle face mall இல் 5G அனுபவங்களை பகிர்ந்தது SLT-MOBITEL

இலங்கையில் நவீன தொழில்நுட்ப மேம்படுத்தல்களை அறிமுகம் செய்வதில் தனது முன்னோடித்தன்மையை உறுதி செய்யும் வகையில் SLTMOBITEL, கொழும்பு one Galleface Mall கிளையில் வாடிக்கையாளர்களுக்கு 5G அனுபவத்தை பெற்றுக் கொள்ளும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் பொதுமக்களுக்காக பரந்தளவு 5G தொழில்நுட்ப வெளிப்படுத்தல் சேவைகள், Virtual Reality, 5G Gaming, remote vehicle control, HD video streaming போன்ற பல அம்சங்கள் அடங்கியிருந்தன. இவற்றினூடாக, அதியுயர் வேகங்களுக்கு மேலதிகமாக 5G தொழில்நுட்பத்தின் திறன்கள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

பிரதான நகரங்களில் தினசரி வாழ்க்கையில் 5G ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ள நிலையில், தனது வணிக அறிமுகத்துக்கு முன்னரான பரீட்சார்த்த வலையமைப்பு பகுதிகளை கொழும்பு, கண்டி, அனுராதபுரம், காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதான நகரங்களில் SLTMOBITEL மேலும் விரிவாக்கம் செய்துள்ளது. இதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு 5G தொழில்நுட்பத்தை மொபைல் புரோட்பான்ட் ஊடாகவும், நிலையான வயர்லஸ் அணுகல் டொமெயின்களினூடாகவும் பயன்படுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

https://5g.sltmobitel.lk எனும் இணையப் பகுதிக்கு விஜயம் செய்து, SLTMOBITEL வாடிக்கையாளர்களுக்கு தமது சாதனத்தின் 5G தகுதி, ஆற்றல் மற்றும் மேலதிக தகவல்களை பரிசோதித்துக் கொள்ள முடியும்.



2019 ஆம் ஆண்டு முதல் SLTMOBITEL இனால் நாடு முழுவதிலும் 5G வலையமைப்பு பற்றிய விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. 2019 ஏப்ரல் மாதத்தில் SLTMOBITEL இனால், தெற்காசியாவின் முதலாவது மொபைல் வலையமைப்பினூடான 5G பரீட்சார்த்த நிறுவுகை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. மொபைல் ஸ்மார்ட் தொலைபேசி ஒன்றை 5G வலையமைப்புடன் இணைத்து அதிவேக இணைப்புகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. வயர்லஸ் தொடர்பாடலின் அடுத்த தலைமுறையாக 5G அறியப்படுகின்றது. இதில் அதிவேகம், பாரிய இணைப்புத்திறன் மற்றும் புதிய உள்ளடக்கமான அனுபவங்கள் போன்றவற்றுடன் HD video streaming, virtual reality, factory automation, remote operations, missioncritical communications, massive IOT, smart home & smart city கொள்கைகள் மற்றும் விறுவிறுப்பான மேலும் பல வரையறைகளற்ற அம்சங்கள் நுகர்வோர்களுக்காகவும், வியாபாரங்களுக்காகவும் அடங்கியுள்ளன.

இலங்கையில் வணிக ரீதியிலான 5G வலையமைப்பு அனுமதியை வழங்கும் பணிகளை இலங்கை தொலைத்தொடர்பாடல்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) மேற்கொண்ட வண்ணமுள்ளதுடன், அவசியமான அனுமதியை SLTMOBITEL பெற்றுக் கொண்டதும், தனது 5G வலையமைப்பை மேலும் விரிவாக்கம் செய்யும் பணிகளை முன்னெடுக்கும். அதனூடாக, டிஜிட்டல் மேம்படுத்தல்களினூடாக, உள்ளடக்கமான டிஜிட்டல் பொருளாதாரத்துக்கும் பங்களிப்பு வழங்கப்படும்.

# நலிவுற்ற மக்களுக்கு உதவுவதற்காக இலங்கை செஞ்சிலுவை சங்கத்துடன் கைகோர்க்கிறது Uber SriLanka

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள நலிவுற்ற சமூகங்களுக்கு உதவுவதற்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 200,000 அமெரிக்க டொலர் தொகை நன்கொடையை வழங்குவதாக Uber Sri Lanka அறிவித்துள்ளது. இந்த நன்கொடைகள் நாடு முழுவதும் உணவு மற்றும் உயிர்காக்கும் மருந்துகளை விநியோகிக்க பயன்படுத்தப்படும்.

Uber விநியோக மற்றும் ஓட்டுநர் பங்காளர்கள் மற்றும் விசாலமான சமூகத்தின் அங்கத்தவர்கள் உட்பட 10,000க்கும் மேற்பட்ட நபர்கள், நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கான அன்றாட அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய உலர் உணவுப் பொதிகளைப் பெற்றுக் கொள்வார்கள். மேலும் 30,000க்கும் மேற்பட்டோருக்கு சேவை செய்யும் 15 கிராமப்புற மருத்துவமனைகள் சர்வதேச வழங்குநர்களிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்யப்படும் அவசரகால மருந்து வகைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஏனைய பொருட்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளன.

Uber இன் சார்பில் வருகை தரும் சர்வதேச அதிகாரியும், ஆசிய பசுபிக் பிராந்திய விநியோகத்திற்கான பிராந்திய பொது முகாமையாளருமான சஸ்கியா டி ஜோங் மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவரான ஜகத் அபேசிங்க ஆகியோர் முன்னிலையில் இந்த கூட்டாண்மை தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது. Uber Sri Lanka இன் பொது முகாமையாளரான தத்லானி ஜெயவர்தன, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு கிளையின், நிறைவேற்று அதிகாரம் கொண்ட பணிப்பாளர் சபைத் தலைமை அதிகாரியான குமாரி கொத்தலாவல ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.




**உலர் உணவுப் பொதிகள் மற்றும் முக்கியமான மருந்து வகைகளை வழங்குவதற்கு நன்கொடைகள்**

Uber ஆசிய பசுபிக் விநியோகத்திற்கான பிராந்திய பொதுமுகாமையாளரான சஸ்கியா டி ஜோங் இக்கூட்டாண்மை தொடர்பில் தெரிவிக்கையில், 'சமூகங்களுக்கு உதவ நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நாட்டுக்கு இது ஒரு கடினமான காலகட்டம் என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம். மேலும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடனான இந்த கூட்டாண்மையின் மூலம் இந்த நாட்டிற்கு உதவுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்' எனக் குறிப்பிட்டார்.

இந்த கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவரான ஜகத் அபேசிங்க, 'பொருளாதார நெருக்கடியின் போது இலங்கையில் மிகவும் நலிவுற்ற மக்களுக்கு நிதி உதவி வழங்குவதன் மூலம் தக்க தருணத்தில் இந்த முயற்சியை Uber மேற்கொண்டுள்ளது' என்று குறிப்பிட்டார்.

Uber Sri Lanka மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவை நாட்டில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் முயற்சிக்கு ஆதரவாக கைகோர்த்திருந்தன. முன்கள சுகாதாரப் பணியாளர்கள், முதியவர்கள் மற்றும் நலிவுற்ற சமூகங்களைச் சார்ந்தவர்களை தடுப்பூசி ஏற்றும் மையங்களுக்கு கொண்டு செல்வதற்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 50,000 இலவச சவாரிகளை Uber நன்கொடையாக வழங்கியது.

இன்றைய பொருளாதார நிலையிலிருந்து மீள்வதற்காக, குறுகிய மற்றும் நீண்டகால நடைமுறைச் சாத்தியமான திட்டங்களை முன்வைத்து, இந்த இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருப்பது, நட்டின் தலைவர் என்ற வகையில் முன்மாதிரி செயற்பாடாக இருப்பதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இத்தகைய செயற்பாடுகளுக்கு போதிய பங்களிப்பு வழங்கும் வகையில், ஏற்றுமதியின் ஊடாக அதிகளவு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்கின்ற நிலைபேறான செயற்றிட்டங்களை கடற்றொழில் அமைச்சு பரவலாக முன்னெடுத்து வருகின்றது என்றும் தெரிவித்ததார்.

அதேவேளை, மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றை தனியார் மூலமாகவும் இறக்குமதி செய்து, கடற்றொழிலாளர்களுக்கான எரிபொருள் தாராளமாக கிடைப்பது உறுதிப்படுத்தப்படும் என்பதுடன் மண்ணெண்ணெய் விலையேற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு மானியம் கிடைப்பதற்கும் ஏதோவொரு வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும், பிரதமர் தினேஸ் குணவர்தனவுடனும் கலந்துரையாடியதன் பயனாக இம்முறை இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கும், அதேநேரம் மின்சார வசதியற்ற மலையக மக்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கென 5.000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் எமது கடற்றொழிலாளர்கள் மற்றும் மலையக மக்கள் சார்பில் ஜனாதிபதியும், நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பிரதமர் தினேஸ் குணவர்தனவுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

## பயங்கரவாத தடைச் சட்ட...

இதுவரைகாலமும் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டுவந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது சிங்களத்தில் கையெழுத்திடுவதன் மூலம் அவரின் நிலைப்பாடுகளும் மாறி வருவது தெளிவாகின்றது.

கடந்தஇரண்டு மாதங்களுக்கு மேலாக வடக்கில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் மண்ணெண்ணெய் இல்லாது கஷ்டப்படுகின்றனர்.

விவசாயிகள் நீரிறைக்கும் இயந்திரத்துக்கும் மீனவர்கள் தமது படகு மற்றும் இயந்திரங்களுக்கும் மண்ணெண்ணெய் இல்லாது அவஸ்தைப் படுகின்றனர். இந்த விடயத்தை பல தடவைகள் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறியும் அதற்கு எந்த விதமான பதிலும் கிடைக்க வில்லை. கிடைத்த ஒரேயொரு பதில் 87 ரூபாவாக இருந்த மண்ணெண்ணெய் 340 ரூபாவாக 253 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு மட்டுமே.

கஷ்டப்படுகின்ற விவசாயிகளுக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் இதுவரைக்கும் எந்த நிவாரணமும் கொடுக்கப்படவில்லை. இந்த இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் கூட மண்ணெண்ணெய் பாவிப்பவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமென்ற முன்மொழிவு உள்ளது. ஆனால் ஒதுக்கீட்டில் இந்த நிவாரணத்துக்காக ஒரு சதம் கூட ஒதுக்கப்படவில்லை.

இது மத்தியவர்க்கம் மற்றும் அதற்கு மேற்பட்ட வர்க்கத்தை அமைதியாக்கும் அரசின் நோக்கத்தையே காட்டுகின்றது. மத்தியவர்க்கத்தின் கீழ் உள்ளவர்களை அரசு பார்க்க வேண்டும். ஆனால் இங்கு மத்தியவர்க்கம் மற்றும் அதற்கு மேற்பட்ட வர்க்கத்தை அமைதியாக்கி சமாளிக்க அரசாங்கம் முற்பட்டுள்ளது. அண்மைய நாட்களாக துப்பாக்கி சூட்டு மரணங்கள் அதிகரித்துள்ளன. அந்த மரணங்களை தடுக்கவோ சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யவோ பொலிஸாரை பயன்படுத்தப்படவில்லை. ஆனால் மக்களின், மாணவர்களின் போராட்டங்களை அடக்கவே பொலிஸ் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு இடத்தில் 500 பேர் ஆர்ப்பாட்டம் செய்தால் அங்கு 1000 பொலிஸார் நிற்கின்றனர். அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழக்கமாக ஆங்கிலத்தில்தான் கையெழுத்திடுவார் ஆனால் அவர் ஜனாதிபதியானதன் பின்னர் 3 தடுப்புக் காவல் சட்ட ஆவணங்களிலும் சிங்களத்தில் கையெழுத்திட்டுள்ளார். இதன் மூலம் அவரின் மன நிலை மாறி வருவதனைக் காண முடிகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உயர் நீதிமன்றின் வியாக்கியானம்...

நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும் பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை நிலையாக செயற்படுத்த அடித்தளமிடுவதற்காகவும் இடைக்கால வரவு செலவுத் திட்டம் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது அபிவிருத்தியை அடிப்படையாக கொண்ட இடைக்கால வரவு செலவு திட்டமல்ல.

நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பில் புதிதாக குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

நாட்டுக்குத் தேவையான கொள்கை மற்றும் சட்டத்தை இயற்றுவதும் நாட்டு மக்களுக்கான நிதி அதிகாரம் மற்றும் சுயாதீனத் தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதே பாராளுமன்றத்தின் பிரதான கடமையாகவுள்ளன.நாட்டின் நிதி முகாமைத்துவம் தவறாக செயற்படுத்தப்பட்டுள்ளது என்பது புதிய விடயமல்ல.

பொருளாதார நெருக்கடி தொடர்பாக ஒரு தரப்பினர் 74 வருடகாலத்தையும் சபிக்கின்றனர். 1948ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து தேசபிதா டி.எஸ் சேனாநாயக்க தொடக்கம் ஆட்சியிலிருந்த அரச தலைவர்கள் அனைவரும் நாட்டுக்கு சேவையாற்றியுள்ளார்கள்.

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சி காலத்தில் மக்கள் பெரும் அசௌகரியங்களையும்,நெருக்கடிகளையும் எதிர்கொண்டனர். நிலையான முன்னேற்றத்துக்காக எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் அப்போது ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

அப்போதைய காலக்கட்டத்தில் மூடிய பொருளாதார கொள்கையை கடுமையாக விமர்சித்து திறந்த பொருளாதார கொள்கையினை முன்வைத்து அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.தற்போது திறந்த பொருளாதார கொள்கையை நாமும் விமர்சிக்கிறோம்.திறந்த பொருளாதார கொள்கையில் ஒருசில குறைப்பாடுகள் காணப்பட்டாலும்,சாதகமான அம்சங்களும் காணப்பட்டன.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் ஒருசில அதிகாரங்கள் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தமூடாக பாராளுமன்றத்தின் வசமாக்கப்பட்டது.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தில் பாராளுமன்றத்தின் பெரும்பாலான அதிகாரங்கள் நிறைவேற்று அதிகாரத்துறையிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகளை அனைவரும் நன்கு அறிவோம்.

நிறைவேற்று அதிகாரத்தின் தனி தீர்மானங்கள் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணியாகும்.பொருளாhதார நெருக்கடி தொடர்பில் கோப் குழு பல விடயங்களை பகிரங்கப்படுத்தியுள்ளது. செயற்படுத்தப்பட்ட ஒருசில அபிவிருத்தி திட்டங்களினால் எவ்வித பயனும் நாட்டுக்கு கிடைக்கப்பெறவில்லை அத்துடன், முறையற்ற வெளிநாட்டு கடன் கடன் சுமையினை தீவிரப்படுத்தியுள்ளது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். பெற்றுக்கொண்ட வெளிநாட்டு கடனை மீள செலுத்த முடியாத காரணத்தினால் அம்பாந்தோட்டை துறைமுகம் பிற தரப்பினருக்கு சொந்தமானது. உலக பலம் வாய்ந்த தரப்பினரது பனிப்போருக்கு மத்தியில் அம்பாந்தோட்டை துறைமுகம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டு அது சீனாவுக்கு வழங்கப்பட்டது.தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அன்று முன்னெடுத்த தீர்மானமும் ஒரு காரணியாக உள்ளது இவ்வாறான பின்னணியில் தான் அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்களின் வாழ்க்கை...

இங்கு கருத்துரைத்த ஜனாதிபதி, இலங்கை வரலாற்றில் இது முக்கியமான படிக்கல்லாகுமெனத் தெரிவித்தார். “வீழ்ச்சியில் இருந்து மீள்வது, கடனை திருப்பிச் செலுத்த அவகாசம் பெறுவதுமட்டுமன்றி, சமூக துறைகளைப் பாதுகாப்பது, வாழ்க்கை முறையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவது என்பன முக்கியமாகும். அதனைவிட தற்போதைய நிலைமையில் பின்னடைவு ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்வதும் முக்கியமானதாகும்.

சமூகக் கட்டமைப்பை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், பாதிக்கப்படக்கூடிய குழுக்களைப் பாதுகாத்தல் என்பவற்றை முன்னெடுக்கும் அதே நேரம் போட்டித் தன்மை மிகுந்த ஏற்றுமதியை அடிப்டையாகக்கொண்ட தொழில் துறையாக நாட்டை மேம்படுத்துவதை புதிய பொருளாதார யுகமாக கருதுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

“இதன் ஆரம்பம் கடினமானதாக இருக்கும், ஆனால் நாம் அதனையே பின்தொடர்ந்தால் எம்மால் இன்னும் முன்னேற முடியும். இப்போதைக்கு எதுதேவையோ அதுவே எமது அர்ப்பணிப்பாக இருத்தல் வேண்டும். எனினும் இங்கு நாம் எமது இலக்கை அடைவதை மட்டும் குறிக்கோளாக கொண்டிராமல் அதற்கு அப்பாலும் செல்ல வேண்டும்”, என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

“ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்துக்கு நம்மை நாம் மாற்றிக்கொள்வோம், இது நமது சமூக சேவைகளை நிலைநிறுத்துவதை எளிதாக்கும்” என்றும் கூறினார்.

இலங்கை தனது கடன்களைக் குறைப்பதற்கும், முடிந்தால் கடன்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் இது ஒரு தொடக்கமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதிகளை 48 மாத காலப்பகுதிக்குள் வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

முழுமையான பொருளாதார ஸ்திரத்தன்மையை மீள ஏற்படுத்துதல், கடன் நிலைத் தன்மையை மறுசீரமைத்தல், நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல், பாதிக்கப்படக் கூடிய குழுக்களை பாதுகாத்தல், ஊழலை ஒழிப்பதற்கு தேவையான கட்டமைப்பு மாற்றங்களை நோக்கி நகர்வதன் மூலம் இலங்கையை முன்னேற்றுதல் என்பன இந்த கடன் வசதியின் நோக்கமாகும்.

இணக்கப்பாட்டின் முக்கிய அம்சங்கள் :

- □ நிதி வெளிப்படைத்தன்மை மற்றும், அரச நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதன் மூலம் ஊழலைக் குறைத்தல் மற்றும் வலுவான ஊழலுக்கு எதிரான சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துதல்.
- □ சமூக நலனுக்கான செலவினங்களை அதிகரிப்பதன் மூலம் ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு தற்போதைய நெருக்கடியின் தாக்கத்தை குறைத்தல், சமூகபாதுகாப்பு கட்டமைப்பு திட்டங்களினுடான பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் பயனாளிகளை துல்லியமாக அடையாளம் காணுதல்
- □ அரச நிதியை நிலைப்படுத்த வருவாயை உயர்த்துதல், தனிநபர் வருமான வரியை மேம்படுத்த சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல், நிறுவன ரீதியான வருமான வரி மற்றும் VAT ஆகியவற்றின் நோக்கத்தை விரிவுபடுத்துதல், இந்த வரி சீர்திருத்தங்களூடாக 2024 ஆம்ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3 சதவீத ஆரம்ப அதிகரிப்பை அடைவதை இலக்காகக் கொள்ளுதல்.
- □ அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் அதிகரித்து வரும் நிதி அபாயத்தைக் குறைப்பதற்காக செலவுகளை மீளப்பெறும் வகையில் எரிபொருள் மற்றும் மின்சாரத்துக்கான கட்டணப் பொறிமுறை ஒன்றை அறிமுகப்படுத்துதல் என்பனவாகும்.

# கிழக்கின் குரல்



# உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளால் சமூகப்பிணைப்பை பலப்படுத்த கலந்துரையாடல்



*மட்டக்களப்பு விஷேட நிருபர்*

சகவாழ்வின் மூலம் சமூகத்திற்கும் அரச ஊழியர்களுக்கும் இடையில் பிணைப்பை வலுப்படுத்தும் நோக்கோடு,கலந்துரையாடல்நடாத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்களுக்கென நடாத்தப்பட்ட இந்த கலந்துரையாடல் நேற்று (01) மாநகர மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கலந்துரையாடல், மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் என்.மதிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்துக்கென வரும் தபால்கள் மற்றும் மின்னஞ்சல்களுக்கு உடனடி பதில்கள் வழங்குதல்,

உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நாடிவரும் மக்களின் தேவைகளை இழுத்தடிக்காது விரைவுபடுத்தல் உள்ளிட்ட விடயங்களில்,மக்கள் பிரதிநிதிகளை தயார்படுத்தும் நோக்கில் இக்கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. வட்டாரத்தின் வேலைகள் மற்றும் தேவைகளை எவ்வாறு முன்னெடுப்பதென்ற விளக்கங்கள் இதன்போது இவர்களுக்கு வழங்கப்பட்டன.

சிவில் சமூகத்தலைவர்கள், மதத் தலைவர்கள்,

வட்டார த்திலுள்ள இனங்களின் பிரதிநிதியாக ஒருவர் மற்றும் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோரின் சிபார்சின் அடிப்படையிலேயே, இவ்வேலைகள் இனி முன்னெடுக்கப்படுமெனவும்,வட்டார உறுப்பினரின் சிபார்சிக்கமைய மட்டும் வேலைகள் இடம்பெறாது எனவும், உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் பெருமாள் பிரதீப் தெரிவித்தார்.மேலும்,தெரிவுசெய்யப்பட்ட குறித்த வேலைத்திட்டங்கள் சபையின் மாதாந்தக்கூட்டத்தில் முன்மொழியப்பட்டு இதற்கான சிபார்சு கிடைத்த பின்னரே, செயற்திட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மாநகரசபை உறுப்பினர்கள் குறித்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் வெற்றிபெற்ற வட்டார உறுப்பினர், பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு இடையேயான புரிந்துணர்வு என்பன பற்றியும் இதில், கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், பிரதி ஆணையாளர்உ.சிவராஜா, கணக்காளர் ஹெலன் சிவராஜா, இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் திட்ட அதிகாரி ஜெனி ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.



மண்முனைப்பற்று கல்விக்கோட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ்தினப் போட்டியில், ஆரையம்பதி மகாவித்தியாலய மாணவர்கள் வில்லிசை பாட்டில் முதலாமிடம் பெற்றனர். அதிபர் எஸ். சந்திரலிங்கமின் நெறியாள்கையில் பயிற்றுவிக்கப்பட்ட இம்மாணவர்கள், அதிபருடன் எடுத்துக்கொண்ட படம். இப்போட்டி, ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (ஆரையம்பதி தினகரன் நிருபர்)

## மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்

*ஒலுவில் விஷேட நிருபர்*

பொத்துவில் பிரதேசத்தில் மீண்டும் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், நுளம்பு பரவக்கூடிய வெற்றுக் காணிகளை வைத்திருப்போர் ஒருவார காலத்திற்குள் காணிகளை துப்பரவு செய்யுமாறு, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

தற்போது அடிக்கடி மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்படுவதாகவும், பொது மக்கள் இதுகுறித்து மிக அவதானமாக செயற்படுமாறும் அவர் அறிவித்துள்ளார். இந்நிலைமைகளை இல்லாதொழிக்க டெங்கு ஒழிப்பு செயலணியும் உருவாக்கப்பட்டுள்ளது.

இச் செயலணியினருடன் இணைந்து பொலிஸாரும் வீடு, வீடாகச்சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டி வருகின்றனர்.

சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்தல், நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல், நுளம்பின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தல் தொடர்பாக மக்களுக்கு துண்டுப்பிரசுரம் மூலமும், ஒலிபெருக்கி ஊடாகவும் அறிவித்தல் செய்யப்படுகிறது.

# ஓய்வு பெற்றுச்செல்லும் பிரதி அதிபருக்கு கல்விச்சமூகம் பாராட்டு



*அட்டாளைசேனை குறுப் நிருபர்*

அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி அல் பாயிஸா மகாவித்யாலயத்தின் பிரதி அதிபராகவும் கடந்த 13 வருடங்களாக ஆங்கில ஆசிரியராகவும் நற்பணியாற்றிய சம்சுதீன் றியாஸ் சென்ற வாரம் ஓய்வுபெற்றார். பாடசாலை சமூகம் அவரின் சேவையை கௌரவித்து நினைவுச்சின்னம் வழங்கியது.

அதிபர் எம்.எச். பதுர்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேய்க் எ.எம். ரகுமதுல்லாஹ் (நளீமி) பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் எ.எஸ். கியாஸ் மற்றும் அதிபர் பதுர்தீன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது, ஓய்வுபெற்றுச்செல்லும் பிரதி அதிபர் றியாஸுக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது. முப்பத்தியொரு வருடங்கள் கல்வித் துறையில் சேவையாற்றிய பிரதிஅதிபர் றியாஸ், ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலயம், அக்கரைபற்று டாக்டர் பதியுதீன் மகாவிதியாலயம், அக்கரை பற்று அஸ்சிராஜ் மகா விதியாலயம், ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி என்பவற்றிலும் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் கோரிக்கை

*பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்*

அட்டாளைச்சேனை பிரதேசசபை பிரிவுக்குட்பட்ட பாலமுனை பிரதேச பிரதான போக்குவரத்துப் பாதையில் உலவித்திரியும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பகல் வேளைகளில் மாத்திரமன்றி இரவு வேளைகளிலும் இந்தக்கட்டாக்காலிகள் அலைந்து திரிகின்றன. அது மட்டுமன்றி நாளாந்தம் இவற்றின் தொல்லைகள் அதிகரிப்பதாகவும் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.


NLDB

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

2022 ஆகஸ்ட் 26ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் விளம்பரம் தொடர்பானது,

மேற்படி கேள்வியின் மூடப்படும் திகதியானது, 2022 செப்டம்பர் 15ஆம் திகதி எனத் திருத்தப்படல் வேண்டும்.

இது தொடர்பாக உங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களிற்காக மன்னிப்புக் கோருகின்றோம்.



## பெறுகை அறிவித்தல்
### குளியாப்பிட்டிய பிரதேச சபை

2023ஆம் ஆண்டிற்காக குளியாப்பிட்டிய பிரதேச சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு விடல் முதல் முறைக்காக 2022.09.01 முதல் 2022.09.22 மு.ப. 10.00 வரை என்னால் கேள்விகள் ஏற்கப்படுவதுடன் அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்கள் 2022.09.01 முதல் 2022.09.21 வரை பிரதேச சபை அலுவலகத்தில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம். குறித்த விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் போது சபையினால் குத்தகைக்கு வழங்கப்படும் சொத்துக்களின் அட்டவணை மற்றும் கேள்வி நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

2023ஆம் ஆண்டிற்காக சொத்துக்களை குத்தகைக்குப் பெறும் போது மேற்படி நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்படுவதற்கு விண்ணப்பதாரிகள் இணங்குதல் வேண்டும்.

**2.1 கேள்விப் படிவங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி :-**
2022.09.21 பி.ப. 3.00 வரை

**2.2 கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் :-**
2022.09.22 மு.ப. 10.00 வரை

**2.3 கேள்விப் பத்திரங்கள் திறத்தல்** :- 2022.09.22 மு.ப. 10.30 இற்குப் பின்னர் கேள்வி விண்ணப்பதாரிகள் 2022.09.21 பி.ப. 3.00 இற்கு முன் குறித்த கட்டணங்களைச் செலுத்தி கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் பி.ப. 3.00 இற்குப் பின்னர் கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் இடைநிறுத்தப்படும்)

(மேலதிக விபரங்களுக்கு கீழேயுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.)

037-2281265, 037-4947212 - அலுவலகம்
037-4947233 - வருமானப் பிரிவு

**செயலாளர்**
**குளியாப்பிட்டிய பிரதேச சபை**

**2022.08.29ம் திகதி**
**குளியாப்பிட்டிய பிரதேச சபை அலுவலகத்தில்**



## அற்றோர்ணி அதிகாரப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் பள்ளம (61040) 153/A இலக்கத்தில் வசிக்கும் **ஹேரத் பதிரன்னெஹெலாகே டிலானி அப்சரா ஹேரத்** (தே.அ.அ.இல. 785250060V) இத்தாலி நாட்டின் இலங்கைக்கான ரோம் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் **மினிஸ்டர் கொன்சல் போஷித பெரேரா** முன்னிலையில் 2015-05-10ஆம் திகதி கைச்சாத்திட்டு புத்தளம் மாவட்டத்தில் (61040) 153/A இலக்கத்தில் வசிக்கும் **ஏக்கநாயக்க முதியன்சேலாகே சூல பத்மேந்திர பண்டார ஏக்கநாயக்க** (தே.அ.அ.இல. 800700043V) என்பவருக்கு வழங்கிய அற்றோர்ணி அதிகாரத்தை இன்றைய தினம் முதல் இரத்துச் செய்து வலுவிழக்கச் செய்வதாக இலங்கைக் குடியரசின் சகல பிரசைகளுக்கும் அறியத்தரப்படுகின்றது.

இன்று முதல் அந்த அற்றோர்ணி அதிகாரப் பத்திரத்தினால் மேற்கூறிய அட்டோர்ணி தத்துவதாரரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பாளியல்ல என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

**ஹேரத் பதிரன்னெஹெலாகே டிலானி அப்சரா ஹேரத்**



## பெறுகை அறிவித்தல்
### போதனா வைத்தியசாலை - களுத்துறை

களுத்துறை போதனா வைத்தியசாலையினால் நிர்வகிக்கப்படும் அளுத்கம வைத்தியசாலையின் சமைத்த உணவு வழங்கும் ஒப்பந்தத்திற்காக 2022/ 2023 ஆண்டிற்காக திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

- கேள்வி ஆவணங்களை களுத்துறை போதனா வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் பெறுகைக் கிளையில் மீளளிக்கப்படாத ரூ. 2,500/- கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
- குறித்த கேள்வி ஆவணங்கள் 2022.09.03 முதல் 2022.09.15 திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.
- 2022.09.16 மு.ப. 10.30 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்வி 2022.09.16ம் திகதி மு.ப. 10.30 இற்கு முடிவுறுத்தப்படுவதுடன், உடனடியாகவே திறக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இல. 034-2222261/ 62 ஐ அழையுங்கள்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை - களுத்துறை.**



## மஹியங்கனை பிரதேச சபை

### மஹியங்கனை சி.டி.பீ. பஸ் நிலையக் கட்டிடத்தில் அமைந்துள்ள கடை அறைகளை குத்தகைக்கு விடல் மற்றும் சிறுவர் பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள ஸ்னெக் பார் கடை அறையை குத்தகைக்கு விடுவதற்கான

## கேள்வி அறிவித்தல்

01. மஹியங்கனை சி.டி.பி. பஸ்நிலைய வளாகத்தில் 18 கடை அறைகள் மற்றும் சிறுவர் பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள ஸ்னெக் பார் கடை அறையை நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு மஹியங்கனை பிரதேச சபையினால் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.
02. கேள்வி விண்ணப்பங்கள் 2022.09.05 முதல் 2022.09.13 பிற்பகல் 12.00 வரை விநியோகிக்கப்படுவதுடன், 2022.09.13 பி.ப. 1.00 இற்கு கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறும். 2022.09.13 பி.ப. 2.00க்கு கேள்விகள் திறக்கப்படும்.
03. மஹியங்கனை பிரதேச சபைக்கு ரூபா 15,000.00 பிணை வைப்பை வைத்து ரூபா 5,000.00 செலுத்தி கேள்வி விண்ணப்பமொன்றைப் பெற்று சரியாகப் பூர்த்தி செய்து 12 x 6 அளவிலான கடித உறையில் இட்டு உறையை முத்திரையிட்டு தலைவர், பிரதேச சபை, மஹியங்கனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் கையோடு கொண்டுவந்து 2022.09.13 பி.ப. 1.00 இற்கு முன்பு மஹியங்கனை பிரதேச சபைக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் "சி.டி.பி. பஸ் நிலையம் இல. ................ என்ற கடை அறைக்கான கேள்வி கோரல்" மற்றும் "ஸ்னெக் பார் கடை அறை" இற்கு என குறிப்பிடுதல் வேண்டும்.
04. கேள்வி கோரப்படும் கடை அறை சம்பந்தமான தகவல்கள் கீழேயுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

| கட்டிடம் | கடை அறை இலக்கம் | சதுர அடி அளவு | குறைந்த பட்ச கேள்வித் தொகை (ஒரு கடை அறையின் விலை) | மாதாந்த கடை வாடகை |
|---|---|---|---|---|
| தரை மாடி புளொக் பீ | 16, 17, 18, 19 | 194 | 1,700,000.00 | 8,500.00 |
| மேல் மாடி புளொக் ஏ | 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34 | 194 | 1,300,000.00 | 7,000.00 |
| மேல் மாடி புளொக் பீ | 37, 38, 39, 40 | 194 | 1,100,000.00 | 5,500.00 |
| ஸ்னெக் பார் கட்டிடம் | | 350 | 500,000.00 | 10,000.00 |

05. அந்தந்த கடை அறைக்கு தேர்ந்தெடுக்கப்படும் குத்தகைதாரர்கள் குறித்த கடை அறைக்காக கேள்வித் தொகையின் 40%ஐ அவ் வேளையிலேயே செலுத்துதல் வேண்டும். 30% மான இரண்டாம் பிரிவு கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 14 நாட்களுக்கு உள்ளேயும். 30% மான மூன்றாம் பிரிவு கேள்வி திறக்கப்படும் நாள் முதல் 28 நாட்களுக்குள்ளேயும் செலுத்துதல் வேண்டும்.
06. மேலதிக விபரங்களுக்கு 055-2257275 தொலைபேசிக்கு அலுவலக நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.00 இற்கு இடைப்பட்ட காலத்தில் அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச சபை - மஹியங்கனை.**



திகதி 31.08.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4864
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,580,090.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 4 2 5 1 6 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 45,116,166.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1319
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,843,040.00
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 2 9 2 6 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,268,047.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 173
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,421,460.00
இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 02 17 25 53
விசேட இலக்கினம் மீனம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,403,015.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 894
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,168,780.00
வெற்றி இலக்கினம் W வெற்றி இலக்கங்கள் 10 25 69 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 123,582,059.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3106
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,936,300.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 13 20 46 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,466,482.40

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1212
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,637,260.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 268,133,358.00
T 20 02 28 38 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# கல்வி, சமய, சமூகத் தொண்டுகளில் தன்னை அர்ப்பணித்து வரும் நஜீப் பின் அமீர் ஆலிம்

**தர்கா நகர் அறிஞர்கள், மகான்கள், கொடை வள்ளல்கள் தோன்றி பிரகாசித்த பிரதேசமாகும். 'இங்கும் அண்டிய ஊர்களிலும் காலத்துக்குக் காலம் கொடை வள்ளல்கள் வாழ்ந்து சமூகத்துக்கும் நாட்டிற்கும் நற்பணிகள் ஆற்றிய வரலாறு இப்பிரதேசத்திற்குண்டு. குறிப்பாக 1950களில் 'ரப்பர் கிங்' என்று போற்றப்படும் ஈ.எல். இப்ராஹிம் ஹாஜியார், 1960–70களில் நளீம் ஹாஜியார், 1990 – 2000 ஆண்டுகளில் ஸெம் ரிபாய் ஹாஜியார் உள்ளிட்ட கொடையாளிகளால் கடல் கடந்த நாடுகளிலும் இப்பிரதேசம் புகழ் பெற்று விளங்கியதை நாம் அறிவோம்.**

**இவர்களின் அடிச்சுவட்டில் பயணிக்கும் பாக்கியத்தை அல்லாஹ் எனக்கருளியதை எண்ணி முதலில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றேன் என்று நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் அல்ஹாஜ் முஹம்மத் நஜீப் பின் அமீர் ஆலிம் கூறினார். தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தால் இவ்வாண்டு நடைபெறவுள்ள தரம் 5 புலமை பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மூன்று நாள் இலவசக் கருத்தரங்கு நடத்தப் படவுள்ளது.**

**தர்கா நகர் ஸாஹிரா ஆரம்ப பாடசாலை, அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை, அல்ஹம்றா மகா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளிலும் கற்கும் சுமார் 335 மாணவர்களுக்காக செப்டம்பர் முதல் வாரத்தில் நடத்த முன்வந்துள்ளமை குறித்து நஜிப் ஹாஜியாரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

தொடர்ந்தும் அவரின் கருத்தில்,..

எனது சிறுபிராயத்தில் எனது வீட்டிலும் வறுமை கோரத்தாண்டவமாடியது. அதனால் ஏழைச் சிறுவர்கள் கல்வி பெறுவதில் உள்ள சிரமங்களை நான் அறிவேன். அத்தகைய சவால்களை முறியடித்தே நான் முன்னுக்கு வந்தேன். அதனால் கல்விக்கு வறுமை தடையாக அமையக்கூடாது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். அதனால் தான் வசதி குறைந்த மாணவர்களின் கல்விக்கு கை கொடுப்பதற்காகவே தான் கல்விப் பணியில் கால் பதித்துள்ளேன்.

**கேள்வி:** உங்கள் கல்விப் பணிகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன?

பதில்: முஸ்லிம்கள் தலை நிமிர்ந்து நிற்பதற்கு முதல் ஆயுதம் கல்விதான். அதற்காக நான் ஏற்கனவே பலதரப்பட்ட சமூகப் பணிகளிலும் அர்ப்பணிப்புச் செய்து கொண்ட நிலையில் சமூகத்தின் கல்வி விருத்தியை கருத்தில் கொண்டு தர்கா நகர் 'லோட்டஸ் வீதியில் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம்' என்ற பெயரில் இரண்டு மாடிகள் கொண்ட கட்டடம் ஒன்றை அமைத்து எனது பணியை முன்னெடுத்து வருகிறேன்.

**கேள்வி:** உங்கள் கல்வி நிலையம் ஊடாக ஆற்றி வரும் பணிகள் தொடர்பில்?

**பதில்:** எனது சொந்தக்காணியில் 2013ஆம் ஆண்டு அடிக்கல் நடப்பட்டு 2015 ஆம் ஆண்டு கல்வி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. எனது சமய, சமூகப் பணிகளின் ஒரு மைல்கல் என்றே இதனைக் குறிப்பிடலாம். இங்கு ஆரம்ப கட்டத்தில் பிரதானமாக மூன்று அம்சங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இன்னும் பலதரப்பட்ட சேவைகளும் விஸ்தரிக்கப்படவுள்ளன. அல்குர்ஆன் மத்ரஸா உள்ளிட்ட சன்மார்க்கம் சம்பந்தப்பட்ட போதனைகள் இங்கு இடம்பெறுகின்றன.

பாடசாலை கல்விக்கான துணைச் செயற்பாடுகள், உலக அறிவியல் தொடர்பான வழிகாட்டிகள் மற்றும் அறிவு விருத்திக்காக தமிழ், சிங்களம், ஆங்கிலம், அரபு ஆகிய மொழிகளிலான நாளிதழ்களும் பொது நூல்களும் அடங்கிய வாசிகசாலையொன்றும் இந்நிலையத்தில் இயங்கி வருகிறது. மூன்றாவது அம்சமாக சமூகநலப் பணிகளுக்கு திட்டமிடுவதற்கான மையமொன்றும் இங்கு அமையப்பெற்றுள்ளது. இவற்றின் மூலமே எனது பலதரப்பட்ட சேவைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. களுத்துறை மாவட்டத்திலுள்ள சுமார் 20க்கும் மேற்பட்ட முஸ்லிம் பாடசாலைகளில் தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடையும் சகல மாணவர்களுக்கும்




சான்றிதழ், பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்ட பெறுமதியான பரிசுப் பொருட்கள் வழங்கி அவர்களை ஊக்குவித்து வருகிறேன். சமூகத்திற்கு அளப்பரிய பணிசெய்து வரும் ஊடகவியலாளர்களையும் எமது கல்வி நிலையம் பல தடவைகள் கௌரவித்துள்ளது.

இதேபோன்று காலி மாவட்டத்தில் பனாபிட்டிய, பலபிட்டி, துந்துவை ஆகிய மூன்று பிரதேசங்களிலும் உள்ள முஸ்லிம் பாடசாலைகள் உள்வாங்கப்பட்டு மேற்படி பணி 2013 ஆம் ஆண்டு முதல் வருடா வருடம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிங்கள, முஸ்லிம் நல்லுறவை கட்டியெழுப்பும் நோக்கோடு தர்காநகர் மற்றும் அளுத்கம பகுதி சிங்கள பாடசாலைகளிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் நாம் கௌரவித்தோம். எனது பிரதேசத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வொன்றும் இந்த வருடம் முதல் மேற்கொண்டு வருகிறேன். எதிர்காலத்தில் களுத்துறை மாவட்டம் வரையில் இதனை விஸ்தரிக்கவும் உத்தேசித்துள்ளேன்.

இந்த வருடம் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் இப்பகுதியில் உள்ள மூன்று பிரதான முஸ்லிம் பாடசாலைகளிலும் பயிலும் 300க்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு தரம் 5 புலமைப் பரிசல் பரீட்சைக்கான மூன்று நாள் இலவச முன்னோடி கருத்தரங்கை தலைசிறந்த வளவாளர்களைக் கொண்டு நடாத்தும் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

பிள்ளைகள் மாலை நேரங்களை வீண் பொழுது போக்குகளில் கழிக்கக் கூடாது என்பதை கருத்தில் கொண்டு அல்ஹம்றா வித்தியாலய வளவில் சகல தேவைகளும் அமையப்பெற்ற பூரண அளவிலான 'நஜீப் ஹாஜியார் சிறுவர் பூங்காவொன்று' 2019 ஆம் ஆண்டு திறந்து திறந்து வைக்கப்பட்டது. அப் பூங்கா இன்று வரை சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அளுத்கம வீதிய தர்கா நகர் முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை மாணவிகள், ஆசிரிய, ஆசிரியர்களுக்கு தொழுகைக் கடமையை நிறைவேற்றுவதற்காக அழகிய அமைப்பில் தொழுகை அறையொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. விரைவில் நிர்மாணிப்புப் பணிகள் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கிறேன்.

**கேள்வி:** கல்வி தொடர்பாக மேற்கண்ட பணிகள் செய்துள்ள நீங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள கல்விப் பணிகள் என்ன?

**பதில்:** கல்வி அழியாச் செல்வமாகும். அப்பணி ஸதக்கத்துல் ஜாரியாவில் அடங்குகிறது. 'கற்பவனாக இரு; கற்றுக் கொடுப்பவனாக இரு; கற்பவனுக்கு உதவுபவனாக இரு; நான்காம் ஆளாக இருக்காதே;! அண்ணல் நபி(ஸல்) அவர்களின் பொன்மொழிக்கொப்ப நான்கற்பவர்களுக்கு உதவுபவனாக இருந்து பணியாற்றி வருகிறேன். தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளுக்கு இந்த வருடம் ஆரம்பித்துள்ள இலவச கருத்தரங்குகள் போன்று க.பொ.த. (சாதாரண) தர, உயர் தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும் அவ்வப்போது முற்றிலும் இலவசமாக கருத்தரங்குகளை நடாத்தவும் உத்தேசித்துள்ளேன்.

க.பொ.த. (சாதாரண) தரம், உயர்தரம் வரை பூர்த்தி செய்து மேற்படிப்பை தொடர்வதில் தகைமை குறைவாக இருப்பவர்கள் மற்றும் கல்வியை இடை நடுவில் கைவிட்டவர்கள், தொழிலின்றி சமூகத்திற்கு பாரமாகாமல் இருக்க வைப்பதற்காக தொழில்நுட்ப பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவவும் திட்டமிட்டு வருகிறேன். சீனன்கோட்டையிலுள்ள இக்ராஃ தொழில்நுட்பக் கல்லூரியை முன்னோடியாகக் கொண்டு பணியை முன்னெடுக்கவுள்ளேன்.

குறிப்பாக மாதர் சமூகத்திற்கான தையல் உட்பட குடிசை கைத்தொழிலை விருத்தி செய்வதற்கான பயிற்சி உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதும் எனது எண்ணக் கருவில் உள்ளன. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு உதவும் வகையில் அரபு, ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிப் பயிற்சிகளை வழங்குதலும் எதிர்கால முன்னெடுப்பாக உள்ளது.

**கேள்வி:** அபூதாபியில் நீதித்துறையில் தமிழ், சிங்கள உரைப்பெயர்ப்பாளராக




தொழில் பார்க்கும் உங்களால் மிகவும் பிரம்மாண்டமான பணிகள் தொடரப்படுவது எப்படி சாத்தியமாகிறது?

**பதில்:** இலங்கையில் ஏழைக் குடும்பத்தில் பிறந்து கல்வியை முடித்த கையோடு கோப்பி வியாபாரம், மாணிக்கம், மாசி வர்த்தகம் என்று பல தொழில்களிலும் ஈடுபட்டு கம்பளைப் பிரதேச பள்ளியொன்றில் பேஷ் இமாமாகவும் கடமையாற்றிய பின்னர் கூலித் தொழிலாளியாக அபுதாபி சென்ற பின்னரே எனது திறமை, ஆற்றலால் மொழிபெயர்ப்பாளராகி தற்போதுள்ள பதவியில் அமர்ந்துள்ளேன். எமது கல்வி நிலையத்தின் ஊடாக கல்வி, பள்ளிவாசல் நிர்மாணம் உள்ளிட்ட எனது பொதுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனது பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தர்கா நகர் லோட்டஸ் வீதியில் 25 பேர்ச்சஸ் காணி என்னால் கொள்முதல் செய்யப்பட்டு பிள்ளைகளுக்கு பகிர இருந்தேன். பின்னர் எனது மகன், மகள்மார்களின் விருப்புக்கமைய அந்நிலப்பரப்பிலே தான் எனது பெயரிலான கல்வி நிலையம் அமையப்பெற்று அது பொதுப்பணிகளுக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

சுருக்கமாக கூறினால் நான் ஏழையின் மகன், எனது பிள்ளைகளோ செல்வந்தனின் பிள்ளைகளாக உள்ளனர். அவர்களும் இன்று எனது அடிச்சுவட்டில் பரோபகாரப் பணிகளில் என்னை பயணிக்கச் செய்வதோடு அவர்களும் பொது நல முயற்சிகளில் ஆர்வம் காட்டி வருவது எனக்கு மேலும் பெருமையைத் தருகிறது.

**கேள்வி:** கல்விக்கு புறம்பாக உங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் பற்றி சுருக்கமாக கூறினால்...

**பதில்:** 1978 ஆம் ஆண்டு கூலித்தொழிலாளியாக அபுதாபி சென்றபோதும் 1982 ஆம் ஆண்டு அங்குள்ள நீதித்துறையில் மொழிபெயர்ப்பாளராக வாய்ப்புக் கிடைத்தது. 1985 ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்றதோடு சம்பள உயர்வும் பெற்றேன். அன்றிலிருந்து எனது பொதுநலப் பணிகள் சிறுகச் சிறுக முன்னெடுக்கப்பட்டது. ஒரு தசாப்தத்தின் பின்னரே அதாவது 1999க்குப் பின்னரே எனது சேவைகள் கலை கட்ட ஆரம்பித்தன.

நான் கல்விக்கற்ற காலி மத்ரஸாவின் கட்டட புனரமைப்பு பணிக்கும் உதவி செய்யக்கிடைத்தது. 2001இல் தர்கா நகர் தெருவுப் பள்ளி மூன்று மாடிக் கட்டடமாக புனர்நிர்மாணித்து கொடுக்கப்பட்டது. 2004இல் தர்கா நகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரிக்கான புதுக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. 2015 இல் திறந்து வைக்கப்பட்ட நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தின் தொழுகைக்கான அறை எனது தாயாரின் பெயரிலும் வாசிகசாலை எனது மனைவியின் பெயரிலும் அல்லாஹ்வுக்காக அர்ப்பணம் செய்துள்ளேன். அதேபோன்று 2021ஆம் ஆண்டு வவுனியாவில் உள்ள முஸ்லிம் அனாதை இல்லத்திற்கும் கட்டடமொன்றை அமைத்துக் கொடுக்கும் வாய்ப்பு கிட்டியது.

வைத்தியசாலைகளில் தூர இடங்களில் சம்பவிக்கும் ஜனாஸாக்களை உரிய இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக 24 மணி நேர இலவச அம்பியூலன்ஸ் சேவையொன்றை 2016ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகிறேன். களுத்துறை மாவட்டம் முழுவதற்கும் இச்சேவை கிடைப்பதுடன் காலி மாவட்டத்தின் அயல் ஊர்கள், கொழும்பு மாவட்டம் போன்றவற்றிற்கும் சில சமயங்களில் வழங்கப்படுவதுண்டு. தெருவுப்பள்ளி வளவில் ஜனாஸா குளிப்பாட்டும் அறையொன்றும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.



தர்கா நகர் பெரிய பள்ளி, தெருவுப் பள்ளி, பேருவளை மருதானை பள்ளி, மக்கொன பள்ளி, காலி சோலைப் பள்ளி ஆகிய பள்ளி மையவாடிகளில் நடமாடும் கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இது அபூதாபியில் உள்ள மையவாடியில் எனது மனைவி என்னுடன் பயணிக்கும்போது கண்ட காட்சியின் எண்ணக்கருவிலே உருவாக்கிக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தர்காநகர் அதிகாரிகொட மஸ்ஜிதுல் ரஹ்மான் பள்ளிவாசல், தர்கா நகர் வெலிப்பிட்டிய தக்வாப் பள்ளி, பனாப்பிட்டி ஜும்ஆப் பள்ளி, தர்காநகர் ஹாஜிலேன் பள்ளி, அதிகாரிகொட நூர் பள்ளி ஆகிய பள்ளிவாசல்களும் புதுமெருகூட்டப்பட்டு புனரமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 2016ஆம் ஆண்டு தர்கா நகரின் பெரிய பள்ளியின் மலசலகூடம், வுளுச் செய்யும் இடம் என்பன அபுதாபியை ஒத்ததான அமைப்பில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்றே 2017 இல் தக்வா பள்ளியின் பழைய கட்டட அமைப்பை மாற்றி அழகிய முறையில் கட்டிக் கொடுக்கப்பட்டது.



இலங்கையில் முதலாவது பள்ளிவாசலான பேருவளை மருதானை அப்ரார் பள்ளிவாசலில் பெண்களுகளுக்கான பிரத்தியேக தொழுகையறை வசதி மற்றும் பலப்பிட்டியவிலுள்ள குர்ஆன் மத்ரஸாவின் புனரமைப்புக்கும் உதவிகளை செய்துள்ளேன்.

2021இல் வெலிப்பன்னைப் பகுதியில் 30 வீடுகளுக்கு நீர் பெறும் வகையில் பாரியளவிலான கிணறு ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டது. களுத்துறை அல்விஸ் பிளேஸில் சிறியளவில் இருந்த ஸாவியாவை விசாலப்படுத்தி 2021இல் நவீன அமைப்பில் அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதே ஆண்டு ஹபுகஸ்தலாவையிலுள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு அங்குள்ள மக்கள் நீர் பெறுவதற்காக கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

கொழும்பு போபர்ஸ் லேன் புகாரி தக்கியாவின் மூன்றாம் மாடி நிர்மாணிப்பும் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டது. மேற்கண்ட எனது பணிகளுக்கு எனது மனைவி, மகள் மற்றும் புதல்வர்களான நிஹ்மத்துல்லாஹ், ரஹ்மத்துல்லாஹ், ஹிதாயத்துல்லாஹ் ஆகியோர் ஒத்துழைப்பும் அவர்களுக்கேயுரிய ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர். இவை யாவும் இணைந்தே எனது முயற்சிகளை வெற்றியின் பாதையில் அழைத்துச் செல்கின்றன என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**கேள்வி:** இறுதியாக நீங்கள் எமது சமூகத்துக்கு கூற விழைவதென்ன?

**பதில்:** எமது சமூகம் பல வழிகளிலும் உயர் கல்வியில் வளர்ச்சியடைவது அவசியமாகிறது. வசதி படைத்தோர் கல்விக்கும் பொருளாதார வசதிக்கும் கை கொடுத்துதவ வேண்டும். அத்துடன் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள தனவந்தர்களுடன் தொடர்பு உள்ளவர்கள் என்னைப் போன்று தனவந்தப் பெருமக்களின் உதவியை நாடி பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும். எமது புத்திஜீவிகளும் இது விடயத்தில் அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும்.

**பேருவளை**
**பீ.எம். முக்தார்**

கிராமங்கள் தோறும் எமது வரலாறுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டும். இதற்கு முன்னோடியாக நான் இந்த வருடம் ஆரம்பத்தில் 'தர்கா நகரின் பொக்கிஷங்கள்' என்ற நூலை வெளியிட்டுள்ளேன். தர்கா நகரின் சமய, சமூக மற்றும் கல்வி சார் நிறுவனங்களின் சுருக்கமான வரலாற்று குறிப்புகள் இந்நூலில் அடங்கியுள்ளன. எமது எதிர்கால சந்ததியினருக்கு எமது இருப்பு குறித்து உணர்ந்து கொள்வதற்கும் நீண்ட காலமாக நாம் இங்கு வாழ்வதை உறுதிப்படுத்தவும் இத்தகைய வரலாறுகள் மிகவும் உறுதுணையாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

இதேபோன்று 'நெஞ்சம் நிறைந்த நஜீப் ஹாஜியார்' என்னைப் பற்றிய நூலொன்றும் 2013இல் வெளிவந்தது. இதுவும் சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கு பிறரைத் தூண்டும் ஒரு பொக்கிஷமாகும். இதனாலே ஊடகவியலாளர் சிலரால் என்னைப் பற்றி எழுத முன்வந்த போதும் அதனை நான் அங்கீகரித்தேன்' என்றார்.





# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – I

1 மணித்தியாலம்

### புலமைப் பரிசில் பரீட்சை தரம் 5 பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**
**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. 





2. 


i. 58 ii. 56 iii. 54

3. 


i. 354 ii. 345 iii. 435

4. ஜூடியை விட சார்திக்கிடம் ரூபாய் 40 குறைவாக இருந்தது. அவர்களிடம் இருந்த மொத்த பணம் ரூபாய் 110 எனில் சார்திக்கிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?
i. ரூபாய் 35.00 ii. ரூபாய் 40.00 iii. ரூபாய் 70.00

5. 
இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 12 ii. 14 iii. 16

6. ஒரு பாத்தியில் முதலில் ஒரு மல்லிகையும் அடுத்து ஒரு ரோஜாவும் என மாறி மாறி செடிகள் நடப்பட்டிருந்தன. அப்பாத்தியில் மொத்தம் 21 செடிகள் இருக்குமாயின், மல்லிகை செடிகளின் எண்ணிக்கை யாது?
i. 9 ii. 10 iii. 11

7. நல்லோர் - தீயோர் எனில் வெந்நீர் - ………………..
i. நன்னீர் ii. தண்ணீர் iii. உவர் நீர்

8. டிவோன் 36m நீளமுள்ள ஒரு தடி வைத்திருந்தான். அவன் அதனை இரண்டாக உடைத்தபோது ஒரு துண்டு மற்ற துண்டின் இரு மடங்காக உடைந்தது. எனவே நீளம் கூடிய துண்டின் நீள அளவு யாது?
i. 24m ii. 12m iii. 28m

9. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் மீனாட்சி கோயிலுக்கு போவாள். நேற்றுமுன்தினம் அவள் கோயிலுக்கு போனாள் எனில் நாளை மறுதினம் என்ன கிழமை?
i. வியாழன் ii. வெள்ளி iii. சனி

10. ஒரு பெட்டிக்குள் 60 வாழைப்பழங்கள் இருந்தன. ஒவ்வொரு டசனிலும் 2 பழங்கள் பழுதடைந்தன எனில் பெட்டியினுள் இருந்த நல்ல பழங்கள் எத்தனை?
i. 50 ii. 60 iii. 40

11. 12, 14, 18, 24, …..?....... இக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய எண்ணானது?
i. 30 ii. 32 iii. 34

12. கீர்த்தி, புகழ்ச்சி, பெருமை, இகழ்ச்சி, மதிப்பு - இவற்றுள் வித்தியாசமான சொல்
i. இகழ்ச்சி ii. மதிப்பு iii. பெருமை

13. ஒவ்வொன்றும் 150g நிறையுள்ள 20 தேயிலை பெக்கட்டுகள் 3kg நிறையுள்ள ஒரு பெட்டியினுள் அடைக்கப்பட்டது. இப்போது பெட்டியின் மொத்த நிறை யாது?
i. 4kg ii. 5 kg iii. 6kg

14. **80 x 3 = ?** இதன் பெறுமதி
i. 240 ii. 320 iii. 410

15. ஒரு தேங்காயின் விலை ரூபாய் 30.00 ஆகும். 10 தேங்காய்கள் வாங்கினால் ஒரு தேங்காய்க்கு ஒரு ரூபாய் படி குறைப்பதாக வியாபாரி கூறினான். எனவே அருள் 20 தேங்காய்கள் வாங்க வேண்டுமானால் அவனுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும்?
i. ரூபாய் 600.00 ii. ரூபாய் 580.00 iii. ரூபாய் 560.00

16. 600 cm + 25 cm ஐ மீற்றர், சென்ரிமீற்றரில் எழுதினால்
i. 6m 250 cm ii. 62m 50cm iii. 6m 25cm

17. ஆறாயிரத்து பதினொன்று என்பதை இலக்கத்தில் எழுதுக
i. 6001 ii. 60011 iii. 6011

18. 


i. 20 ii. 22 iii. 24

19. தர்சன் இக்கடிகாரத்தினை பார்க்கும் போது இரவு வேளை ஆகும். இந்த நேரத்தினை நியம நேரமாக எழுதினால்

i. 00 : 10 ii. 12 : 10
iii. 24 : 10

20. 


i. 20 ii. 29 iii. 25

21. 


வினாக்குறி இடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய இலக்கம் யாது?
i. 6
ii. 5
iii. 4

22. இக்கூட்டில் அதிக தடவை இடம்பெற்ற இலக்கம் யாது?

| |
|---|
| 3 7 2 4 3 2 3 1 7 |
| 1 6 4 5 3 4 3 1 |

i. 4
ii. 1
iii. 3

23 1998 என்ற எண்ணுக்கு முன் பின் எண்கள் முறையே
i. 1999 – 1997 ii. 1997 – 1999 iii. 1999 – 1998

24. இருநூற்று ஐம்பதிலிருந்து இருநூற்று நாற்பத்தைந்தினை கழித்து ஐந்தை கூட்டினால் வரும் விடையை ரோமன் இலக்கத்தில் தருக.
i. X ii. XX iii. XV




**இத்தகவலைக் கொண்டு 25ம், 26ம் வினாக்களுக்கு விடை தருக.**

25. மைதானத்திற்கு தெற்கேயுள்ள இடம் எது?
i. நூலகம் ii. தபாலகம் iii. மரம்

26. வீட்டுக்கு கிழக்கே எவையுள்ளன?
i. மைதானம், தபாலகம் ii. நூலகம், மைதானம் iii. மைதானம், மரம்

27. தற்போது புழக்கத்திலுள்ள பெறுமதி கூடிய நாணயக்குற்றி எது?
i. ரூபாய் 20.00 ii. ரூபாய் 10.00 iii. ரூபாய் 05.00

28. 
இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?
i. 10 ii. 8 iii. 9

29. **[ ? ] + 900 = 1270**
i. 470 ii. 370 iii. 270

30. கடிகார முகமொன்றில் நிமிடமுள் இருமுறை வலம் சுழியாக சுற்றிவரும் கால அளவு யாது?
i. 2 மணித்தியாலங்கள் ii. 1 மணித்தியாலம் iii. 2 நிமிடங்கள்

31. உருளையொன்றிலுள்ள சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது?
i. 2 ii. 3 iii. 4

32. 
இத்திண்ம உருவிலுள்ள பகுதியை படத்தில் காட்டியவாறு வெட்டினால் பெறப்படும் மொத்த முகங்கள்
i. 1 ii. 2 iii. 3

33. ஒரு நூலகத்திற்கு 8 புத்தகங்கள் வீதம் 24 நூலகத்திற்கு எத்தனை புத்தகங்கள் கொடுக்கலாம்?
i. 188 ii. 192 iii. 202

34. ரூபாய் 1200.00 பெறுமதியான ஆடை ஒன்றினை வாங்கிய பிரனீஸ் அப்பணத்தினை கடைக்காரருக்கு கொடுக்க பயன்படுத்தக்கூடிய ஆகக் குறைந்த காசுத்தாள்களின் எண்ணிக்கை யாது?
i. 2 ii. 3 iii. 4

35. ஒரு kg தேயிலை ரூபாய் 750.00, 5 முட்டைகள் ரூபாய் 300.00 எனில் 500g தேயிலையும் 2 முட்டைகளும் வாங்க தேவையான பணம் எவ்வளவு?
i. ரூபாய் 450.00 ii. ரூபாய் 475.00 iii. ரூபாய் 495.00

36. 
இவ்வுருவில் நிறம் தீட்டப்பட்ட பகுதி முழு உருவில் என்ன பங்கு
i. 3/8 ii. 5/8 iii. 2/4

37. 250g நிறையுள்ள மா பெக்கற்றுகள் 7 வாங்கினால் அதன் மொத்த நிறை யாது?
i. 1kg 500g ii. 1kg 750g iii. 2kg 250g

38. 


i. 300g ii. 200g iii. 400g

39. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றமின்றி தோன்றும் எழுத்துக்கள்
i. BOC ii. BOT iii. AOT

40. 
படத்தில் காட்டப்பட்டவாறு கடதாசியை மடித்து துளையிட்ட பின்பு விரித்து பார்த்தால் பெறப்படும் உருவானது?




(10ஆம் பக்கம் பார்க்க)

(09 ஆம் பக்கத் தொடர்)

# வினாத்தாள் ii இற்கான விடைகள் (26.08.2022)

| | | |
|---|---|---|
| I. | 1) | பச்சைக் கம்பளம் விரித்தது போல் |
| | 2) | செழித்து |
| | 3) | பச்சை / வெள்ளை |
| | 4) | முயல், நாய் |
| | 5) | துள்ளித் துள்ளி, நறுக் நறுக் |
| | 6) | கீரைகள், காய்கறிகள் |
| II. | 7) | உறை |
| | 8) | அரம் |
| | 9) | பாறை |
| | 10) | வரை |
| III. | 11) | தாமரை |
| | 12) | பச்சை |
| | 13) | தோட்டம் |
| | 14) | பூக்கள் |
| IV. | 15) | பொன்விழா |
| | 16) | நுங்கு |
| | 17) | பட்டி |
| | 18) | அணிந்துரை |
| V. | 19) | (i) Happy Birthday |
| | | (ii) Hands up |
| | 20) | (i) லேனா |
| | | (ii) வம்பட்டு |
| VI. | 21) | 800 |
| | 22) | (i) 3 |
| | | (ii) 4 |
| | 23) | செவ்வாய்க்கிழமை |
| | 24) | 60 |
| | 25) | 240 |
| | 26) | 0 |
| | 27) | (i) 4/10 |
| | | (ii) 0.6 |
| | 28) | 8 |
| | 29) | 7 |
| VII. | 30) | 2 |
| | 31) | 1 |
| | 32) | 1 |
| | 33) | 3 |
| | 34) | 1 |
| | 35) | 3 |
| | 36) | 1 |
| | 37) | 2 |
| | 38) | 3 |
| | 39) | 1 |
| | 40) | 3 |
| | 41) | 2 |
| | 42) | 1 |
| | 43) | 2 |
| | 44) | 2 |
| | 45) | 3 |
| | 46) | 1 |
| | 47) | 1 |
| | 48) | 3 |
| | 49) | 1 |
| | 50) | 2 |
| | 51) | 3 |
| | 52) | 2 |
| | 53) | 1 |
| | 54) | 3 |
| | 55) | 2 |
| | 56) | 1 |
| | 57) | 2 |
| | 58) | 3 |
| | 59) | 1 |

## இலங்கை துணைத்தூதுவருடன் சதீஷ்குமார் விசேட சந்திப்பு



இந்தியாவுக்கான இலங்கையின் துணைத் தூதுவர் டாக்டர் துரைசாமி வெங்கடேஸ்வரன் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று (31) சென்னையிலுள்ள துணைத் தூதரகத்தில் நடைபெற்றது.

இலங்கை, இந்திய நாடுகளின் சமூக பொருளாதார நிலைமைகளின் பரஸ்பர பங்களிப்புகளில் இருதரப்பினருக்கும் முக்கியமான பல்வேறு விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியதுடன் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்திய மாநில அரசுகளின் தார்மீக உதவிகள் அடிப்படையிலும், பொதுநல அமைப்புகளின் உதவிகளை மேலும் வலுப்படுத்துவதோடு, தமிழகத்தை முன்மாதிரியாக கொண்டு மலையகப் பகுதிகளில் பெண்கள் மத்தியில் 'மகளிர் சுயஉதவி திட்டங்களை' அறிமுகம் செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

நீண்டகாலமாக தொடரும் கலாசார உறவை நினைவுகூர்ந்து மேலும் தொடர்பாடல்களை கட்டியெழுப்புவதற்காக தூதரகம் வாயிலாக ஆதரவை வழங்க வேண்டுமென்ற சதீஷ்குமாரின் கோரிக்கை அடிப்படையில் அரசியல் பாகுபாடின்றி தூதரகம் மட்டத்திலான ஆதரவு தொடர்ந்தும் பலப்படுத்தபடுமெனவும் துணைத் தூதுவர் தெரிவித்தார்.

புத்தளம் - கற்பிட்டி பகுதி மீனவர்கள்

# மண்ணெண்ணெய் இன்றி பல்வேறு அசௌகரியம்

### மானிய விலையில் பெற்றுத்தர கோரிக்கை

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் கற்பிட்டி பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்கள் மண்ணெண்ணெய் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக குறிப்பிடுகின்றனர்.

கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவற்றால் தமது மீன்பிடித் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்பொழுது மண்ணெண்ணெய் உள்ளிட்ட எரிபொருள் பிரச்சினையால் தமது வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கற்பிட்டி மற்றும் கண்டல்குழி மீனவர்கள் கூறுகின்றனர்.

பெருங்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு நாளாந்தம் நூறு லீற்றர் வரையும், சிறுகடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு நாளாந்தம் 20 லீற்றர் முதல் 25 லீற்றர் வரையும் மண்ணெண்ணெய் தேவைப்படுவதாகவும் மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



எனினும், மீனவர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி படகுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதாகவும் இது தமது மீன்பிடித் தொழிலுக்கு போதாது என்றும் மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மீன்பிடி படகுகளுக்கு மண்ணெண்ணெய் இன்மையால், ஒரு சில மீனவர்கள் வள்ளங்களைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலுக்கு செல்வதாகவும் கூறுகின்றனர்.

இதனால், பெரும் காற்று வீசும் போது வள்ளங்களை இயக்குவதில் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன், உயிர் ஆபத்துக்களும் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களும் காணப்படுவதாகவும் மீனவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனினும், அவை தமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மட்டுமே போதுமானதாகும் எனவும் விற்பனை செய்யும் அளவுக்கு மீன்கள் பிடிபடுவதில்லை எனவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு மாதக் கணக்கில் மண்ணெண்ணெய் இன்மையால் தமது வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், இந்த விடயம் தொடர்பில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடியாக கவனம் செலுத்துவதுடன், மீனவர்களுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொடுக்கவும், மீனவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.




முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களின் 5 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நாரஹேன்பிட்டியிலுள்ள அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன காரியாலயத்தில் புதன்கிழமை (31) நடைபெற்றது. பிரதம அதிதியாக இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் சார்பாக தூதுவராலய பொறுப்பதிகாரி ஹிஸாம் அபூதாஹா மற்றும் கௌரவ அதிதியாக கொழும்பு மாநகர சபை முன்னாள் மேயர் உமர் காமில் கலந்து கொண்டதுடன் விசேட பேச்சாளராக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க கலந்து சிறப்பித்தார். தலைமையுரையை நவமணி பத்திரிகை ஆசிரியரும் ஏ.எச்.எம். அஸ்வர் ஞாபகார்த்த குழுவின் தலைவருமான என்.எம்.அமீன் நிகழ்த்தியதோடு ஏற்பாட்டு குழு சிரேஷ்ட உறுப்பினர் சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படம்: ஏ.எஸ்.எம். ஜாவித்)

## அகில இலங்கை சமாதான நீதவான்



பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த இளம் பரோபகாரியும் சமூக சேவையாளருமான மொஹமட் மபாஸ் மஷ்ஹூர் அகில இலங்கை சமாதான நீதவானாக களுத்துறை மாவட்ட மேலதிக நீதவான் திரு. சம்பத் கமகே முன்னிலையில் (31) சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பேருவளை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை, கொழும்பு றோயல் கல்லூரி, ஜாமியா நளீமிய்யா ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், கொழும்பு பல்கலைக் கழகத்திலும் இங்கிலாந்தின் வேல்ஸ் பல்கலைக் கழகத்திலும் தனது மேற்படிப்பை பூர்த்தி செய்ததோடு அமெரிக்காவின் லிம்றா நிறுவனத்தின் LUTC, CIAM தொழில் சார் பட்டப் படிப்பை முடித்து, இலங்கையில் அந்த நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சியாளராகவும் நியமனம் பெற்றுள்ளார். இலங்கையின் முன்னணி நிறுவனங்களான ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ், ஜோன் கீல்ஸ், சொப்ட் லொஜிக், ஜனசக்தி, மேர்சன்ட் வங்கி ஆகிய முன்னணி நிறுவனங்களில் பணியாற்றியுள்ள இவர், பேருவளையைச் சேர்ந்த ஆசிரியர் மர்ஹூம் மஷ்ஹூர், ஓய்வு பெற்ற ஆசிரியை ஹாதிமா தம்பதிகளின் புதல்வராவார்.

## தர்கா நகரில் நாளை தரம் 5 புலமைப்பரிசில் கருத்தரங்கு

**(பேருவளை விசேட நிருபர்)**

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் தர்கா நகர் ஸாஹிரா ஆரம்ப பாடசாலை, அல் ஹம்ரா மகா வித்தியாலயம் மற்றும் அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை ஆகிய பாடசாலைகளில் இருந்து தோற்றவுள்ள சுமார் 135க்கு மேற்பட்ட மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நாளை 3ஆம் திகதி தர்கா நகர் லோட்டஸ் வீதியிலுள்ள தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கு அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைசிறந்த ஆசிரியர் ஒருவரினால் நடாத்தப்படும். 3ஆம் திகதி ஆரம்பமாகும் இக்கருத்தரங்கு 4ஆம் திகதியும் அதனைத் தொடர்ந்து வரும் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கல்வி நிலையத்தின் ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் ஆலோசனைக்கு அமைய இக்கருத்தரங்கு இடம்பெறுவதோடு, பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் தரம் 5 பொறுப்பாசிரியர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மாத்தளை வடக்கு ஸ்ரீவலம்புரி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா

**மாவத்தகம தினகரன் நிருபர்**

நோர்த் மாத்தளை ஏ 9 வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வலம்புரி விநாயகர் ஆலயத்தின் 13 ஆவது வருடாந்த தேர்த்திருவிழா வெகு விமரிசையாக இடம்பெற்றது.

காலை 5.30 மணியளவில் 108 அஸ்டோத்ர சங்காபிஷேகமும், விசேட வசந்த மண்டப பூஜையும் இடம்பெற்றது. மங்கள வாத்தியங்கள் முழங்க எல்லாம் வல்ல ஸ்ரீ வலம்புரி விநாயகர் தேரில் ஆரோகணித்து, பக்தர்கள் புடைசூழ வெளிவீதி உலா சென்று மீண்டும் ஆலயத்தை வந்து, பச்சை நிறமும் பவளச் செவ்வாயும் என்ற தத்துவப் படி பச்சை சாத்தி பக்தர்கள் காட்சியளித்து இரதத்திலிருந்து ஆலயத்திற்கு விநாயகர் எழுந்தருளும் உற்சவம் நடைபெற்றது.

நோர்த் மாத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஆலயத் தலைவர் சுப்ரமணியம் மலரன்பன் தேவா, உப தலைவர் கருப்பையா பெரியசாமி, செயலாளர் கே. ராமையா, பொருளாளர் கணபதி சத்திவேல், ஆலோசகர் முருகன் ரவிச்சந்திரன் எழுத்தாளர்களான மாத்தளை வடிவேலன், மாத்தளை மலரன்பன் உள்ளிட்ட பெரு எண்ணிக்கையிலான பக்த அடியார்களும் கலந்து கொண்டனர்.



ஜனனம் அறக்கட்டளை ஏற்பாட்டில்

## பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் அன்பளிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பல பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் அவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் கொழும்பு மாவட்டம் ஹோமாகம கல்வி வலயத்திற்குட்பட்ட அவிசாவலை புவக்பிட்டிய சீ.சீ ஆரம்ப தமிழ் வித்தியாலயத்தில் ஜனனம் அறக்கட்டளையின் மூலமாக வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள சுமார் 150 பெண்கள் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இவ் ஏழைக் குடும்பங்களுக்கு ஜனனம் அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஜனகனின் நிதி உதவியுடன் உலர் உணவுப் பொருட்கள் ஏற்பாடு செய்யப்பட்டு பாடசாலை அதிபர் திரு. செபஸ்டியனின் தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்வின் போது பிரதம அதிதியாக ஜனனம் அறக்கட்டளை பணிப்பாளரும் சர்வதேச இசை கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவரும் அதிவணக்கத்துக்குரிய பிதா அருட் கலாநிதி எஸ் சந்துரு பெர்னாண்டோ இவ் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்தார்.

## இக்கிரிகொல்லாவ அந்நூரில் 05 மாணவர்களுக்கு '3A' சித்தி

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் கல்வி வலய பிரிவின் இக்கிரிகொல்லாவ அந்நூர் மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) இம்முறை வெளியான க. பொ.த (உயர்தர பரீட்சை முடிவுகளின் பிரகாரம் வரலாற்றில் முதற் தடவையாக 05 மாணவர்கள் கலைப்பிரிவில் 03 ஏ சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர்களுடன் சேர்த்து 14 மாணவர்களுக்கு பல்கலைக் கழகம் நுழையும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளதாக அதிபர் எச்.எம். சஹீட் தெரிவித்தார்.

ஏ.பாத்திமா அஷ்ரபா 03 ஏ (கலை), எப்.ஆர். பௌசில் 03 ஏ (கலை), எம்.ஆர்.அரூசியா 03 ஏ (கலை), கே.பாத்திமா முபீதா 03ஏ (கலை), எம்.எஸ்.பாத்திமா சவ்மியா 03 ஏ (கலை), எம்.என். பாத்திமா ரிஸ்லா 02ஏ, பி (கலை), எம்.என். பாத்திமா இஸ்னாத் ஏ, 02 பி (கலை), ஏ. பாத்திமா அஸ்ரின் ஏ, 02 பி (கலை), எம்.டி. பாத்திமா ரிஹானா 03 பி (கலை), எம்.டி. பாத்திமா நிஸ்பா பி,02சி (கலை), எம். நசீம் பி, 02சி (விஞ்ஞானம்), எம்.பாத்திமா சிம்லா பி,சீ,எஸ் (விஞ்ஞானம்), ஜே.ஆர்.பாத்திமா ஜெஸ்லியா பி, 02சி, (தொழில் நுட்பம்), எஸ்.ஐயாஷ் ஏ, 02சி (தொழில் நுட்பம்), என்றவாறு சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார்.

## போதைப்பொருள் வைத்திருந்த மூவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஹெரோயின் போதைப்பொருளினை வைத்திருந்த சந்தேக நபர்கள் மூவரை கெக்கிராவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய கெகிராவ இஹலகம சந்தியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்கள் மூவரை கைது செய்துள்ளதுடன் ஆறு கிராமும் 800 மில்லி கிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளினை மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 20,23,26 வயதுடைய கெக்கிராவ மற்றும் இஹலகம பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

# பொன்னாலை - பருத்தித்துறை வீதி மக்கள் பாவனைக்கு திறப்பு

யாழ்.விசேட நிருபர்



யாழ்ப்பாணம், கீரிமலை ஊடான பொன்னாலை பருத்தித்துறை வீதியினை மக்கள் பாவனைக்காக முற்றாக திறந்து விட நடவடிக்கை எடுத்துள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த 30 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வீதி காணப்பட்ட போதிலும் கடந்த நல்லாட்சி காலப்பகுதியில் மக்கள் மீள் குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டு வீதியும் திறந்து விடப்பட்டது.

ஆனாலும் அதிகாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரையில் மக்கள் இவ்வீதியின் ஊடாக போக்குவரத்து செய்வதற்கு இராணுவத்தினர் அனுமதித்திருந்தனர். இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரையில் மயிலிட்டி பகுதியிலுள்ள இராணுவ பொலிஸ் காவலரனின் வீதிக்கு தடை போடப்பட்டு மக்கள் போக்குவரத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இவ்வீதியினை முழுமையாக மக்கள் பாவனைக்காக திறந்து விடுமாறு நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதனையடுத்து வீதி செப்டெம்பர் முதலாம் திகதியாகிய நேற்றைய தினம் முதல் 24 மணி நேரமும் திறந்திருக்கும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## மக்கள் வங்கி

### தங்க நகை அடகுப் பொருட்கள் ஏல விற்பனை

மக்கள் வங்கியின் பதுளை பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழ்க்காணும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 31.12.2020 ம் திகதிக்கு முன் அடகு வைக்கப்பட்டு 23.09.2022 ம் திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப. 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

| | கிளை/ சேவை நிலையம் | ஏல விற்பனைத் திகதியும், ஸ்தானமும் |
|---|---|---|
| 01 | **கிளைகள்:-** பதுளை" மஹியங்கனை, பசறை, ஹாலிஎலை, கந்தகெட்டிய, லுணுகலை" கிராந்துருகோட்டை" பதுளை முதியங்கனை **சேவை நிலையங்கள்:-** பதுளை, வெலேகடை, பதுளை பஸார் வீதி, மடுல்சீமை, தெமோதரை, எட்டம்பிட்டிய, மீகஹகிவுல, நவமெதகம, பதுளை லோவர் வீதி, பதுளை மாவட்ட செயலக காரியாலயம், ஊவா மாகாண சபை | 2022.09.24ம் திகதி மற்றும் 2022.09.25ம் திகதி பதுளை கிளைத் தொகுதியில் |
| 02 | **கிளைகள்:-** வெலிமடை, கெப்பெட்டிபொல, ஊவாபரணகம, பொரலந்தை பண்டாரவளை, ஹப்புத்தளை, கொஸ்வத்தை, ஹல்தும்முல்லை, தியத்தலாவை. **சேவை நிலையங்கள்:-** வெலிமடை நகரம், லூணுவத்த, மெதவெல, போகஹகும்புர பண்டாரவளை நகரம், பண்டாரவளை சிங்ஹகிரி, பொரஹெட்டிய, பல்லகெட்டுவ | 2022.09.24ம் திகதி மற்றும் 2022.09.25ம் திகதி பண்டாரவளை கிளைத் தொகுதியில் |

மேற்குறிப்பிடப்பட்ட படி நடைபெறவுள்ள இவ் ஏலவிற்பனையை அறிவித்தல் எதுவுமின்றி வங்கியின் விருப்பத்திற்கேற்ப இரத்துச் செய்யவோ ஒத்தி வைக்கவோ ஒன்றிணைந்து நடாத்தவோ அல்லது ஏலவிற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைக்கவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிக்கு அதிகாரமுள்ளது.

**பிரதேச முகாமையாளார்.**
**மக்கள் வங்கி**
**பிரதேச பிரதான அலுவலகம்,**
**இல. 24, R.H. குணவர்த்தன மாவத்தை,**
**பதுளை.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating. AA - Brand Finance Rating

## இலங்கை துறைமுக அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/05/PT/6367(MP) | 60 Nos. Twist Lock Assemblies for RAM Spreaders Fitted to STS / RTG Cranes at JCT | 85,000.00 | 1,000.00 | 29-09-2022 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6369(MP) | Spares of Stinis Twin Lift Telescopic Spreader | 32,000.00 | 1,000.00 | 29-09-2022 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/16/015 | Restoration of Crane Monitoring System of Transfer Cranes at JCT | 250,000.00 | 3,500.00 | 22-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/08/022 | 02 Nos. 20KVA Online UPS Units | 40,000.00 | 1,000.00 | 22-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/14/054 | 50 Nos. Semi – Maintenance Batteries 12V 150 AMPH | 18,000.00 | 1,000.00 | 22-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/17/052 | 04 Nos. Mobile Crane Tubeless Tyres 1800 X 25 32 PLY | 55,000.00 | 1,000.00 | 22-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/19/PT/17/059 | 1100 Mtrs. Cloth Drill | 18,000.00 | 1,000.00 | 23-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/04/056 | Shirts Short / Long Sleeves – 2500 Nos. | 25,000.00 | 1,000.00 | 23-09-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/07/053 | 5040 Liter of Transfluid Oil P-157 | 30,000.00 | 1,000.00 | 23-09-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 செப்டெம்பர் 02ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள் :** 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638

## தேசிய கல்வி நிறுவகம்

### ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான அழகியல் டிப்ளோமா பாடநெறி

(சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரிய கல்வித் துறையினால் முன்னெடுக்கப்படும் "ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான அழகியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.0 பாடநெறியின் தன்மை**

1.1 இந்த டிப்ளோமா 30 திறமை மட்டங்கள் (credits) கொண்டது
1.2 ஆரம்பக் கல்வியுடன் தொடர்புபட்ட அடிப்படை அழகியல் கல்வி அறிவு, திறன்கள் மற்றும் ஆற்றல்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக இந்த கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.
1.3 நிகழ்நிலை மற்றும் நேரடி அமர்வுகள் என்பனவாக கலவை கற்றல் (Blended learning) முறை மூலம் பாடநெறி நடைபெறும்
1.4 பாடநெறி இரு மொழிகளில் (சிங்களம் மற்றும் தமிழ்) நடைபெறும்.

**2.0 பாடநெறியின் கால எல்லை**

- வார இறுதி நாட்கள்- ஓராண்டு காலமாகும் (02 செமஸ்டர்கள்)

**3.0 விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகள்**

கீழ்வரும் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்

3.1 அரச அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் தரம் 1 முதல் தரம் 5 வகுப்புகளில் கற்பித்தல் பணியில் ஈடுபடுவோர்
3.2 ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள்/ ஆரம்பக் கல்வி விடயப் பணிப்பாளர்கள்/ ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்தை வழிப்படுத்தும் விரிவுரையாளர்கள்/ ஆரம்பக் கல்வி ஆசிரியர் கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்தோர்
3.3 இலங்கை கல்வி நிருவாக சேவை/ அதிப/ ஆசிரியர் கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்தவராயிருத்தல், பிரிவெனாக்களின் தலைவராக இருத்தல்
3.4 தேர்ந்தெடுக்கப்படும் வருடத்தில் (2022) தேசிய கவ்வி நிறுவகத்திலோ அல்லது வேறும் பல்கலைக்கழகங்களிலோ அல்லது நிறுவனங்களிலோ வார இறுதி நாள் பாடநெறி ஒன்றுக்கான அனுமதி பெற்றிராதிருத்தல்

**4.0 ஆட்சேர்க்கும் முறை**

சகல விண்ணப்பதாரிகளும் தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்

**5.0 விண்ணப்பிக்கும் முறை**

5.1 இதில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 அளவான கடதாசியில் தனிப் பக்கத்தில் தயாரிக்க வேண்டும்.
5.2 தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் கணக்கிலக்கம் 607628 க்கு விண்ணப்பப்படிவ கட்டணமாக ரூபா 500/= வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சட்டின் மூலப் பிரதியை விண்ணப்பத்தின் பின்பக்கத்தில் ஒட்ட வேண்டும். பணத்தைச் செலுத்தும் போது மணிஓடர்கள் மற்றும் இலங்கை வங்கி தவிர்ந்த வேறு வங்கிகளில் செலுத்தப்பட்ட பண வைப்புப் பற்றுச்சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதைக் கவனத்திற் கொள்க.
5.3 வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட, தேசிய அடையாள அட்டை, நியமனக் கடிதத்தின் புகைப்படப் பிரதி மற்றும் சேவைச் சான்றிதழ் என்பனவற்றை இணைத்து அனுப்பவும் (மேற்குறிப்பிட்ட ஆவணங்களைத் தவிர்ந்த வேறு ஆவணங்கள் அவசியமில்லை)
5.4 பெயர் மற்றும் சுய முகவரி எழுதப்பட்ட ரூபா 15 முத்திரை ஒட்டிய கடித உறை 9'X4"யுடன் 2022.10.03 திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் பணிப்பாளர், ஆசிரியர் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவனம், மஹரகம எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
5.5 2022.10.03 திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5.6 விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின் மேல் மூலையில் "DAPE 2022/T" எனவும் குறிப்பிடவும். மாதிரி விண்ணப்படிவத்தை தேசிய கல்வி நிறுவகத்தின் இணயத்தளத்தில் (www.nie.lk/) தரவிறக்கம் செய்யலாம்
5.7 விண்ணப்பப்படிவம் தபால் மூலமும் நிகழ்நிலை மூலமும் (online application) Njrpa கல்வி நிறுவகத்தின் இணயத்தளத்தில் (றறற.நை.டம.ஃ.) சமர்ப்பிக்க முடியும்.

**6.0 கட்டணம் அறவிடல்**

| | |
|---|---|
| விண்ணப்பப்படிவ கட்டணம் | ரூபா 500.00 |
| பதிவுக் கட்டணம் | ரூபா 1000.00 |
| பாடநெறிக் கட்டணம் | ரூபா 30,000.00 |

- பாடநெறிக் கட்டணம் இரு தவணைகளில் செலுத்தலாம்.
  - பதிவு செய்யும் போது 15000/= செலுத்த வேண்டும்
  - மிகுதி 15000/= பதிவு செய்யப்பட்டு 6 மாத காலத்துக்குள் செலுத்துதல் வேண்டும்
  - கட்டணத்தை மீள்பரிசீலிக்கும் அதிகாரம் தேசிய கல்வி நிறுவனத்தின் பேரவைக்கு உண்டு. அத்துடன் உங்களது விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படுமாயின் விண்ணப்பப்படிவ கட்டணம் மீள செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.

**7.0 பாடநெறி நடாத்தப்படும் நிலையம்**

7.1 தேசிய கல்வி நிறுவகம்
7.2 பிரயோக அமர்வுகளுக்கு தேசிய கல்வி நிறுவகத்துக்கு வருகை தரல் அவசியமாகும்.

**கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ண**
**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## National Institute of Education

### Application for Diploma in Aesthetics for Primary Teachers - 2022

01. Medium Sinhala ☐ Tamil ☐ (Tick the releveant box)
02. Name with Initials
03. Names Denoted by Initials
04. Date of Birth Age Gender
05. NIC Number
06. Private Address (Permanent)
District
Telephone NO.
E-mail
07. Designation
08. Offical Address
District
09. Telephone No.
10. Educational Qualification G.C.E. (O/L) (Aesthetic Subject)

| Subject | | Sinhala Medium | Tamil Medium |
|---|---|---|---|
| Art | | | |
| Music | Oviental | | |
| | Western | | |
| | Caranatic | | |
| Dance | Dance (Sri Lanka) | | |
| | Barathanattyam | | |
| Drama & Diyathall | | | |

11. Educational Qualification G.C.E. (A/L) (Aesthetic Subject)

| Subject | | Sinhala Medium | Tamil Medium |
|---|---|---|---|
| Art | | | |
| Music | Oviental | | |
| | Western | | |
| | Caranatic | | |
| Dance | Dance (Sri Lanka) | | |
| | Barathanattyam | | |
| Drama & Diyathall | | | |

I certify that the information given above is true and correct. I further state that the receipts for the fees for the application
processing and admission test are attached.

Date: …………………………..                ……………………………….. Signature of the candidate

**Recommendation of the Department Head**

I recommend and forward the application of Rev/Mr/Ms ………………………………………………...................

Date: …………………………..                ……………………………...... Signature (Official stamp




# தெங்கு மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் ஊடாக உலகை வெல்லும் வழியைக் கூறும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை


கீர்த்தி வீரசிங்க – தலைவர், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தெங்கு விலைமதிப்பற்ற வளமாகும். அதனால் பெருமளவு பயன்களை பெற முடியும். அன்று தொட்டு இன்றுவரை வரலாற்றில் தெங்கு சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி மூலம் ஈட்டிய உச்ச வருமானத்திற்கு உரிமை கொண்டாட இலங்கையால் முடிந்துள்ளது. இந்த ஆண்டில் அதன்மூலம் எதிர்பார்க்கப்படும் வருமானம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அந்த இலக்கை விஞ்சி இந்த ஆண்டில் அந்நியச் செலாவணியை ஈட்டும் என்பது நிச்சயம்.

அதன்படி இந்த ஆண்டில் கடந்த ஆறு மாதத்தில் மாத்திரம் 600 மில்லியன் டொலர் பணப் பொதியை இந்த நாட்டுக்கு ஈட்டுவதற்கு தெங்கு மற்றும் அது சார்ந்த உற்பத்தி வழியாக முடியுமாகியுள்ளது. இது நாட்டுக்கு பெருமை மற்றும் கௌரவமாகும். முன்மொழியப்பட்ட ஹம்பாந்தோட்டை தெங்கு மற்றும் அது சார்ந்த தொழில்துறை மேம்பாட்டு வலயமும் பணிகளை ஆரம்பித்த பின் எதிர்வரும் 5 ஆண்டுகளுக்குள் 5 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு எதிர்பார்த்துள்ளது.

அதேபோன்று பொலன்னறுவை, அரலகன்விலவில் அமைந்துள்ள 1500 ஏக்கர் முழுவதும் பரந்துள்ள தெங்கு பயிர் நிலத்தில் ஒரு ஏக்கரில் கிடைக்கின்ற விளைச்சலை மாத்திரம் கருத்தில் கொண்டபோது அது தெங்கு முக்கோணப் பகுதியில் ஏக்கர் ஒன்றில் கிடைக்கின்ற விளைச்சலை விடவும் 3 மடங்கு அதிகம் என்பது தெரியவந்துள்ளது.

இந்த முறைமை மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை உலகை வெல்லும் வழியை அந்த பயிர்ச்செய்கையாளர்களுக்கு காண்பித்துள்ளது. இந்த நாட்டில் உலகின் மிக அதிக தெங்கு சார்ந்த உற்பத்திகளை குறைந்த விலைக்கு மக்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டு கப்றுக்க இசுரு-சல விற்பனையகங்களை நாராஹென்பிட்ட தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை வளாகம் தவிர கொழும்பு கோட்டை உட்பட பகுதிகளில் அமைப்பதற்கு அந்த அதிகாரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நாட்டு தெங்கு மற்றும் அது சார்ந்த தொழில்துறையை முன்னெற்றும் பணியில் ஈடுபடுபவராக தெங்க அபிவிருத்தி அதிகாரசபையின் தற்போதைய வழிநடத்துனர் இல்லாவிட்டால் அதன் தலைவர் கீர்த்தி வீரசிங்க அவர்கள் உள்ளார். நாம் இப்போது அவர் கூறுவதை கேட்போம்,

"இந்த பயணம் பூமிக்கு மேலால் சௌகரியமாக வந்த ஒன்றல்ல. கொரோனா பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி காரணமாக நாம் குறைச்சலின்றி அடி வாங்கினோம். என்றாலும் நாம் தொய்வின்றி அதற்கு முகம்கொடுத்தோம். இன்று நான் 18 மணி நேரம் கடமை பணிகளில் ஈடுபடுகிறேன். உயர் முகாமைத்துவம் தொடக்கம் பணியாளர்கள் அனைவரதும் பங்களிப்பு இன்று தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை பெற்ற முன்னேற்றத்திற்கு காரணமாகியுள்ளது. எமது வளம் தெங்கு மற்றும் அது சார்ந்த தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள இந்நாட்டு மக்களாகும்.

அவர்களின் பங்களிப்பு மீதே இந்த வெற்றி கட்டியெழுப்பப்பட்டுள்ளது. உண்மையிலேயே இன்றை விடவும் அதிக வேலைகளை நாம் எதிர்காலத்தில் நாட்டுக்காக செய்ய வேண்டி உள்ளது. நாம் எதிர்காலத்திலும் அந்தப் பயணத்திற்கு தலைமைத்துவத்தை வழங்க தயாராக உள்ளோம். இங்கு நாம் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பாத்திரண அவர்களையும் அருந்திக பெர்னாண்டோ அவர்களையும் ஞாபகப்படுத்த வேண்டும். அவர்களின் ஊக்குவிப்பு இந்தப் பயணத்திற்கு தூண்டுதலாக இருந்தது என்பதை கூற வேண்டும்..."

நாம் தற்போது இந்நாட்டு தெங்கு மற்றும் பெறுமதி சேர்க்கும் தொழில்துறை வரலாற்றின் புது யுகத்திற்கு திரும்புவோம்.

கொரோனா பெருந்தொற்று, எரிபொருள் நெருக்கடி போன்ற சிக்கல்களுக்கு மத்தியில் கடந்த 2021 மற்றும் 2020 ஆகிய ஈராண்டுகளில் முறையே 840 அமெரிக்க டொலர்கள் மற்றும் 661 அமெரிக்க டொலர்களை ஈட்டுவதற்கு இந்நாட்டினால் முடியுமானது. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை இவ்வாறான பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையாளர்கள், தெங்கு மற்றும் அது சார்ந்த பல்வேறு தொழில்துறையாளர்களுடன் பின்வாங்காது, அர்ப்பணிப்புடன் பணியாற்றியே இதனை அடைந்தது. மேலும் அந்தப் பணியில் பங்குதாரராவதற்கு இந்நாட்டு மக்களுக்கு முடியும். தொழில்முயற்சியாளர் என்ற வகையில் தெங்கு மற்றும் அது சார்ந்த உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்ப்பதற்கு ஒருபோதும் அதிக பணம் தேவைப்படாதது ஒரு முக்கியத்துவமான அம்சமாகும்.

உண்மையாகவே, 10 தேங்காய் சிரட்டைகளால் மாத்திரம் ஒரு அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியை வெளிநாட்டுக்கு செல்லாது இந்நாட்டில் வாழ்ந்துகொண்டே இலகுவாக வெளிநாட்டில் இருந்து ஈட்ட முடியும் என்பது தெரிந்தால் சிலநேரம் நீங்கள் அதிர்ச்சி அடையக் கூடும். என்றாலும் அது உண்மையாகும். உலகை வெல்லும் வழி கப்றுக்க என்பது இந்நாட்டுக்கு நன்றாகவே தெளிவாகியுள்ளது. அதற்கு அறிவுறுத்தல்களை வழங்கி கை கொடுப்பதற்கு தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை எப்போதும் தயாராக உள்ளது. அதற்கு 0117 - 499999 தொலைபேசி இலக்கம் திறந்தே உள்ளது. சர்வதேச அளவில் தெங்கு மற்றும் அது சார்ந்த உற்பத்திகளுக்காக பாரிய சந்தை ஒன்று திறந்துள்ளது. உணவு, பானங்கள் தயாரிக்கும்போது மாத்திரமல்ல, பெரும்பாலும் அன்றாடம் வீண் விரயம் செய்யும் தென்னையின் ஏனைய பாகங்கள் மூலமும் பலனைப் பெற முடியும்.

**நாம் இப்போது அந்த புதிய சந்தை போக்குகளை பார்ப்போம்,**

சுத்தமான தேங்காய் எண்ணெய் (Virgin Coconut Oil) 60 பாகை செல்சியஸுக்கு குறைவான வெப்பநிலையில் பிரித்தெடுத்தல் இதன் சிறப்பம்சமாகும். விட்டமின்கள் மற்றும் ஒக்ஸினேற்றங்களை கொண்டுள்ளது. ஆனால் அந்த எண்ணெய் அடுப்பில் வைத்து உணவு சமைப்பதற்கு அல்ல. நாளொன்றுக்கு 10ml அளவு அறுந்த முடியும். சலாட் வகைகளை தாயரிப்பது போன்றவற்றுக்கும் வளர்ந்த நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

எம்.சீ.டீ. எண்ணெய் (Medium Chain Triglyceride) உலகில் ஊட்டச்சத்து மிக்க உணவாக அங்கீகரிக்கப்படுவது தாய்ப்பாளாகும். அதன் உள்ளடக்கம் லோரிக் அமிலம், வெள்ளை தேங்காய் எண்ணெய் ஊடாக பிரித்தெடுக்க முடியும். அழுகுக் கலைத் துறைக்கு இதனால் அதிக பங்களிப்பு கிடைத்துள்ளது. தோலின் ஆரோக்கியத்திற்கு பெருதும் காரணமாகின்ற வகையில் பல அழகுக்கலை உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. அதேபோன்று உலகின் மிகச் சிறந்த ஆற்றல் தரும் பானமாகும். நாளோன்றுக்கு 2 தேக்கரண்டி எம்.சீ.டீ. எண்ணெய்யை குடித்தால் 12 மணி நேரம் உணவின்றி இருக்க முடிவதன் மூலம் அதன் சக்தியை எல்லோராலும் உணர முடியுமாக இருக்கும். உலகில் இதனை Brain Cell Fuel என்று அழைக்கப்படுவது இதன் காரணமாகவாகும். "புளட் ப்ரூப் கோப்பி" உலகில் அதிக விலை கொண்ட பிரபலமான பானமாகும். எம்.சீ.டீ அதன் பிரதான கூறாகும்.

உடல் பருமன் போன்ற சிக்கல்களும் இதனால் ஏற்படாது. அந்த அநாவசியமான அல்லது பாதகமான கொழுப்பு எதுவும் அதில் இல்லை என்பதே இதற்குக் காரணமாகும். ஆனால் சிறப்பம்சம் என்னவேன்றால் மிக விரைவில் இதன் ஊட்டச்சத்துகளை உடல் உள்வாங்கும் என்பதாகும். அது எந்த அளவு என்று கூறினால், உணவு செரிமாணம் மூலம் பொதுவாக உடலுக்கு சக்தி வழங்கும் பல படிகள் இருந்த போதும், எம்.சீ.டீ அந்த படிகளை பாதியை விடவும் குறைவாக மட்டுப்படுத்தி மிகக் குறுகிய காலத்தில் உடலுக்கு சக்தியைத் தரும். மூளைக்கு ஆற்றல் தரும் இது ஞாபக சக்தி, முடிவுகளை எடுக்கும் ஆற்றல், மன ஒருமைப்பாடு போன்ற பயன்களை தருகிறது.

இந்நாட்டின் நவீன தொழிற்சாலைகள் பலதும் 500% க்கும் அதிக பெறுமதியை சேர்ப்பதன் மூலம் எம்.சீ.டீ எண்ணெய்யை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபடுகின்றன. என்றாலும் இன்னும் உலகில் வளர்ந்த நாடுகளில் அதற்கு இருக்கின்ற அதிக கேள்வியை பூர்த்தி செய்வதற்கு இந்நாட்டினால் முடியாமல் போயுள்ளது. அதன்படி தொடர்ந்து அந்த தொழில்துறைகளை மேம்படுத்தும் தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கான வழிகாட்டல் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

தேங்காய் சிரட்டைகளால் புதிய பரிமாணத்திலான செயற்படுத்தப்பட்ட கார்பன் (Activated Carbon) சிரட்டை கரி அன்றுபோலல்ல இன்று உலகுக்கு இன்றியமையாத ஒன்றாக உள்ளது. செயற்படுத்தப்பட்ட கார்பன் போன்ற தேங்காய் சிரட்டைக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்காக உச்ச வரவேற்பு உலகில் உள்ளது. கழிவுகள், நச்சுப் பொருட்களை உடன் உறிஞ்சுகின்ற திறன் இங்கு முக்கியமானதாகும். வயிற்றில் உள்ள விசத்தை அகற்றுவது உட்பட மருத்துவ விஞ்ஞானம் உட்பட புதிய துறைகளை நோக்கியும் தெங்காய் சிரட்டையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற கார்பன் உள்ளடக்கப்பட்ட உற்பத்திகள் உள்ளன. உலகில் பல நாடுகளில் நச்சு இரசாயன தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பு வழங்குகின்ற முகக் கவசம் போன்றவையும் இதன் ஊடாக தயாரிக்கப்படுகிறது. இந்த நாட்டுக்கு இலகுவாக அந்தத் தொழில்துறையை வெற்றி கொள்ள முடியும். அதற்குள் நுழையும் தொழில்முயற்சியாளர்களுக்கு ஆரம்ப மூலதனம் ஒன்று தேவைப்படாது.

**தும்பினால் புதிய வழிகள்**

சுற்றுச்சூழல் வெப்பமடைதல் உலகுக்கு சிக்கலான ஒன்றாக மாறியுள்ளது. அதற்கு ஈடுகொடுப்பதற்கு பசுமை பசுமையில்லம் போன்றவற்றுக்கு உலகம் செல்ல வேண்டும். அதில் நிலத்தின் மீது பயிரிடுவதை விட தும்பின் மீது பயிரிடுவது புதிய கண்டுபிடிப்பாக உள்ளது. அது மிக இலகுவானது. செலவு குறைவானது. அதற்கு உரம் தேவைப்படுவது நிலத்தில் பயிரிடுவதை விட 1/3 அளவு குறைவாகவாகும். நீரும் குறைவாகவே தேவைப்படுகிறது. கிருமிநாசினிகளின் பாதிப்பும் இந்த முறையில் குறைவாகும். மண்ணரிப்பை குறைப்பதற்கு மண்ணுடன் தும்பையும் கலந்து பல நாடுகள் தீர்வுகளை காண்கின்றன. நோஜான் முறையில் தென்னை பயிரிட்டு நாடுகள் தற்போது இந்த வழிக்கு பிரவேசிக்க முயல்கின்றன. அது இந்த நாட்டுக்கு முன்மாதிரியாக இருக்கும்.

**தேங்காய் பாலினால் ஐஸ்கிரீம் மற்றும் இனிப்புப் பண்டங்கள்**

உலகில் புதிய போக்கு மற்றும் கேள்வி இதற்கு கிடைத்துள்ளது. விலங்குக் கொழுப்புக்கு பதில் சைவத்தை விரும்புகின்ற மக்கள் இதில் நாட்டம் காட்டுகின்றனர். பல்வேறு சுவையூட்டிகளை சேர்த்து உலக மக்கள் பல்வேறு சுவைகளில் தேங்காய் பாலில் தயாரித்த ஐஸ்கிரீமை சுவைக்கின்றனர். இதில் உள்ளடங்கும் பக்டீரியா, பூஞ்சை, வைரஸ் கொல்லி பண்பு அதிக மக்களின் விருப்புக்கு மற்றொரு காரணியாகும்.

அதேபோன்று இது உணவுச் சுவை அதிகரிப்பதற்கு காரணியாகும். பெரியவர் சிறியவர் அனைவர் இடையேயும் பிரபலத்திற்கு காரணியாகும்.

**தேங்காய் சாற்றில் இருந்து பட்டர்**

விலங்குக் கொழுப்புக்கு பதில் சைவ உணவு விரும்பிகள் அனைவருக்கும் சிறந்தது. உலகில் அதிக கேள்வி இதற்கு உள்ளது. இந்த நாட்டுக்கு வெளிநாட்டு சந்தையில் அதிக கேள்வி உள்ள இதில் ஈடுபாடு காட்ட முடியும்.

**தேங்காய் ஊடாக தரமான சீனி**

நீரிழிவு போன்ற நோய்கள் காரணமாக சீனியை பலரும் கவனமாக பயன்படுத்துகின்றனர். என்றாலும் இயற்கையான இனிப்புச் சுவை நோய்களுக்கு காரணியாவதில்லை என்பதை ஆய்வுகள் கூறுகின்றன. அதன்படி தெங்காய்ச் சாற்றில் சீனி தயாரிப்பதற்கு இந்த நாட்டுக்கு முடியுமாக உள்ளது. இந்நாடு போன்று வெளிநாடுகளிலும் இதற்கு நல்ல சந்தை ஒன்று ஏற்பட்டுள்ளது. வீட்டில் இருந்தே மேலதிக வருமானத்தை இதனால் ஈட்ட முடியும்.

**பதிவு – நுவன் மஹேஷ் ஜயவிக்ரம**
**படம் - சுதத் நிஷாந்த**


2022 சர்வதேச தெங்கு தினத்தை பெருமையுடன் கொண்டாடுவோம்

நாட்டுக்கு டொலரை கொண்டுவரும் உற்பத்தித் தொழில்துறைகளில் இலாபம் ஈட்டும் தொழில்துறையில் தெங்குத் தொழில்துறை முன்னணியில்






2025இல் தெங்குத் தொழில்துறையில் 1.5 பில்லியன் டொலர் ஏற்றுமதி இலாபம்
முழு ஏற்றுமதி இலாபம் (மில்லியன் அமெ. டொ.)

தெங்குத் தொழில்துறையின் வளர்ச்சிக்காக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் வழங்கப்படும் சேவைகள்

- தெங்குத் துறைக்கு பிரவேசிக்கின்ற முதலீட்டாளர்களுக்கு முழுமையான தீர்வைக் கொண்டதான சேவை ஒன்றை வழங்கல்
- இலங்கையின் தெங்கு உற்பத்திகளை சர்வதேச சந்தைக்காக மேம்படுத்தல்
- தொழில்துறையினர் மற்றும் ஏற்றுமதியாளர்களை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்.
- தொழில்துறையை தரப்படுத்துவதுடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- தொழில்துறை தொடர்பில் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் விலைத் தரவுகளை சேகரித்தல், ஆய்வு மற்றும் வழங்கல்.
- நிதி சார் திட்டங்களை செயற்படுத்தல்.
- தொழிற்சாலை முகாமைத்துவம் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- தெங்கு சார்ந்த முறையற்ற தொழில்துறைகளை கட்டியெழுப்புவதற்காக கை இயந்திரம் மற்றும் உபகரண தொகுதிகளை வழங்கல்.
- தொழில்துறைகளின் நிலை மற்றும் பண்பை மேம்படுத்தும் நோக்கில் தொழில்நுட்ப அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- துறைசார் அதிகாரிகள் மூலம் முன்மாதிரிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் ஆய்வுகூடம் மூலம் பகுப்பாய் மற்றும் அறிக்கை வெளியிடல்.
- நடமாடும் ஆய்வுகூட சேவை.
- தேங்காய் ஏல விற்பனை நடத்துதல்.

முதலீட்டாளர்களே தெங்கு தொழில்துறையில் ஈடுபடுங்கள் - அந்நியச் செலாவணியை ஈட்டுங்கள்

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

54, நாவல வீதி, நாராஹென்பிட்ட, கொழும்பு 05

Tel: + 94 11 2502501 - 4 Fax: + 94 11 2508729 Web: www.cda.gov.lk



# சர்வதேச தெங்கு தினம்

செப்டெம்பர் 02, 2022

உலகில் காணப்படும் பெருந்தோட்டப் பயிர்களில் தென்னை ஒரு முக்கிய பயிராகும். கொகோ நூசிபேரா (Coco nucifera) என்ற விஞ்ஞானப் பெயரைக் கொண்ட தென்னையானது தாளை இனத்தை சேர்ந்த ஒரு தாவரமாகும்.

இலங்கை உட்பட உலகின் பல நாடுகளில் காணப்படும் இத்தாவரத்தின் பிரதிபலனும் அதன் பயன்பாடும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. தென்னையானது மனிதனுக்கு பெரிதும் பயன்படுவதுடன் அதன் அனைத்து பாகங்களும் பயன்படுத்தப்படக்கூடியனவாகவும் உள்ளன.

அந்த வகையில் இலங்கையில் இப்பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்திட்டங்கள் இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படுகின்றன.

இலங்கை மக்களின் வாழ்விலும் பொருளாதாரத்திலும் அதிக செல்வாக்கு செலுத்தும் தென்னையானது இந்நாட்டில் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கினறது.

என்றாலும் இம்மரத்தின் தோற்றம் அல்லது பூர்வீகம் தொடர்பில் இரண்டு அபிராரயங்கள் காணப்படுகின்றன. ஒன்று இது மத்திய அமெரிக்காவில் தோற்றம் பெற்றது என்பதுமாகும். மற்றையது தென் கிழக்காசிய பிராந்தியத்தில் தோற்றம் பெற்றது என்பதாகும். என்றாலும் கடல் சிப்பந்திகளாலோ அல்லது கடலலை மூலமோ தென்னை இலங்கைக்குள் வந்து சேர்ந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இம்மரம் இந்நாட்டுக்குள் வந்து சேர்ந்திருந்தாலும் அது வெப்ப காலநிலை கொண்ட இலங்கையில் நீண்ட காலம் முதல் இங்கு காணப்படுவதற்கான சான்றுகள் உள்ளன.

இருப்பினும் தென்னை தொடர்பான வரலாறு இராவணனின் யுகம் வரை நீண்டு செல்கின்றது. அக்காலத்தில் தென்னையிலிருந்து "அர்க" என்ற பெயரில் இரசாயனப் பதார்த்தம் பெறப்பட்டதாக வரலாற்று கதைகள் கூறுகின்றன. சிங்கள பலி கவி வரலாறறில் குறிப்பிடப்பட்டுள்ள படி, தென்னையின் ஆரம்பம் அசுரர் யுத்தத்தில் துண்டிக்கப்பட்ட பிள்ளையாரின் தலையே தென்னையாக உருவானதாகக் கூறப்படுகிறது. விஜயனின் இலங்கை விஜயம் மற்றும் அது தொடர்பான பாரம்பரிய கதைகளின் படி, யாகத்திற்காக செவ்விளநீர் பாவிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. அதேபோன்று கதிர்காமம் கடவுளின் இரண்டாவது திருமணத்திற்கு வருகை தந்தவர்களுக்கு சுவையான பானமாக இளநீர் பரிமாறப்பட்டதாக (தெவோல்) கரகாட்ட நடனக் கவிதைளில் காணப்படுகின்றன.

வரலாற்றின் மூல ஊற்றாகக் கருதப்படுகின்ற புராணக் கதைகளில் துட்டகைமுனு அரசனின் (கி.மு. 161-137) காலப்பகுதியில் பெருவிருட்சம் என்ற பெயரில் அடையாளப்படுத்தப்பட்ட தென்னை மரத்திலிருந்து வெவ்வேறு விதமான பொருட்களும் தென்னஞ்சாராயமும் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆதாரங்களின் படி, இந்நாட்டில் தெங்கு செய்கை வீட்டுத்தோட்டச் செய்கையாக இருந்துள்ளது என்பது தெளிவாகிறது.

அநுராதபுர காலச் சிற்பங்களில் காணப்படுகின்ற அடிக்கற்களிலும் நுழைவாயில் வடிவங்களிலும் மங்கள கலசமும் தென்னம்பூவினால் அலங்கரிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதன்படி, தென்னம்பூ சுபீட்சத்தின் அடையாளமாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றது என நம்பலாம்.

என்றாலும் இலங்கையில் தெங்கு செய்கைக்கு அரசாங்க அனு'ரணை இரண்டாம் அக்போ மன்னரின் (கி.பி.545) காலத்தில் முதன் முறையாக அளிக்கப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் வெலிகம முதல் தெய்வேந்திர முனை வரையான மூன்று பிரதேசங்களில் இம்மன்னரினால் தெங்கு செய்கை மேற்கொள்ளப்பட்டதாக மகாவம்சம் தெரிவிக்கின்றது.

பொலன்னறுவை யுகத்தில் முதலாவது பராக்கிரமபாகு (கி.பி.1164-1197) மன்னரின் காலத்தில் அரச பூங்காக்களில் தெங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், தம்பதெனிய யுகத்தில் இரண்டாவது பராக்கிரமபாகு மன்னரினால் (கி.பி 1236-1271) களனி ரஜமகா விகாரைகளுக்கு தென்னங்காணியொன்று பூஜை செய்யப்பட்டதாகவும் அந்த மன்னரினால் களுத்துறை முதல் பெந்தோட்டை வரை தெங்கு செய்கையை மேற்கொள்ளவென தேவபத்திராஜ என்ற அமைச்சரொருவரை ஈடுபடுத்தியதாகவும் சூழ வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாலாவது பரக்கும்பா மன்னரின் காலத்தில் (14 ஆம் நூற்றாண்டு) கித்தகம (தற்போததைய தொட்டுகமுவ) பிரதேசத்தில் 5000 தென்னைகளைக் கொண்ட பூங்காவை உருவாக்கியதாகவும் சூலவம்சத்தில் காணப்படுகிறது.

இவை மாத்திரமல்லாமல், இலங்கைக்கு வருகை தந்த நாடுகாண் பயணிகளின் பதிவுகளிலும் இந்நாட்டில் தென்னைகள் காணப்பட்டதற்கான பல வரலாற்றுத் தகவல்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக கி. மு 300 களில் கிரேக்க அரச தூதுவரொருவர் இலங்கை ஊடாக மேற்கொண்ட விஜயத்தின் போது இலங்கையில் தெங்கு செய்கை காணப்பட்டதாக சந்திரகுப்த மன்னருக்கு தெரியப்படுத்தியுள்ளார். ரோம நாட்டு வரலாற்றாய்வாளரான எலியன் (கி.பி 2 நூற்றாண்டு), சீன நாடுகாண் பயணி பாகியன் (கி.பி.5 நூற்றாண்டு), பாரசீக நாட்டவரான சோபோட்டே (கி.பி 520) என்ற உல்லாச பயணி, மார்க்கோ போலோ (கி.பி 1300) என்ற நாடுகாண் பயணி, இப்னு பதூதா (கி.பி 1343) என்ற நாடுகாண் பயணி போன்றோரின் குறிப்புக்களிலும் இலங்கையில் தென்னைகள் காணப்பட்டதற்கான பதிவுகள் உள்ளன.

இலங்கை மக்களின் வாழ்வு தொடர்பான தகவல்களின் படி, பொலன்னறுவை யுகத்தில் தான் தேங்காய் உணவுக்காகக் பயன்படுத்தப்பட ஆரம்பமாகியுள்ளது. அதற்கு முன்னர் பசும்பாலை அடிப்படையாகக் கொண்ட ஐந்து வகை உணவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

என்றாலும் சிகிரியாவின் காசியப்பன் மன்னர் காலத்தில் தேங்காய்ப்பாலுடன் கூடிய பாற்சோறு பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் மகாவம்சத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மகா பரக்கும்பா மன்னரது காலத்தில் தேங்காய் எண்ணெய் பாவித்து விளக்கு ஏற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராசதானி தென்கிழக்குக்குப் புலம்பெயர்ந்ததும் மேய்ச்சல் தரை குறைவடைந்ததால் கால்நடை வளம் குறைவடைந்தததைத் தொடர்ந்து மக்கள் தேங்காய் பாவனைக்கு பழக்கப்பட்டனர். இதன் பாவனை எவ்வளவு தூரம் அதிகரித்தது என்றால் கண்டி யுகத்தின் இறுதிக் காலப்பகுதியில் தேங்காயின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசாரால் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இலங்கையை ஒல்லாந்தர் ஆட்சி செய்த காப்பகுதியில் தெங்கு செய்கைக்கு விஷேட இடமளிக்கப்பட்டது. அவர்கள் தென்பகுதி கரையோரப் பிரதேசங்களில் தெங்கு செய்கையை அபிவிருத்தி செய்து சாராயம் வடித்ததோடு, தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் செய்தனர் என்று வரலாற்று தகவல்கள் கூறுகின்றன. ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் முடிவுக்கு வரும் போது இந்நாட்டில் ஒரு இலட்சத்து 42 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு தெங்கு செய்கைகாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

அதனைத் பிரித்தானிய ஆட்சிக்காலத்திலும் தெங்கு செய்கைக்கு அதிக அனுசரணை வழங்கப்பட்டது. என்றாலும் ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் இலங்கையின் மேற்கு கரையோரம் முழுவதும் குறிப்பாக காலி முதல் புத்தளம் வரை தெங்கு செய்கை விஸ்தரிக்கப்பட்டது. இதன் விளைவாக 1940 களாகும் போது தெங்குச் செய்கைக்கு பொருத்தமான நிலம் முழுவதும் இப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ரேந்தை கைத்தொழில் மற்றும் மாட்டு வண்டி போக்குவரத்து சேவை மூலம் வருமானம் ஈட்டிவந்த உள்நாட்டவர்கள் தெங்கு செய்கையில் முதலீடு செய்வதற்கு 1840 இல் கொண்டு வரப்பட்ட தரிசு நிலச் சட்டத்தின் மூலம் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. இதன் ஊடாக ஈரவலயத்திலும் தெங்கு செய்கை மேம்பாடு அடைந்தது. தெங்கு கைத்தொழலின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து அதனுடன் தொடர்பான அரச நிறுவனங்களும் வளர்ச்சி அடையத் தொடங்கின.

கைத்தொழில் புரட்சியின் பிரதிபலன்கள் இலங்கைக்கும் கிடைக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து வெளிநாட்டு சந்தைகளுக்காக தெங்கு உற்பத்திகளைத் தயாரிக்கும் நடவடிக்கைககள் 19 ஆம் நூற்றாண்டில் ஆரம்பமாகியுள்ளன. 1862 இல் தெமட்டகொடவில் ஆரம்பிக்கப்பட்ட தெங்கு உற்பத்தி தொழிற்சாலை இதற்கு நல்ல உதாரணமாகும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் கொப்றா புத்தளத்திலிருந்து நீர்கொழும்பு ஊடாக அமைக்கப்பட்டுள்ள டச்சு காய்வாய் ஊடாக பாருகள் மூலம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அந்த கொப்றாவைப் பயன்படுத்தி கொழும்பில் அமைக்கப்பட்டிருந்த தேங்காய் எண்ணெய் ஆலைகளில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டு துறைமுகததின் ஊடாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஐரோப்பிய சந்தைக்கு தேங்காய் எண்ணெய் வழங்கிய நாடாக இலங்கை திகழ்ந்தது.

LAKE HOUSE
Concept & Design by
Advertising Supplements Department
: 0112 429 339, 0777 270 076
Coordinated by Mahesh Walalgoda



## 2022 சர்வதேச தெங்கு தினத்திற்கு இணையாக "கப்ருக அபிஷேக்க" சிறந்த தெங்கு பயிர்ச்செய்கையாளரின் தேர்வு

சர்வதேச தெங்குச் சமூகம் (INTERNATIONAL COCONUT COMMUNITY) நிறுவப்பட்டதையொட்டி ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 02 ஆம் திகதி சர்வதேச தெங்கு தினம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ICC அமைப்பு முன்னர் ஆசிய பசிபிக் தெங்கு சமூகம் எனும் ASIAN PASIPIC COCOCNUT COMMUNITY (APCC) என அழைக்கப்பட்டது. இது ஐக்கிய நாடுகளின் ஆசியாவுக்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் அனுசரணையின் கீழ் 1969 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த அமைப்புக்கு சொந்தமாக முக்கியமாக தெங்கு உற்பத்தி செய்கின்ற நாடுகளில் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் இடம்பெறுகின்றன.

ஐரோப்பியர்களுக்கு தெங்கு பெருந்தோட்டப் பயிர் என்றபோதும் இலங்கையர்களாகி எமக்கு அது அரிசிக்கு மாத்திரம் இரண்டாவதாகும் உணவுப் பயிராகும். இலங்கையர் ஒருவர் வருடத்திற்கு 97 தேங்காய் மற்றும் 5.7 லீற்றர் தேங்காய் எண்ணெயை உணவாகப் பெறுகிறார். அதன்மூலம் 22% அளவு சக்தியும், 22% அளவு புரதமும் பெரும் அளவான விட்டமின் மற்றும் உணவு நார்ச்சாத்துகளும் கிடைக்கும்.



கி.பி 604-664 இரண்டாவது அக்போ மன்னர் காலம் தொடக்கம் இலங்கை தீவில் தெங்குப் பயிர்ச்செய்கைக்காக அரச அனுசரணை கிடைத்திருப்பதாக வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. பண்டைய காலத்தில் தெற்கில் வெலிகமவில் ஆரம்பித்த தெங்குப் பயிர்ச்செய்கை தற்போது நாடு முழுவதும் 11 இலட்சம் ஏக்கர் அளவு பரந்துள்ளது. 2020-2021 ஆம் ஆண்டில் 3200 மில்லியன் தேங்காய் அளவான உச்ச தேங்காய் அறுவடை பதிவாகி இருப்பதோடு தெங்கு சார்ந்து உற்பத்திகள் ஏற்றுமதி மூலம் 835 அமெரிக்க டொலர்கள் வரை ஈட்டி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பு கிடைத்துள்ளது. அதேபோன்று கடந்த 10 ஆண்டுகளுக்குள் ஒட்டுமொத்த தெங்கு பயிர்ச் செய்கையின் முழு நிலப் பகுதி ஒரு இலட்சம் ஏக்கர் வரை அதிகரிப்பதற்கு முடியுமான ஒரே பெருந்தோட்டப் பயிராக தெங்கு பயிர்ச்செய்கையை குறிப்பிட முடியும். இதற்காக தென்னைப் பயிர்ச்செய்கை சபையும் தமது உச்ச பங்களிப்பை வழங்கியது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறோம்.

இலங்கையில் தெங்குப் பயிர்ச்செய்கை திட்டத்தின் முதன்மையான தென்னைப் பயிர்ச்செய்கை சபையும் 2022 ஆம் ஆண்டின் சர்வதேச தெங்கு தினத்தை ஒட்டி தென்னங்கன்று நடுதல், துறை தினம், திட்டப் பயிற்சி நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்துவதோடு இதன் பிரதான நிகழ்ச்சி ஒன்றாக கப்ருக அபிஷேக்க நிகழ்ச்சின் கீழ் நாடு முழுவதும் தெங்கு பயிர்ச்செய்கையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரி சிறந்த தெங்கு பயிர்ச்செய்கையாளரை தேர்வு செய்துள்ளது. இதன்போது, 1-2, 2-5, 5-20, 20-50 ஏக்கர் என பல பிரிவுகளின் கீழ் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பெறுமதி மிக்க பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த சான்றிதழ்கள் மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வு 2022 செப்டெம்பர் 02 ஆம் திகதி மு.ப. 8.30க்கு (காலி லபுதுவ) போபே, போத்தல பிரதேச செயலக அலுவலகத்தில் கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரண தலைமையில் இடம்பெறும்.

அதற்காக மேலும் பல விசேட பிரமுகர்கள் மற்றும் பயிர்ச்செய்கையாளர்கள் பலரும் பங்கேற்கின்றனர். இந்த நிகழ்வில் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் மூலம் வீட்டுப் பயிர்ச்செய்கைக்காக கலப்பு தென்னங்கன்றுகள் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் தெங்கு சார்ந்த தொழில்துறையாளர்களை ஊக்குவிப்பதற்காக தெங்கு சார்ந்த தொழில் துறைக்காக பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்களை பெற்றுக்கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இலங்கை முகம்கொடுத்திருக்கும் தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வாக முடியுமான வரை டொலர் ஈட்டுவதை மேற்கொள்ள வேண்டி இருப்பதால் முடியுமான வரை தெங்கு பயிர் அபிவிருத்தி மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவது எமது பெரும் பொறுப்பாக உள்ளது. அதற்காக உங்களதும் எமதும் பங்களிப்பை தெங்கு பயிர் அபிவிருத்திக்காக நாளைய தினத்திலும் வழங்குவோம்.

ஊடகப் பிரிவு,
தென்னைப் பயிர்ச்செய்கை சபை








இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 02ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

நுகர்வோர் சட்ட மீறல் வழக்குகள்

# வவுனியா மாவட்டத்தில் இதுவரை ரூ.16 இலட்சத்து 33 ஆயிரம் அபராதம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா மாவட்டத்தில் இவ்வருடம் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வழக்குகளில் 16 இலட்சத்து 33 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி அ.லெ.ஜெஃபர்ஷாதிக் தெரிவித்தார். வவுனியாவில் நுகர்வோர் சட்டத்தை மீறியமை தொடர்பாக வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் இவ்வருடத்தில் பல சுற்றிவளைப்புகளையும், சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தோம். இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் 322 வழக்குகள் பிடிக்கப்பட்டுள்ளதுடன் 292 வழக்குகள் பதியப்பட்டு 16,33,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த மாதம் 48 வழக்குகள் பிடிக்கப்பட்டு 37 வழக்குகள் பதியப்பட்டதுடன், 1,51,500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்குகளில் நுகர்வோர் சட்டத்தை மீறிய காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, விலைபத்திரத்தை காட்சிப்படுத்தாது பொருட்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்தமை, பொருட்களை பதுக்கி வைத்திருந்தமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காக தற்காலத்தில் அதிக வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

# 28 வருடங்களின் பின்னர் வசாவிளான் ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம்



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் வசாவிளான் தெற்கு ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை நடைபெற்றது. இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் 28 வருட காலமாகவிருந்த கோயிலை விடுக்குமாறு பல தரப்பினரிடமும் ஆலய பக்தர்கள் கோரிக்கைகள் விடுத்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி ஆலய பகுதியினை இராணுவத்தினர் விடுவித்து தமது உயர்பாதுகாப்பு வலய வேலியினை பின்நகர்த்தினார். அதனையடுத்து முற்றாக சேதமடைந்த ஆலயத்தினை மீள் நிர்மாணம் செய்வதற்குள் ஆலய பரிபாலன சபை முயற்சிகளை முன்னெடுத்து , உள்ளூர் மற்றும் புலம்பெயர்ந்தோர்களின் நிதி பங்களிப்பு , ஆதரவுடன் ஆலயத்தினை இராஜ கோபுரத்துடன் புனர்நிர்மாணம் செய்தனர். இந்நிலையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை 7.09 மணி முதல் 09.04 மணி வரையிலான கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## அறிவித்தல்
## Lanka Ventures PLC
(PQ 95)

### 30ஆம் வருடாந்த பொதுக் கூட்டம்

Lanka Ventures PLC யின் (‘‘கம்பனி”) முப்பதாவது (30வது) வருடாந்த பொதுக் கூட்டம் (“AGM”) 2022 செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி பி.ப. 2.45 மணிக்கு Virtual Platform ஊடாக Virtual Meeting நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கூட்டம் பற்றிய அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சி நிரல், Proxy from படிவம் மற்றும் பதிவு செய்வதற்கான படிவம் என்பவற்றிற்கு கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளத்தில் https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=LVEN.N0000 பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலை தயவு செய்து பார்க்கவும்.

வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க விரும்பும் பங்குதாரர்கள் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை மேற்படி இணைய இணைப்பிற்கு அணுகக்கூடிய வகையில் 2ஆம் தளம், ‘‘சயுருசெவன”, இல. 46/12, நவம் மாவத்தை, கொழும்பு-02 எனும் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அல்லது lankaventures.agm@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2022 செப்டெம்பர் 19ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

மேலும் 2022 மே 27ஆம் திகதி கொழும்புப் பங்குச் சந்தையினால் வழங்கப்பட்ட 04/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த அறிக்கையின் அச்சுப் பிரதிகள் இந்த வருடம் வழங்கப்படமாட்டாது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

மேற்குறிப்பிடப்பட்டவை பற்றி ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், தயவு செய்து பின்வரும் பணியாளர்களை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை தொடர்புகொள்ளவும்.

பெயர் : திருமதி. சகுனி அதிகாரம்
மின்னஞ்சல் : sakuni@lvlenergyfund.lk
தொலைபேசி : 011 2 439 201

பெயர் : திரு. ஜனித் மொஹொட்டி,
மின்னஞ்சல் : janith@lvlenergyfund.lk
தொலைபேசி : 011 2 439 201

பணிப்பாளர் சபையின் கட்டளையின் பிரகாரம்
Corporate Services (Private) Limited
செயலாளர்கள்

Lanka Ventures PLC.
2022.08.30ஆம் திகதியில்

## அறிவித்தல்
## LVL Energy Fund PLC
(PV1966PB/PQ)

### 11ஆம் வருடாந்த பொதுக் கூட்டம்

**LVL Energy Fund PLC** யின் (‘‘கம்பனி”) பதினோராவது (11வது) வருடாந்த பொதுக் கூட்டம் (“AGM”) 2022 செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு Virtual Platform ஊடாக Virtual Meeting நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கூட்டம் பற்றிய அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சி நிரல், Proxy from மற்றும் பதிவு செய்வதற்கான படிவம் என்பவற்றிற்கு கொழும்பு பங்குச் சந்தையின் இணையதளத்தில் https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=LVEF.N0000 பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலை தயவு செய்து பார்க்கவும்.

வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க விரும்பும் பங்குதாரர்கள் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவத்தை மேற்படி இணைய இணைப்பிற்கு அணுகக்கூடிய வகையில் 2ஆம் தளம், ‘‘சயுருசெவன”, இல. 46/12, நவம் மாவத்தை, கொழும்பு-02 எனும் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அல்லது lvlenergyfund.agm@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 2022 செப்டெம்பர் 19ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

மேலும் 2022 மே 27ஆம் திகதி கொழும்புப் பங்குச் சந்தையினால் வழங்கப்பட்ட 04/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த அறிக்கையின் அச்சுப் பிரதிகள் இந்த வருடம் வழங்கப்படமாட்டாது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

மேற்குறிப்பிடப்பட்டவை பற்றி ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், தயவு செய்து பின்வரும் பணியாளர்களை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை தொடர்புகொள்ளவும்.

பெயர் : திருமதி. சகுனி அதிகாரம்
மின்னஞ்சல் : sakuni@lvlenergyfund.lk
தொலைபேசி : 011 2 439 201

பெயர் : திரு. ஜனித் மொஹொட்டி,
மின்னஞ்சல் : janith@lvlenergyfund.lk
தொலைபேசி : 011 2 439 201

பணிப்பாளர் சபையின் கட்டளையின் பிரகாரம்
Corporate Services (Private) Limited
செயலாளர்கள்
LVL Energy Fund PLC.
2022.08.30 ஆம் திகதியில்

## வீதியில் சென்ற பெண்ணை தாக்கி சங்கிலி அறுப்பு

வீதியால் நடந்து சென்ற பெண்ணை தாக்கி, தள்ளி வீழ்த்திவிட்டு சங்கிலியை வழிப்பறி கொள்ளையர்கள் கொள்ளையடித்து சென்றுள்ளனர். வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கு அருகில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, உறவினர் ஒருவரின் அந்தியேட்டி கிரிகைக்கு சென்று, பஸ்சிலிருந்து வந்திறங்கி தனது வீடு நோக்கி வீதியால் அந்த பெண் நடந்து சென்று கொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிளொன்றில் வந்த வழிப்பறி கொள்ளையர்கள் பெண்ணின் சங்கிலியை அறுக்க முயன்றுள்ளனர்.

அதன் போது பெண் கொள்ளையர்களின் ஒருவரின் கையை பிடித்து இழுக்க முற்பட்ட வேளை , அப்பெண்ணை உதைத்து தள்ளி கீழே விழுத்தி விட்டு, பெண் அணிந்திருந்த 5 பவுண் சங்கிலியை அறுத்துக்கொண்டு அவ்விடத்தில் இருந்து தப்பியோடியுள்ளனர்.


## மீட்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் ஏல விற்பனை

01.03.2018ம் திகதியிலிருந்து 31.12.2021ம் திகதி வரை நேஷன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தின் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு 31.01.2022ம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது பற்றிய அறிக்கை.

**ஏலம் நடாத்தப்படும் திகதி :**
2022 செப்டெம்பர் 07

**நேரம் :** காலை 10.00

**ஏலம் நடாத்தப்படும் இடம் :**
நேஷன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி
தலைமை காரியாலயம்
இல.690, காலி வீதி, கொழும்பு 03.

ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி பிற்போடும் அல்லது நிறுத்தும் உரிமையை நேஷன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி நிறுவனம் பெற்றுள்ளது.

Nation Lanka Finance PLC

skillsads


**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**பெருந்தோட்ட அமைச்சு**
**சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட அபிவிருத்திப் பிரிவு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

### பெலவத்த சீனித் தொழிற்சாலையில் கொதிநீராவிச் சுழலிக்கான (Steam Turbine) சுழலியின் வழங்கலுக்கு சர்வதேச போட்டிரீதியான விலைமனு - PR-12132

இலங்கை, பெலவத்தவில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு கொதிநீராவிச் சுழலிக்கான (Steam Turbine) சுழலியின் வழங்கலுக்கு ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. கீழ் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பணம் அனுப்பும் வழி மூலம் 12,500.00 இலங்கை ரூபா அல்லது 35.00 அமெரிக்க டொலர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2022 ஒக்டோபர் 11 ஆம் திகதி வரை வேலை நாட்களில் இலங்கை நேரப்படி 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். விலைமனு ஆவணங்களை லங்கா சீனி இணையதளம் (www.lankasugar.lk) அல்லது பெருந்தோட்ட அமைச்சின் இணையதளம் (www.plantationindustries.gov.lk) அல்லது வெளிவிவகார அமைச்சின் இணையதளத்தில் (www.mfa.gov.lk) இருந்து தரவிறக்கம் செய்ய முடியும் என்பதோடு விலைமனுவுடன் சேர்த்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **விபரம்** | LKR வங்கி கணக்கு |
| **வங்கியின் பெயர்** | இலங்கை வங்கி |
| **கிளை** | மிலகிரிய |
| **கணக்கின் பெயர்** | வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் |
| **கணக்கு இலக்கம்** | 73927950 |
| **Swift Code** | BCEYLKLX |

2. தேவையான உருப்படிகள்:
   1. **கொதிநீராவிச் சுழலிக்கான (Steam Turbine) சுழலியின் வழங்கல் 01**
3. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
4. விலைமனுக்களை 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதி இலங்கை நேரப்படி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், கைகளால் கொண்டுவந்து சேர்ப்பதன் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பெலவத்த சீனித் தொழிற்சாலையின் கொதிநீராவிச் சுழலிக்கான (Steam Turbine) சுழலியின் வழங்கலுக்கான கேள்விமனு” என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
5. அனைத்து விலைமனுக்களும் 2022 டிசம்பர் 29 ஆம் திகதி வரை செல்லுபடியான 1,235.00 அமெரிக்க டொலர் அல்லது 450,000.00 இலங்கை ரூபாவின் பணமாக்கக்கூடிய திரும்பப் பெற முடியாத மற்றும் நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 77 010 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04,**
**இலங்கை**

**பெருந்தோட்ட அமைச்சு**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**

### தன்னியக்க இலத்திரனியல் தராசை (Electronic Tea Scals -Teawei) கொள்வனவு செய்வதற்காக விலைமனு கோரல்

**கேள்வி இல. SLSPC/HO/TEA WEIGHING SCALE-Midland/T-139/2022**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களில் பச்சை தேயிலைக் கொழுந்தை நிறுப்பதற்கு தன்னியக்க இலத்திரனியல் தராசை (Electronic Tea Scals -Teawei) கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆரம்பத்தில் ஒரு தோட்டத்திற்கு 04 தராசுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. தன்னியக்க இலத்திரனியல் தராசில் அடங்கியிருக்க வேண்டிய விபரக்குறிப்புகள் மற்றும் குணாம்சங்கள் பின்வருமாறாகும்.

**General Specifications**

| | |
|---|---|
| Max,Min | 60Kg , 2Kg |
| e=d | 100g |
| Power | 12V / 50Hz |
| Operation Conditions | 5.C-40.0 and < 80% RH |
| Battery Life | Approximately 6 hrs |
| Battery Type | Lithium Iron/3.6v 3AA 1500m Ah |
| Display | 2*LED Seven Segment Display With 4 Digits |

**Firmware Specifications**

| Firmware Name | Version Number | Year of Development |
|---|---|---|
| Ardunino | 4.0 | 2019 |

**Software Specifications**

| Software Name | Version Number | Year of Development |
|---|---|---|
| Ardunino IDE | 4.0 | 2019 |

இந்த தராசுகளில் விசேடமாக ஒரு விபரக்குறிப்பாக பச்சைத் தேயிலைக் கொழுந்தை நிறுக்கும்போது தராசில் காட்டும் நிறை மற்றும் விபரங்களை தொலைபேசி குறுஞ்செய்தியின் (SMS) ஊடாக அறிவிக்கும் மென்பொருளைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

குறித்த தராசுகளை மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள மிட்லண்ட் அரச தோட்டத்திற்கு போக்குவரத்து செய்வதற்குச் செலவாகும் போக்குவரத்துக் கட்டணத்தை விலைமனுப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 21, பீச்சீ வளவு, மீரானியா வீதி, கொழும்பு -12 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022.09.23ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் உள்ளிடுதல் வேண்டும். அல்லாவிடில் தலைவர், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 21, பீச்சீ வளவு, மீரானியா வீதி, கொழும்பு-12 எனும் முகவரிக்கு 2022.09.23ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைத் தாங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

2022.09.23ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இந்தக் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுக்களைச் சமர்ப்பித்துள்ள நீங்கள் கலந்துகொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்திற்குக் கிடைக்கப்பெறாத மற்றும் முழுமையற்ற விலைமனுக்கள் தொடர்பில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் பொறுப்புக் கூறாது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, பீச்சீ வளவு, மீரானியா வீதி, கொழும்பு 12.**
**தொலைபேசி: 011 5921465, 011 5921463.**

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**“BRANCH MAIL BAG SERVICES 2022-2023” ஒப்பந்தத்திற்கு விலைக்கோரல்**

**B/46/2022**

விலைமனு ஆவணத்தின் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் “BRANCH MAIL BAG SERVICES 2022-2023” ஒப்பந்தத்திற்கு தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை (ரூ. 892.86 + 12% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2022.09.22ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2022-09-23ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

தெளிவுபடுத்தல்கள் (ஏதேனும்) இருந்தால் பின்வரும் தொலைபேசி/தொலைநகல் இலக்கங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் தளம், இல: 609,**
**கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி: 011-5453335**

N-81

## பொருட் கொள்வனவு அறிவித்தல்

# அரசாங்க அச்சுத் திணைக்களம்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக் குழு தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதி நிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலை மனுக்களைக் கோருகின்றனர்.

| No. | Category | Qty. |
|---|---|---|
| 1. | Intence Black Rotary | 3000 kg |

விலைமனு ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம் 2022.09.22ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரையாகும்.

**விலைமனு குறிப்பு இல. SCP2/B.I.R./NCB36/2022-20**

மேற்குறிப்பிட்ட விலை மனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000/- கொண்டதும் அத்துடன் விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப் பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலை மனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்கள் கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மனி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பெறுகைக் குழு தலைவர்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,**
**கொழும்பு -08.**
2022.08.30
**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளம்: www.documents.gov.lk**

---

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

# இரசாயனப் பசளைக்கான விலைமனுக்கோரல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களுக்கு இரசாயனப் பசளையை வழங்குவதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பசளை வகை | தொன் ஒன்றிற்கான விலைமனுக்கள் |
|---|---|
| T-200 | |
| T-750 | |
| U-709 | |

விலைமனுக்கள் ஒரு தொன் இற்கான சமர்ப்பிக்க வேண்டியதுடன், விலைமனுக்கள் செல்லுபடியாகும் கால எல்லையை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2022.09.22 பி.ப. 01.00 இற்கு முன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல்/ பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

சகல விலைமனுக்களும் தலைவர், பெறுகைக்குழு, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெயரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அபெகூ தோட்டத்திற்கான பசளைகள் வழங்குதல்" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அன்றே (2022.09.02) திறத்தல் குழுவின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், ஏதேனும் விலைமனுக்களை அல்லது விலைமனுவின் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரம் இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீரானியா வீதி,**
**கொழும்பு-12.**

---

# ம/ப. முந்தல் மதுரங்குளி கூட்டுறவுச் சங்கம்

ம/ப முந்தல் மதுரங்குளி ப.நோ.கூ. சங்கத்தின் 2022/06/30ந் திகதிக்கான வாக்காளர் பெயர் பட்டியல் 2022/09/01 தொடக்கம் 2022/09/15ந் திகதி வரை கீழ்வரும் இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான முறைப்பாடுகள் இருப்பின் 2022/09/15 திகதிக்கு முன் சங்கத்தின் செயலாளருக்கு அறியத்தரவும்.

| | கிளை | | இடம் |
|---|---|---|---|
| 01. | மதுரங்குளி | - | கோப்சிடி விற்பனை நிலையம் |
| 02. | நவடன்குளம் | - | பிரதான காரியாலயம் |
| 03. | சமீரகம | - | பிரதான காரியாலயம் |
| 04. | தொடுவாவ | - | கிராமிய வங்கி |
| 05. | முந்தல் | - | கிராமிய வங்கி |
| 06. | விருதோடை | - | பிரதான காரியாலயம் |
| 07. | புழுதிவயல் | - | பிரதான காரியாலயம் |
| 08. | கடையாமோட்டை | - | கிராமிய வங்கி |
| 09. | நல்லாந்தழுவை | - | பிரதான காரியாலயம் |
| 10. | வேலாசிய | - | பிரதான காரியாலயம் |
| 11. | கிவுல கெலே | - | பிரதான காரியாலயம் |
| 12. | கட்டைக்காடு | - | பிரதான காரியாலயம் |
| 13. | ஆண்டிமுனை | - | கிராமிய வங்கி |
| 14. | ஒற்றப்பனை | - | பிரதான காரியாலயம் |
| 15. | கருங்காலிச்சோலை | - | கிராமிய வங்கி |
| 16. | சின்னப்பாடு | - | பிரதான காரியாலயம் |
| 18. | கொத்தாந்தீவு | - | கிராமிய வங்கி |

**செயலாளர்,**
**ம/ப, முந்தல் மதுரங்குளி கூட்டுறவுச் சங்கம்,**
**மதுரங்குளி.**
2022.08.05
032-2268009

---

## இலங்கை புகையிரத சேவைகள்

# பெறுகை அறிவித்தல்

# கழிக்கப்பட்ட இயந்திர எண்ணெய் மற்றும் வெற்று பீப்பாய்களை அப்புறப்படுத்துதல்

**SRS/F.7855**

01. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களப் பெறுகைக் குழுவின் (உயர் மட்டம்) தலைவர் இலங்கை புகையிரத சேவையின் பின்வரும் அமைவிடங்களில் உள்ள கழிக்கப்பட்ட இயந்திர எண்ணெய் மற்றும் வெற்று பீப்பாய்களை ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு அப்புறப்படுத்துவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார். விலைக்கோரலானது ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறாக அதிகூடிய மதிப்பீட்டில் கணிசமாக பதிலளிக்கக்கூடிய விலைக்கோரலுக்கு கையளிக்கப்படும்.

| | உருப்படி | ஆகக் குறைந்த அளவு (ஒரு வருடத்திற்கு) | அமைவிடங்கள் | | |
|---|---|---|---|---|---|
| 1 | வெற்று பீப்பாய்கள் (210 லீற்றர் பீப்பாய்கள்) | 300 | இரத்மலானை CEM's உப பிரிவு | தெமட்டகொட CEM's உப பிரிவு | மருதானை புகையிரத களஞ்சியம் |
| 2 | கழிக்கப்பட்ட இயந்திர எண்ணெய் | 10,000 லீற்றர்கள் | மருதானை மற்றும் இரத்மலானை புகையிரத களஞ்சியம் | | |

02. 2022-09-27ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுறும்.
03. 3500.00 ரூபா (மூவாயிரத்து ஐந்நூற ரூபா மட்டும்) மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்துவதன் பேரில் 2022-09-26ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 65,000.00 ரூபா (அறுபத்தையாயிரம் ரூபா) தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இலங்கை புகையிரத சேவைகளின் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் வைத்து, விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்தும் உடனடியாகவே அவை திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ கீழ்க் குறிப்பிடப்பட்டவருக்குக் கிடைக்கச்செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு, (உயர் மட்டம்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகம்,**
**ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

07. விலைமனு ஆவணங்களை கொழும்பு-10, புகையிரத சேவைகள் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து தொடர்புகொள்ளவும்.

**தொலைபேசி : 94 (11) 2438078 அல்லது 94 (11) 2436818**
**தொலைநகல் : 94 (11) 2432044**
**மின்னஞ்சல் : tender2@railway.gov.lk**
**இணையதளம் : www.railway.gov.lk**

Ref. No. SRS/F.7855

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்)**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## 48வது உள்ளக பட்டமளிப்பு விழா

# புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்வதற்காக தகுதி வாய்ந்த நிறுவனத்தை தெரிவுசெய்தல்

2022 ஒக்டோபர் மாதம் 21, 22 மற்றும் 23ஆம் திகதிகளில் பண்டாநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நிகழவுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 48வது வெளிவாரி பட்டமளிப்பு விழாவில் சுமார் 4000 பட்டதாரிகளை புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தல் வேலைக்காக தகைமை வாய்ந்த நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

1. இதற்காக தெரிவு செய்யப்படும் புகைப்படக் கலைஞர் / நிறுவனம் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அல்லது அதற்குச் சமமான விழாக்களில் புகைப்படமெடுத்தல் தொடர்பில் ஆகக்குறைந்தது 05 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் புகைப்படக் கலைஞர் / நிறுவனத்திற்கு பட்டதாரிகள் அசௌகரியப்படாத வகையில் முறையாக மற்றும் போதுமான அளவு புகைப்படங்களை எடுப்பதற்கு பட்டமளிப்பு விழா நடைபெறும் நாளில் பண்டாநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் பிரதான மண்டபத்திற்கு வெளியே ஆகக் குறைந்தது 10 புகைப்படமெடுக்கும் கூடாரங்களை வழங்குவதற்கான இயலுமை கட்டாயம் இருத்தல் வேண்டும்.
3. இதில் ஆர்வமுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்கள் வேலை நாட்களில் அலுவலக நேரத்தினுள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் / நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்) அவர்களிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் கேள்வி கோரல் படிவங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (தொலைபேசி இல. 011-2802856)
4. கேள்விப் படிவங்களை பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் கருமபீடத்திலிருந்து 2022-09-02ஆம் திகதி முதல் 2022-09-21ம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை மீளளிக்கப்படாத 1000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
5. இது தொடர்பான கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2022-09-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடத்திலுள்ள பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளுதல் கட்டாயமாகும்.
6. அனைத்து விண்ணப்பதாரர்களும் கேள்விகளைச் சமர்ப்பிக்கும் போது 25,000.00 ரூபா மீளளிக்கப்படும் வைப்புத் தொகையொன்றை பல்கலைக்கழகத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.
7. இரு நகல்களில் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை மாதிரிகளுடன் 2022-09-22ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கேள்விப் படிவங்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் தனியொரு உறையில் இட்டு அந்த மூன்று உறைகளின் இடதுபக்க மேல் மூலைகளிலும் ''48 வது வெளிவாரி பட்டமளிப்பு விழாவில் புகைப்படமெடுத்தல் - 2022'' எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்து உதவிப் பதிவாளர் / நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில, நுகேகொடை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் / நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
8. நகல் பிரதியானது மூலப் பிரதியின் சான்றுப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதியாகவிருத்தல் வேண்டும்.
9. 2022-09-22ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இவ்வேளையில் கலந்து கொள்ளலாம்.
10. முழுமையற்ற மற்றும் பிந்திக் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. தாமதம் தொடர்பில் தபாலில் அனுப்பப்பட்டத்தை உறுதி செய்யும் சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பதிவாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில,**
**நுகேகொடை.**
2022-08-31.

---

# எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி
# பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 434, ஈ.டபிள்யு.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 149, கே பி கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 03/10/17/25 | அக்டோபர் 2022 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 04/11/18/26 | அக்டோபர் 2022 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 69, தெஹிவளை வீதி, மஹாரகம. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹாரகம |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 05/12/19/27 | அக்டோபர் 2022 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 55, லோவர் வீதி, பதுளை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 230, கண்டி வீத, மாவனல்ல. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 367/1, அளுத் மாவத்தை, கொழும்பு 15. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | பிரதான வீதி, திருக்கோவில் - 01 |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | பிரதான வீதி, பொத்துவில். |
| 06/13/20/28 | அக்டோபர் 2022 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | பிரதான வீதி கிரண். |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 114, பிரதான வீதி, கந்தளாய். |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர். |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 10, பருத்தித்துரை வீதி, நெல்லியடி. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | P.W வீதி, முல்லைத்தீவு. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | பிரதான வீதி, மல்லாவி |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல 3, 5 வல்லை வூதி சங்கானை. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை. |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | இல 06, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 07/14/21/29 | அக்டோபர் 2022 | கண்டி வீதி, கொடிகாமம். |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ ஃபினான்ஸ் பி.எல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

**LB FINANCE**
தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

ஹொங்கொங்கை வீழ்த்தியது இந்தியா:

# இந்திய–பாக். இடையே ஞாயிறன்று மற்றொரு பலப்பரீட்சைக்கு வாய்ப்பு



ஹொங்கொங் அணிக்கு எதிரான ஆசிய கிண்ண குழுநிலைப் போட்டியில் 40 ஓட்டங்களால் வெற்றியீட்டிய இந்திய அணி பி குழுவில் முதல் அணியாக சுப்பர் போர் சுற்றுக்கு முன்னெறியுள்ளது.

இதன்மூலம் வரும் ஞாயிற்றுக்கிழமை (4) இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதும் மற்றொரு போட்டி நடைபெறும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

பி குழுவில் பாகிஸ்தான் மற்றும் ஹொங்கொங் அணிகள் விளையாடும் ஆட்டம் இன்று (2) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் பாகிஸ்தான் அணி வென்றால் அது சுப்பர் போர் சுற்றுக்கு இரண்டாவது அணியாக முன்னேறும். இதன்படி சுப்பர் போர் சுற்றில் பி குழுவில் முதல் இரு இடங்களைப் பிடித்த அணிகள் ஆடும் ஆட்டமே வரும் ஞாயிறன்று நடைபெறவுள்ளது.

இதேவேளை டுபாயில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இந்தியா 20 ஓவர்களுக்கும் 2 விக்கெட்டுகளை இழந்து 192 ஓட்டங்களை பெற்றது.

அதிரடியாக ஆடிய சூரியகுமார் யாதவ் 26 பந்துகளில் 6 பௌண்டரி மற்றும் 6 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களை பெற்றதோடு விராட் கொஹ்லி ஆட்டமிழக்காது 59 ஓட்டங்களை குவித்தார். இதன்மூலம் டி20இல் 31 அரைச்சதங்களை பெற்ற கொஹ்லி அதிக அரைச் சதங்கள் சாதனையை அணித்தலைவர் ரோஹித் ஷர்மாவுடன் பகிர்ந்துகொண்டார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய ஹொங்கொங் அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களையே பெற்றது.

# இலங்கை இளையோர் அணிக்கு இங்கிலாந்தில் தொடர் வெற்றி



இலங்கை மற்றும் இங்கிலாந்து 19 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான இரண்டாவது இளையோர் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்ததை அடுத்து இந்த டெஸ்ட் தொடரை இலங்கை இளையோர் அணி 1–0 என கைப்பற்றியது.

டெர்பியில் நடைபெற்ற இரண்டாவது இளையோர் டெஸ்டில் 480 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் கடந்த புதன்கிழமை கடைசி நாள் ஆட்டத்தை ஆரம்பித்த இலங்கை இளையோர் அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 542 ஓட்டங்களை பெற்றது.

இலங்கை அணி சார்பில் ஷெவோன் டானியல் (155) அபார சதம் ஒன்றை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 161 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற நிலையிலேயே இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. கடைசி நாள் ஆட்டநேர முடிவின்போது இங்கிலாந்து இளையோர் அணி 5 விக்கெட்டுகளை இழந்து 249 ஓட்டங்களை பெற்றது.

எனினும் இலங்கை இளையோர்கள் இந்த டெஸ்ட் தொடரில் திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி நம்பிக்கை அளித்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து மண்ணில் இலங்கை இளையோர் தொடர்ச்சியாகப் பெறும் இரண்டாவது இளையோர் டெஸ்ட் தொடர் வெற்றி இதுவாகும். கடைசியாக 2016 ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற இலங்கை இளையோர் அணி அப்போதும் டெஸ்ட் தொடரை 1–0 என கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.


44th OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

**44th OBSERVER SLT- MOBITEL**

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் **OBSERVER SLT- MOBITEL** மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ....................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ....................
வாக்களித்தவர் பெயர் : ....................
முகவரி : ....................
மொபைல் இல. : ....................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500 2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**நிபந்தனைகள்:**

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 03-09-2022 இல. 23





# இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு அபராதம்



ஆசியக் கிண்ணப் போட்டியில் ஓவர்களை வீச கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டகாரணத்துக்காகஇந்தியாமற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு அணிகளுக்கும்; அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆசியக் கிண்ணப் போட்டியில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானை 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

டுபாயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு அணிகளும் குறிப்பிட்ட நேரத்தில் பந்துவீசி முடிக்க தவறியது.

இதன்படி வீரர்கள் மற்றும் வீரர்களின் உதவியாளர்களுக்கான ஐ.சி.சி ஒழுக்க விதிகளின் 2.22 ஷரத்தின் பிரகாரம் இரண்டு அணிகளுக்கும் போட்டி கட்டணத்தில் தலா 20 வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு அணித் தலைவர்களும் குற்றங்களை ஒப்புக்கொண்டதால் விசாரணைக்கு அவசியம் ஏற்படவில்லை.

# டி20 உலகக் கிண்ணம்: ஆஸி. குழாம் அறிவிப்பு



தனது சொந்த மண்ணில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண டி20 போட்டிக்கான குழாத்தை நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியா வெளிட்டுள்ளது.

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணப் போட்டிக்கு கடைசியாக நடந்த உலகக் கிண்ணத்தை வென்ற ஆரோன் பின்ச் தலைமையிலான அதே அணியே பாரிய மாற்றங்களின்றி இம்முறையும் தேர்வ செய்யப்பட்டுள்ளது.

எனினும் கடந்த உலகக் கிண்ணத் தொடரில் ஆடிய சகலதுறை வீரர் மிச்செல் ஸ்வெப்ஸனிக்கு இம்முறை ஓய்வு வழங்கப்பட, அதிரடி துடுப்பாட்ட வீரரான டிம் டேவிட் 15 பேர் கொண்ட குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிங்கப்பூரில் பிறந்த டிம் டேவிட், சிங்கப்பூரின் தேசிய கிரிக்கெட் அணிக்காக 14 டி20 போட்டிகளில் விளையாடி; 558 ஓட்டங்களை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# சின்ஜியாங்கில் சீனா மனித உரிமை மீறல்; ஐ.நா அறிக்கையில் குற்றச்சாட்டு




ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பிரிவுத் தலைவர் மிஷெல் பேஷ்லே, சீனாவின் சின்ஜியாங் வட்டாரம் குறித்து அதிகம் எதிர்பார்க்கப்பட்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

உய்குர் இனத்தவருக்கும் மற்ற முஸ்லிம் சிறுபான்மையினருக்கும் எதிராகக் கடுமையான மனித உரிமை மீறல்கள் நடந்திருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனித இனத்துக்கு எதிரான சாதியமான குற்றங்கள் புரியப்பட்டிருக்கக்கூடும் என்று ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது.

ஆதாரமின்றித் தடுத்துவைக்கப்பட்டிருப்போரை விடுவிக்கச் சீனா தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அறிக்கை பரிந்துரைக்கிறது.

அந்த அறிக்கை வெளியிடப்படுவதை விரும்பவில்லை என்று ஏற்கனவே சீனா பேஷ்லேயிடம் கூறியிருந்தது.

சின்ஜியாங்கில் அத்துமீறல்கள் நடந்ததாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளைச் சீனா மறுக்கிறது.

மனிதர்களை வலுக்கட்டாயமாக வேலையில் ஈடுபடுத்துதல், ஒரு மில்லியனுக்கும் அதிகமான உய்குர் முஸ்லிம்களைத் தடுத்துவைத்தல் முதலியவை அந்தக் குற்றச்சாட்டுகளில் சிலவாகும்.

சீனா இனப்படுகொலையில் ஈடுபட்டதாக அமெரிக்கா சாடியது. ஆனால் தனது முன்னேற்றத்தைத் தடுக்கவே மேற்கத்திய நாடுகள் அத்தகைய நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக சீனா கூறுகிறது.

# ஐரோப்பாவில் எரிசக்தி நெருக்கடி



ஐரோப்பாவின் எரிசக்திக் கட்டமைப்பு மேலும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. முக்கிய விநியோகப் பாதை வழியாக அனுப்பப்படும் எரிவாயுவை ரஷ்யா நிறுத்தியதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

மூன்று நாளாகத் தடை செய்யப்பட்டுள்ள விநியோகம் மேலும் நீடிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

விதிக்கப்பட்டுள்ள தடைகள் குறித்த குழப்பமே அதற்குக் காரணம் என்று ரஷ்யாவின் அரசாங்க நிறுவனமான காஸ்பிரோம் கூறியது.

அதனால் சாதனங்களைப் பராமரிக்கும் வழக்கமான பணிகளை மேற்கொள்ள முடியவில்லை என்று அந்நிறுவனம் குறிப்பிட்டது.

ரஷ்யா எரிசக்தி விநியோகத்தைக் கொண்டு மிரட்டுகிறது என்றும் தற்போதைய நிறுத்தம் ஓர் அரசியல் நாடகம் என்றும் ஜெர்மனி குறிப்பிட்டது.

# தாய்வான் ஜனாதிபதியுடன் அமெ. செனட்டர் சந்திப்பு



தாய்வானுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினரான செனட்டர் மார்ஷா பிளக்பேர்ன் அந்நாட்டு ஜனாதிபதி சாய் இங் வெனை சந்தித்து இரு நாட்டு உறவுகள் மற்றும் பிராந்திய நிலவரம் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

அமெரிக்க அதிகாரிகளின் தொடரான உயர் மட்ட விஜயங்களைத் தொடர்ந்து தாய்வான் நீரிணையில் இராணுவப் பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் தாய்வானுக்கு விஜயம் செய்துள்ள செனட்டர் பிளக்பேர்ன் அந்நாட்டு ஜனாதிபதியை சந்தித்து இக்கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்கப் பாராளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி குடியரசு கட்சி செனேட்டர்கள் 25 பேருடன் தாய்வானுக்கு விஜயம் செய்த பின்னர் இவரது விஜயம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 2ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.